யோபுடைய சரித்திரம்

நல்ல மனிதனாகிய யோபு

1 ஊத்ஸ் என்னும் நாட்டில் யோபு என்னும்
பெயருள்ள மனிதன் வாழ்ந்து வந்தான்.
யோபு நல்லவனும் உண்மையுள்ள மனித
னுமாக இருந்தான். தேவனுக்கு பயந்து
தீயக் காரியங்களைச்செய்ய மறுத்தான்.
2யோபுவுக்கு ஏழு மகன்களும் மூன்று
மகள்களும் இருந்தனர். 3யோபுவுக்கு 7,000
ஆடுகளும், 3,000 ஒட்டகங்களும், 1,000
காளைகளும், 500 பெண் கழுதைகளும்
இருந்தன. அவனிடம் வேலையாட்கள் பலர்
இருந்தனர். கிழக்குப் பகுதியில் யோபுவே
பெரிய செல்வந்தனாக இருந்தான்.

4யோபுவின் மகன்கள் ஒருவருக்குப் பின்
ஒருவராகத் தங்கள் வீடுகளில் விருந்து
வைத்து, அவர்களின் சகோதரிகளை
அழைப்பது வழக்கம். 5அவனது பிள்ளை
களின் விருந்து முடிந்தப்பின் யோபு அதி
காலையில் எழுந்தான். ஒவ்வொரு பிள்ளைக்
காகவும் அவன் தகனபலியை அளித்தான்.
அவன், "என் பிள்ளைகள் கவலையீனமாக
இருந்து, விருந்தின்போது தேவனுக்கெதிராக
தங்கள் இருதயங்களில் தூஷிப்பதினால்
பாவம் செய்திருக்கக் கூடும்" என்று
எண்ணினான். அவனது பிள்ளைகள்
பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறும்படி
யாக யோபு எப்போதும் இவ்வாறு
செய்தான்.

6தேவதூதர்கள்* கர்த்தரைச் சந்திக்கும்
நாள் வந்தது. சாத்தானும் தேவதூதர்களோடு
வந்தான். 7கர்த்தர் சாத்தானிடம், "நீ எங்
கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார்.

சாத்தான் கர்த்தரை நோக்கி, "நான்
பூமியைச் சுற்றிப்பார்த்து வந்தேன்"
என்றான்.
8அப்போது கர்த்தர் சாத்தானிடம், "நீ
எனது தாசனாகிய யோபுவைக் கண்டாயா?
பூமியில் அவனைப் போன்றோர் எவரு
மில்லை. யோபு உத்தமனும் உண்மையுள்ள
வனுமாயிருக்கிறான். அவன் தேவனுக்கு
பயந்து தீயவற்றை விட்டு விலகியிருக்
கிறான்" என்றார்.

9சாத்தான், "ஆம்! ஆனால் யோபு
தேவனுக்குப் பயப்படுவதற்கு தக்க காரணங்
கள் உள்ளன! 10நீர் எப்போதும் அவனையும்,
அவனது குடும்பத்தையும், அவனுக்கிருக்கும்
எல்லாவற்றையும் வேலியடைத்துப் பாது
காக்கிறீர். அவன் செய்கின்ற எல்லாவற்
றிலும் அவனை வெற்றி காணச்செய்தீர்.
ஆம். நீர் அவனை ஆசீர்வதித்திருக்கிறீர். நாடு
முழுவதும் அவனது மந்தைகளும்
விலங்குகளும் பெருகி, அவன் மிகுந்த
செல்வந்தனாக இருக்கிறான். 11ஆனால்
அவனுக்கிருப்பவை அனைத்தையும் நீர்
உமது கையை நீட்டி அழித்துவிட்டால் உம்
முகத்திற்கு நேராக உம்மை அவன்
சபிப்பான் என்று உறுதியளிக்கிறேன்"
என்று பதிலளித்தான்.

12கர்த்தர் சாத்தானிடம், "அப்படியே ஆகட்
டும். யோபுக்குச் சொந்தமான பொருள்களின்
மேல் உன் விருப்பப்படி எது வேண்டு
மானாலும் செய். ஆனால் அவன் உடம்பைத்
துன்புறுத்தாதே" என்றார்.

பின்பு சாத்தான் கர்த்தருடைய சந்நிதியை
விட்டுச் சென்று விட்டான்.

யோபு எல்லாவற்றையும் இழக்கிறான்

13ஒருநாள், மூத்த சகோதரனின் வீட்டில்
யோபுவின் மகன்களும், மகள்களும் உண்டு,
திராட்சைரசம் அருந்திக்கொண்டிருந்தார்கள்.
14அப்போது ஒருவன் யோபுவிடம் வந்து,
"காளைகள் உழுதுக்கொண்டிருந்தன, கழு
தைகள் அருகே புல் மேய்ந்துக்கொண்டி
ருந்தன. 15ஆனால் சபேயர் எங்களைத் தாக்கி
விட்டு உமது மிருகங்களை கவர்ந்துக்
கொண்டார்கள்! சபேயர்* என்னைத் தவிர
எல்லா வேலையாட்களையும் கொன்று
விட்டார்கள். உம்மிடம் சொல்லும்படியாக
தப்பிவர முடிந்தவன் நான் மட்டுமே!" எனச்
செய்தியைக் கூறினான்.

16அவன் இதனைக் கூறிக்கொண்டிருக்கும்
போது மற்றொருவன் யோபுவிடம் வந்தான்.
இரண்டாம் ஆள், "வானிலிருந்து மின்னல்
மின்னி உமது ஆடுகளையும் வேலையாட்
களையும் எரித்துவிட்டது. நான் ஒருவன்
மட்டுமே தப்பினேன். உமக்கு அந்தச்
செய்தியை கூறும் படியாக வந்தேன்!"
எனக் கூறினான்.

தேவதூதர்கள் "தேவகுமாரர்கள்" எனப் பொருள்படும்.

சபேயர் பாலைவனப்பகுதியைச் சார்ந்த ஜனங்கள். அவர்கள் ஜனங்களைத் தாக்கி, அவர்களின் பொருள்களைக் கவர்ந்து செல்வார்கள்.

[17]அந்த ஆள் இவ்வாறு சொல்லிக்கொண்
டிருக்கும்போதே, இன்னொருவன் வந்தான்.
இந்த மூன்றாவது ஆள், "கல்தேயர் மூன்று
குழுக்களை அனுப்பி, எங்களைத் தாக்கி,
ஒட்டகங்களைக் கவர்ந்து சென்றுவிட்டார்
கள்! அவர்கள் வேலையாட்களையும்
கொன்றுவிட்டார்கள். நான் மட்டுமே தப்பி
னேன் இந்தச் செய்தியை உமக்குச் சொல்
லும்படியாக வந்தேன்!" என்றுச் சொன்
னான்.
[18]மூன்றாம் ஆள் பேசிக்கொண்டிருக்கும்
போதே, மற்றும் ஒருவன் வந்தான். நான்
காவது ஆள், "உமது மகன்களும் மகள்களும்
மூத்த சகோதரனின் வீட்டில் உண்டு,
திராட்சைரசம் பருகிக்கொண்டிருந்தார்கள்.
[19]அப்போது ஒரு பலத்தக் காற்று பாலை
வனத்திலிருந்து வீசி, வீட்டை அழித்தது,
உமது மகன்களின் மீதும், மகள்களின் மீதும்
வீடு வீழ்ந்ததால், அவர்கள் மரித்துப்
போனார்கள். நான் ஒருவன் மட்டுமே
தப்பித்தேன். எனவே உம்மிடம் இந்த
செய்தியை தெரிவிக்க வந்தேன்!" என்றான்.
[20]யோபு இதைக் கேட்டபோது, அவனது
துக்கத்தை வெளிப்படுத்தும் பொருட்டு
ஆடைகளைக் கிழித்துக்கொண்டான், தலை
யை மழித்துவிட்டான். பின்பு யோபு தரை
யில் விழுந்து, தேவனை ஆராதித்தான்.
[21]"நான் இந்த உலகத்தில் பிறந்தபோது
நிர்வாணமாக இருந்தேன், என்னிடம் எது
வும் இருக்கவில்லை. நான் மரித்து இந்த
உலகை விட்டு நீங்கிச் செல்லும்போது,
நான் நிர்வாணமாக எதுவுமின்றி செல்லு
வேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர்
எடுத்துக்கொண்டார். கர்த்தருடைய நாமத்
தைத் துதியுங்கள்!" என்றான்.
[22]இவையெல்லாம் நிகழ்ந்தாலும், யோபு
பாவம் செய்யவில்லை. தேவன் தவறு
செய்திருந்தார் என்று யோபு குறை சொல்ல
வுமில்லை.

சாத்தான் யோபுவுக்கு மீண்டும் தொல்லைத் தருகிறான்

2 மற்றொருநாள், தேவதூதர்கள் கர்த்தரைச்
சந்திக்க வந்தார்கள். சாத்தானும் கர்த்
தரைச் சந்திப்பதற்காக வந்தான். [2]கர்த்தர்
சாத்தானிடம், "நீ எங்கிருந்து வருகின்றாய்?"
என்று கேட்டார்.

சாத்தான் கர்த்தருக்கு, "நான் பூமியெங்கும்
சுற்றித் திரிந்துக்கொண்டிருந்தேன்" என்று
பதில் கூறினான்.
[3]அப்போது கர்த்தர் சாத்தானை நோக்கி,
"என் தாசனாகிய யோபுவைக் கண்டாயா?
பூமியில் அவனைப் போன்றோர் எவரு
மில்லை. அவன் உண்மையுள்ளவனுமாயிருக்
கிறான். அவன் தேவனுக்கு பயந்து தீய
வற்றைவிட்டு விலகுகிறான். எக்காரணமு
மின்றி அவனுக்குள்ளவை அனைத்தையும்
அழிக்கும்படி நீ கேட்டும் கூட, அவன்
இன்னும் உண்மையுள்ளவனாக இருக்
கிறான்" என்றார்.
[4]சாத்தான், "தோலுக்குத் தோல்!* என்று
பதில் சொன்னான். ஒருவன் தான் உயிரை
காப்பதற்காக தன்னிடமுள்ள எல்லாவற்
றையும் கொடுப்பான். [5]அவனது உடம்பைத்
துன்புறுத்தும்படி நீர் உமது கையை
நீட்டுவீரானால், அப்போது உமது முகத்
திற்கு நேராக அவன் உம்மைச் சபிப்
பான்!"* என்றான்.
[6]அப்போது கர்த்தர் சாத்தானைப் பார்த்து,
"அது சரி, யோபு உன் ஆற்றலுக்குக்
கீழ்ப்பட்டிருக்கிறான். ஆனால் அவனைக்
கொல்வதற்கு மட்டும் உனக்கு அனுமதி
யில்லை" என்றார்.
[7]பின்பு சாத்தான் கர்த்தரிடமிருந்து
சென்று, யோபுவுக்கு வேதனைமிக்க புண்
களைக் கொடுத்தான். அவனது பாதங்களின்
அடிப்பகுதியிலிருந்து தலையின் உச்சி
வரைக்கும் வேதனை தரும் அப்புண்கள்
யோபுவின் உடலெங்கும் காணப்பட்டன.
[8]எனவே யோபு குப்பைக் குவியலின்
அருகே உட்கார்ந்தான். அவனது புண்
களைச் சுரண்டுவதற்கு உடைந்த மண்
பாண்டத்தின் ஒரு துண்டைப் பயன்
படுத்தினான். [9]யோபுவின் மனைவி அவனை
நோக்கி, "நீ இன்னும் தேவனுக்கு உண்மை
யுள்ளவனாய் இருக்கிறாயா? நீர் தேவனைச்
சபித்த வண்ணம் மரித்துவிடு?" என்று
கேட்டாள்.
[10]பிறகு யோபு தனது மனைவியிடம்,
"நீ மூடத்தனமானவளைப் போலப் பேசு
கிறாய்! தேவன் நல்லவற்றைக் கொடுக்கும்
போது, நாம் அவற்றை ஏற்கிறோம். எனவே
நாம் தொல்லைகளையும் ஏற்கவேண்டும்,
முறையிடக்கூடாது" என்று பதில் தந்தான்.
எல்லாத் தொல்லைகளின்போதும் யோபு
பாவம் செய்யவில்லை. அவன் தேவனுக்கு
எதிராக எதுவும் பேசவில்லை.

யோபுவின் மூன்று நண்பர்கள் அவனைக் காண வருகிறார்கள்

[11]தேமானிலிருந்து எலிப்பாசும், சூகியி
லிருந்து பில்தாதும், நாகமாவிலிருந்து சோப்
பாரும் யோபுவின் மூன்று நண்பர்கள்.
யோபுவுக்கு நேரிட்ட எல்லா தீயகாரியங்
களைபற்றி கேள்விப்பட்டார்கள். அம்மூவ
ரும் தங்கள் வீடுகளிலிருந்து புறப்பட்டு
ஓரிடத்தில் சந்தித்தார்கள். அவர்கள் அவனி
டம் போய், தாங்கள் அனுதாபத்தைத்
தெரிவிக்கவும் ஆறுதல் கூறவும் முடிவெடுத்
தார்கள் (தீர்மானித்தார்கள்). [12]ஆனால் அம்

தோலுக்குத் தோல் இதற்கு ஒருவன் வலியைத் தவிர்க்க எதைவேண்டுமானாலும் செய்வான் என்ப் பொருள்படும்.

சபிப்பான் பிறருக்குத் தீமை நேரிடும்படி கேட்பது.

மூவரும் யோபுவைத் தூரத்தில் கண்ட
போது, (அவன் யோபுவா என ஐயுற்றார்
கள்) யோபு மிகவும் வித்தியாசமாகக்
காணப்பட்டதால், அவன் யோபு என
நம்புவது சிரமமாக இருந்தது! அவர்கள்
சத்தமிட்டு அழுதார்கள். அவர்கள் தங்கள்
ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்கள், துக
ளைக் காற்றிலும் தலையிலும் வீசியெறிந்து,
தங்கள் துக்கத்தையும் மனக்கலக்கத்தையும்
வெளிப்படுத்தினார்கள். 13பின்பு அந்த
மூன்று நண்பர்களும் யோபுவோடு தரையில்
ஏழு பகல்களும் ஏழு இரவுகளும் அமர்ந்திருந்
தார்கள். யோபு மிகவும் துன்புற்றுக்கொண்டி
ருந்ததால், ஒருவரும் யோபுவோடு எதையும்
பேசவில்லை.

யோபு தான் பிறந்தநாளைச் சபிக்கிறான்

3 பின்பு யோபு தன் வாயைத்திறந்து தான்
பிறந்தநாளைச் சபித்தான்.
2-3அவன், "நான் பிறந்தநாள் என்றென்றும்
இராதபடி அழிக்கப்படட்டும் என நான்
விரும்புகிறேன். 'அது ஒரு ஆண்' என
அவர்கள் கூறிய இரவு, என்றும் இருந்
திருக்கக் கூடாதென நான் விரும்புகிறேன்!
4அந்நாள் இருண்டு போக விரும்பு
கிறேன். அந்நாளைத் தேவன் மறக்க வேண்டு
மென விரும்புகிறேன். அந்நாளில் ஒளி
பிரகாசித்திருக்கக் கூடாதென விரும்பு
கிறேன்.
5மரணம் எவ்வளவு இருட்டோ
அதுபோல், அந்நாள் அவ்வளவு இருளா
யிருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.
இருண்ட மேகங்கள் அந்நாளை மறைக்கட்டு
மெனவும், நான் பிறந்தநாளிலிருந்த இருண்ட
மேகங்கள் ஒளியை அச்சுறுத்தட்டும் எனவும்
நான் விரும்புகிறேன்.
6இருள் நான் பிறந்த அந்த இரவை
ஆக்கிரமிக்கட்டும். நாள்காட்டியிலிருந்து
அந்த இரவு நீக்கப்படட்டும். எந்த மாதத்
திலும் அந்த இரவைச் சேர்க்கவேண்டாம்.
7அந்த இரவு எதையும் விளைவிக்கா
திருக்கட்டும். அவ்விரவில் மகிழ்ச்சியான
எந்த ஒலியும் கேளாதிருக்கட்டும்.
8சில மந்திரவாதிகள் லிவியாதானை*
எழுப்ப விரும்புகிறார்கள். அவர்கள் சாபங்
கள் இடட்டும் நான் பிறந்தநாளை அவர்கள்
சபிக்கட்டும்.
9அந்நாளின் விடிவெள்ளி இருளாகட்டும்.
அந்த இரவு விடியலின் ஒளிக்காகக் காத்
திருக்கட்டும், ஆனால் அந்த ஒளி ஒருபோதும்
வராதிருக்கட்டும் சூரியனின் முதல் கதிர்
களை அது பார்க்காதிருக்கட்டும்.
10ஏனெனில், அந்த இரவு நான்
பிறப்பதைத் தடைசெய்யவில்லை. இத்
தொல்லைகளை நான் காணாதிருக்கும்படி,
அந்த இரவு என்னைத் தடை செய்ய
வில்லை.
11நான் பிறந்தபோதே ஏன் மரிக்கவில்லை?
நான் ஏன் பிறப்பில் மடியவில்லை?
12ஏன் என் தாய் என்னை அவளது
முழங்காலில் தாங்கிக்கொண்டாள்? ஏன்
என் தாயின் மார்புகள் எனக்குப் பாலூட்
டின?
13-14நான் பிறந்தபோதே மரித்திருந்தால்,
இப்போது சமாதானத்தோடு இருந்திருப்பேன்.
முற்காலத்தில் பூமியில் வாழ்ந்த அரசர்
களோடும் ஞானிகளோடும் நான் உறக்கமாகி
ஓய்வுக்கொண்டிருக்க விரும்புகிறேன். இப்
போது அழிக்கப்பட்டுக் காணாமற்போன
இடங்களைத் தங்களுக்காக அவர்கள் கட்டிக்
கொண்டிருந்தார்கள்.
15அவர்கள் தங்கள் வீடுகளைப்*
பொன்னாலும் வெள்ளியாலும் நிரப்பினர்,
அவர்களோடு கூட புதைக்கப்பட்டிருக்க
வேண்டுமென நான் விரும்புகிறேன்.
16பிறப்பில் மரித்துப் புதைக்கப்பட்ட
குழந்தையாய் நான் ஏன் இருக்கவில்லை?
பகலின் ஒளியைக் கண்டிராத குழந்தையைப்
போன்று இருந்திருக்க மாட்டேனா என
விரும்புகிறேன்.
17கல்லறையில் இருக்கும்போது தீயோர்,
தொல்லை தருவதை நிறுத்துகிறார்கள்.
சோர்வுற்ற ஜனங்கள் கல்லறையில்
ஓய்வெடுக்கிறார்கள்.
18சிறைக் கைதிகளும் கூட கல்லறையில்
சுகம் காண்கிறார்கள். அவர்களைக் காப்
போர் அவர்களை நோக்கிக் கூக்குரல்
இடுவதை அவர்கள் கேட்பதில்லை.
19முக்கியமானவர்களும் முக்கியமற்ற
வர்களும் எனப் பலவகை ஜனங்கள்
கல்லறையில் இருக்கிறார்கள். அடிமையுங்
கூட எஜமானனிடமிருந்து விடுதலைப்
பெற்றிருக்கிறான்.
20"துன்புறும் ஒருவன் ஏன் தொடர்ந்து
வாழவேண்டும்? கசந்த ஆன்மாவுடைய ஒரு
வனுக்கு ஏன் உயிர் தரவேண்டும்?
21அம்மனிதன் மரிக்க விரும்புகிறான்,
ஆனால் மரணம் வருவதில்லை. துக்கமுள்ள
அம்மனிதன் மறைந்த பொக்கிஷத்தைப் பார்க்
கிலும் மரணத்தைத் தேடுகிறான்.
22அந்த ஜனங்கள் தங்கள் கல்லறைகளைக்
காண்பதில் மகிழச்சியாய் இருக்கிறார்கள்.
அவர்கள் தங்கள் புதை குழியைக் (கல்லறை
யை) கண்டு களிப்படைகிறார்கள்.
23ஆனால் தேவன் எதிர்காலத்தை இரகசிய
மாக வைத்திருக்கிறார். அவர்களைப் பாது
காப்பதற்காகச் சுற்றிலும் ஒரு சுவரை
எழுப்புகிறார்.

லிவியாதான் இங்கு இது உண்மையில் கடல் மிருகமான ராட்சசனாகும். சில ஜனங்கள் இது தான் சூரியனை விழுங்கும் என்று எண்ணுகின்றனர், இதுவேசூரிய கிரகணத்திற்குக் காரணம்.

வீடுகள "கல்லறைகள்."

24சாப்பிடும் நேரத்தில் நான் துன்பத்தால் பெருமூச்சு விடுகிறேன். மகிழ்ச்சியினால் அல்ல. என் முறையீடுகள் தண்ணீரைப் போல வெளிப்படுகின்றன.
25ஏதோ பயங்கரம் எனக்கு நிகழலாம் என அஞ்சியிருந்தேன். அதுவே எனக்கு நிகழ்ந்துள்ளது! நான் மிகவும் அஞ்சியது எனக்கு நேரிட்டது!
26நான் அமைதியுற முடியவில்லை. என்னால் இளைப்பாற முடியவில்லை. நான் ஓய்வெடுக்க இயலவில்லை. நான் மிகவும் கலங்கிப்போயிருக்கிறேன்!" என்றான்.

எலிப்பாஸ் பேசுகிறான்

4 1-2தேமானிலுள்ள எலிப்பாஸ், "யாராவது உம்முடன் பேச முயன்றால் உன்னைக் கலக்கமுறச் செய்யுமா? ஆனாலும் பேசாமல் அடக்கிக்கொள்ள யாரால் கூடும்?
3யோபுவே, நீ பலருக்குக் கற்பித்தாய். நீ பெலவீனமான கரங்களுக்கு பெலனைத் தந்தாய்.
4வீழ்பவர்களுக்கு உன் சொற்கள் உதவின. தாமாக நிற்க முடியாதவர்களுக்கு நீ பெலனளித்தாய்.
5ஆனால் இப்போது உனக்குத் தொல்லைகள் நேர்கின்றன, நீ துணிவிழக்கிறாய். தொல்லைகள் உன்னைத் தாக்குகின்றன, நீ கலங்கிப்போகிறாய்!
6நீ தேவனை கனம்பண்ணுகிறாய் அவரை நம்புகிறாய். நீ நல்லவன். எனவே, அதுவே உன் நம்பிக்கையாயிருக்க வேண்டுமல்லவா?
7யோபுவே, இதைச் சிந்தித்துப்பார்: களங்கமற்றவன் எவனும் அழிக்கப்பட்டதில்லை. நல்லோர் என்றும் அழிக்கப்பட்டதில்லை.
8நான் தீமையை விளைவிப்போரையும் கொடுமையை விதைப்பவரையும் கண்டிருக்கிறேன். அவர்கள் எதை விதைத்தார்களோ அதையே அறுவடைச் செய்வதைக் கண்டிருக்கின்றேன்!
9தேவனுடைய சுவாசம் அந்த ஜனங்களைக் கொல்கிறது. தேவனுடைய நாசியின் காற்று அவர்களை அழிக்கிறது.
10தீயோர் கர்ஜித்துச் சிங்கங்களைப்போல் முழங்குகிறார்கள். தீயோர் அமைதியாயிருக்கும்படி தேவன் செய்கிறார், தேவன் அவர்களின் பற்களை நொறுக்கிறார்.
11ஆம், அத்தீயோர், கொல்வதற்கு மிருகங்களைக் காணாத சிங்கங்களைப் போன்றிருக்கிறார்கள். அவர்கள் இறக்கிறார்கள், அவர்கள் ஜனங்கள் அலைந்து திரிகிறார்கள்.
12"இரகசியமாக எனக்கு ஒரு செய்தி தரப்பட்டது. என் காதுகள் அதனை மெல்லிய குரலில் கேட்டன.
13இரவின் கெட்ட கனவாய், அது என் தூக்கத்தைக் கெடுத்தது.
14நான் பயந்து நடுங்கினேன். என் எலும்புகள் எல்லாம் நடுங்கின.
15ஒரு ஆவி என் முகத்தைக் கடந்தது. என் உடலின் மயிர்கள் குத்திட்டு நின்றன.
16ஆவி அசையாது நின்றது, என்னால் அது என்னவென்று பார்க்க முடியவில்லை. என் கண்களின் முன்னே ஒரு உருவம் நின்றது, அப்போது அமைதியாயிருந்தது. அப்போது மிக அமைதியான ஒரு குரலைக் கேட்டேன்:
17'மனிதன் தேவனைவிட நீதிமானாக இருக்க முடியுமா? தன்னை உண்டாக்கினவரைக் காட்டிலும் மனிதன் தூய்மையாக இருக்க முடியுமா?
18பாரும், தேவன் அவரது பரலோகத்தின் பணியாட்களிடம்கூட நம்பிக்கை வைப்பதில்லை. தேவன் தனது தேவதூதர்களிடமும் குற்றங்களைக் காண்கிறார்.
19எனவே நிச்சயமாக ஜனங்கள் மிகவும் மோசமானவர்கள்! அவர்கள் களிமண் வீடுகளில்* வசிக்கிறார்கள். இக்களிமண் வீடுகளின் அஸ்திவாரங்கள் புழுதியேயாகும். பொட்டுப்பூச்சியைக் காட்டிலும் எளிதாக அவர்கள் நசுக்கிக் கொல்லப்படுகிறார்கள்.
20ஜனங்கள் சூரிய உதயந் தொடங்கி சூரியனின் மறைவு மட்டும் மரிக்கிறார்கள், யாரும் அதைக் கவனிப்பதுங்கூட இல்லை. அவர்கள் மரித்து என்றென்றும் இல்லாதபடி மறைந்துப் போகிறார்கள்.
21அவர்கள் கூடாரங்களின் கயிறுகள் இழுக்கப்பட்டன. அந்த ஜனங்கள் ஞானமின்றி மடிகிறார்கள்.

5 "யோபுவே, விரும்பினால் கூப்பிடு, ஆனால் யாரும் பதில் தரமாட்டார்கள்! நீ எந்த தேவதூதனிடம் திரும்பி பார்ப்பீர்?
2ஒரு மூடனின் கோபம் அவனைக் கொல்லும், ஒரு மூடனின் வலிய உணர்வுகள் அவனைக் கொல்லும்.
3தான் பாதுகாப்பானவன் என எண்ணிய ஒரு மூடனைக் கண்டேன். ஆனால் திடீரென அவன் மாண்டான்.*
4யாரும் அவனது ஜனங்களுக்கு உதவ முடியவில்லை. நியாயச் சபையில் அவர்களுக்கு ஆதரவளிப்பார் எவருமில்லை.
5அவர்களின் பயிர்களையெல்லாம் பசித்தோர் உண்டனர். முட்களின் நடுவே வளரும் தானியங்களையும் கூட பசியுள்ள அந்த ஜனங்கள் எடுத்துக்கொண்டனர். அவர்களின் பொருட்களையெல்லாம் பேராசையுள்ளோர் எடுத்துக்கொண்டனர்.
6தூசிகளிலிருந்து தீயக் காலங்கள் வருவதில்லை. பூமியிலிருந்து தொல்லை முளைப்பதில்லை.

களிமண் வீடு இதற்கு மனித சரீரம் எனப் பொருள்படும்.

ஆனால் … மாண்டான் "ஆனால் திடீரென அவன் வீடு சபிக்கப்பட்டது."

7 ஆனால் மனிதனோ நெருப்பிலிருந்து
பொறிகள் மேலே எழும்புவது எத்தனை
நிச்சயமோ அவ்வாறே, தொல்லையனு
பவிக்கப் பிறந்திருக்கிறான்.
8 ஆனால் யோபுவே, நான் உன்னைபோல்
இருந்திருந்தால், தேவனிடம் திரும்பி என்
கஷ்டங்களைக் கூறியிருப்பேன்.
9 தேவன் செய்கிற அற்புதமான காரியங்
களை ஜனங்கள் புரிந்துகொள்ள முடியாது.
தேவன் செய்கிற அதிசயங்களுக்கு முடிவே
யில்லை.
10 தேவன் பூமிக்கு மழையை அனுப்பு
கிறார். அவர் வயல்களுக்கு தண்ணீரை
அனுப்புகிறார்.
11 எளிமையானவனைத் தேவன் உயர்த்து
கிறார், அவர் துயரமுள்ளவனை மகிழ்ச்சி
யாக்குகிறார்.
12 புத்திசாலித்தனமுள்ள, தீயோரின்
திட்டங்களை, அவர்கள் வெற்றியடைய
முடியாதபடி தேவன் தடுக்கிறார்.
13 ஞானமுள்ளோரையும் அவர்கள் கண்ணி
களிலேயே விழும்படி செய்து புத்திசாலித்
தனமான அத்திட்டங்கள் வெற்றியடைய
முடியாதபடி தேவன் செய்கிறார்.
14 அத்தகைய திறமைசாலிகள் பகலிலேயே
தடுமாறுகிறார்கள். இருளில்தன் பாதையைக்
காணத் தடுமாறுகின்றவனைப்போல, அவர்
கள் நண்பகலிலும் காணப்படுகிறார்கள்.
15 தேவன் ஏழைகளைக் காப்பாற்றுகிறார்.
திறமைசாலிகளின் கைக்கும் அவர் ஏழை
களை காப்பாற்றுகிறார்.
16 எனவே ஏழைகள் நம்பிக்கையோடிருக்
கிறார்கள். நியாயமற்ற தீய ஜனங்களைத்
தேவன் அழிக்கிறார்.
17 “தேவன் திருத்தும் மனிதன் பாக்கிய
வான். சர்வ வல்லமையுள்ள தேவன் உன்
னைத் தண்டிக்கும்போது முறையிடாதே.
18 தேவன் தான் ஏற்படுத்தும் காயங்களைக்
கட்டுகிறார். அவர் சிலருக்குக் காய
முண்டாக்கலாம், ஆனால் அவர் கைகளே
அவற்றைக் குணமாக்கும்.
19 ஆறுவகை தொல்லைகளிலிருந்தும்
அவர் உன்னைக் காப்பாற்றுவார். ஆம், ஏழு
தொல்லைகளிலும் நீர் புண்படமாட்டீர்!
20 பஞ்சக்காலத்திலும் தேவன் உன்னை
மரணத்திலிருந்து காப்பாற்றுவார். போர்க்
காலத்திலும் தேவன் உன்னை மரணத்
திலிருந்து பாதுகாப்பார்!
21 தங்கள் கூரிய நாவுகளால் ஜனங்கள்
உங்களைக் குறித்துத் தீயவற்றைக் கூறலாம்.
ஆனால் தேவன் உன்னைப் பாதுகாப்பார்.
தீயன நிகழும்போது நீ அஞ்சத் தேவை
யில்லை!
22 அழிவைக் கண்டும் பஞ்சத்தைப் பார்த்
தும் நீ நகைப்பாய். காட்டு மிருகங்
களைக் கண்டும் நீ அஞ்சமாட்டாய்.
23 உன்னுடைய உடன்படிக்கையின்படி
வயலின் பாறைகளும் கூட அந்த உடன்
படிக்கையில் பங்குகொள்ளும். காட்டு
மிருகங்களும் கூட உன்னோடு சமாதானம்
செய்துக்கொள்ளும்.
24 உனது கூடாரம் பாதுகாப்பாக
இருப்பதால் நீர் சமாதானத்தோடு (அமைதி
யாக) வாழ்வாய். உனது சொத்துக்களை
எண்ணிப்பார்த்து ஒன்றும் காணாமல்
போகாதிருப்பதைக் காண்பாய்.
25 உனக்குப் பல குழந்தைகள் பிறப்பார்கள்.
அவர்கள் பூமியின் புற்களைப்போன்று
பலராவார்கள்
26 அறுவடைக்காலம் வரைக்கும் வளரும்
கோதுமையைப் போல் நீர் இருப்பீர். ஆம்,
நீர் முதிர் வயது வரைக்கும் வாழ்வீர்.
27 “யோபுவே, நாங்கள் இவற்றைக் கற்று,
உண்மையென்று அறிந்திருக்கிறோம். என
வே, யோபுவே, நாங்கள் சொல்வதைக்
கேட்டு, நீயாகவே அதைக் கற்றுக்கொள்”
என்று கூறினான்.

யோபு எலிப்பாசுக்குப் பதில் கூறுகிறான்

6 1-2 அப்போது யோபு, “என் துன்பங்களை
நிறுத்துப் பார்க்கக் கூடுமானால், என்
தொல்லைகள் தராசில் வைக்கப்படக் கூடுமா
னால், நீ என் துயரத்தைப் புரிந்து
கொள்வாய்.
3 கடற்கரை மணலைக் காட்டிலும் என்
துயர் பாரமானது. அதனால்தான் என்
வார்த்தைகள் மூடத்தனமானவையாகத்
தோன்றுகின்றன.
4 சர்வ வல்லமையுள்ள தேவனுடைய
அம்புகள் என்னுள்ளே இருக்கின்றன. அந்த
அம்புகளின் விஷத்தை என் ஆவி பருகு
கின்றது! தேவனுடைய கொடிய ஆயுதங்கள்
எனக்கெதிராக அணிவகுத்து நிற்கின்றன.
5 எந்தத் தீமையும் நிகழாதபோது நீ
கூறியவற்றைச் சொல்வது சுலபம் (எளிது).
காட்டுக் கழுதையும் தின்பதற்குப் புல்
அகப்படும்போது முறையிடாது. பசுவுக்கும்
தன் உணவு கிடைக்கும்போது முறை
யிடாது.
6 உப்பற்ற உணவு சுவைக்காது.
முட்டையின் வெண்பகுதிக்குச் சுவை
யில்லை.
7 நான் அதைத் தொட மறுக்கிறேன்;
அத்தகைய உணவு எனக்குச் சலிப்பைத்
தருகிறது! உனது வார்த்தைகளும் இப்போது
எனக்கு அவ்வாறே உள்ளன.
8 “நான் கேட்பவை எனக்குக் கிடைக்க
வேண்டுமென விரும்புகிறேன். நான் விரும்
பியவற்றைத் தேவன் எனக்குத் தருவார்
என விரும்புகிறேன்.
9 தேவன் என்னை நசுக்கிப் போட
வேண்டும் என விரும்புகிறேன். அவருடைய
கரத்தின் மூலமாக என்னை அழித்திடலாம்.
10 அவர் என்னைக் கொன்றுவிட்டால்
நான் ஒரு காரியத்தைக் குறித்து ஆறுதலடை
வேன். நான் ஒரு காரியத்தைக் குறித்து

மகிழ்ச்சியடைவேன். இத்தனை வேதனை
களை அனுபவித்துங்கூடபரிசுத்தமானவரின்
வார்த்தைகளை கீழ்ப்படிய நான் மறுக்க
வில்லை.
11“என் வலிமை குறைந்துப் போயிற்று,
எனவே தொடர்ந்து வாழ்வதில் எனக்கு
நம்பிக்கை இல்லை. எனக்கு என்ன நேரு
மென அறியேன், எனவே, நான் பொறுமை
யுடன் இருப்பதற்கு காரணமில்லை.
12நான் பாறையைப் போன்று பலம்
பொருந்தியவனா. என் உடம்பு வெண்
கலத்தால் ஆனதா?
13எனக்கு நானே உதவும் ஆற்றல்
எனக்கில்லை. ஏனெனில், வெற்றியோ
என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது.
14“ஒருவனுக்குத் தொல்லைகள் நேர்கை
யில், அவனது நண்பர்கள் அவனிடம்
இரக்கமாயிருக்கட்டும். ஒருவன் அவனது
நண்பனிடம், அவன் சர்வ வல்லமையுள்ள
தேவனிடமிருந்து விலகிச் சென்றால் கூட,
நம்பிக்கைக்குரியவனாக நடந்துக் கொள்ளட்
டும்.
15ஆனால் என் சகோதரராகிய நீங்களோ
நம்பிக்கைக்குரியவர்களாக இல்லை. நான்
உங்களைச் சார்ந்திருக்க முடியாது.
சிலகாலம் பாய்ந்தும், மற்றும் சிலகாலம்
பாயாமலும் இருக்கின்ற நீரோடைகளைப்
போல நீங்கள் காணப்படுகிறீர்கள்.
16பனிக் கட்டியாலும் உருகும் பனியாலும்
நிரம்பியிருக்கின்ற நீரூற்றுக்களைப்போல,
நீங்கள் பொங்கிப் பாய்கிறீர்கள்.
17உலர்ந்த வெப்பக்காலத்தில் தண்ணீர்
பாய்வது நின்றுவிடுகிறது, நீரூற்றும்
மறைந்து விடுகிறது.
18வியாபாரிகள் பாலைவனத்தின் வளைவு
களையும் நெளிவுகளையும் பின்தொடர்ந்து,
காணாமல் போய்விடுகிறார்கள்.
19தேமாவின் வியாபாரிகள் தண்ணீரைத்
தேடுகிறார்கள். சேபாவின் பிரயாணிகள்
(பயணிகள்) நம்பிக்கையோடு பார்க்கிறார்
கள்.
20அவர்கள் தண்ணீரைக் கண்டடைவதில்
நம்பிக்கையோடு இருக்கிறார்கள், ஆனால்
ஏமாற்றமடைகிறார்கள்.
21இப்போது, நீங்கள் அந்த நீருற்றுக்களைப்
போல் இருக்கிறீர்கள். என் தொல்லைகளைக்
கண்டு அஞ்சுகிறீர்கள்.
22நான் உங்களிடம் உதவியை
நாடினேனா? எனக்காக நீங்கள் யாரிட
மாவது வெகுமானம் கொடுக்க வேண்டி
னேனா?
23‘பகைவனிடமிருந்து என்னைக் காப்
பாற்றுங்கள்! கொடியோரிடமிருந்து என்
னைக் காப்பாற்றுங்கள்!’ என்று நான்
உங்களிடத்தில் கூறினேனா?
24“எனவே இப்போது எனக்குக் கற்பி
யுங்கள், நான் அமைதியாக இருப்பேன்.
நான் செய்த தவற்றைச் சுட்டிக்காட்டுங்கள்.
25நேர்மையான வார்த்தைகள் ஆற்றல்
மிக்கவை. ஆனால் உங்கள் விவாதங்கள்
எதையும் நிரூபிக்கவில்லை.
26என்னை விமர்சிக்கத் திட்டமிட்டுள்
ளீர்களா? மேலும் சோர்வு தரும் வார்த்தை
களைச் சொல்லப்போகிறீர்களா?
27தந்தைகளற்ற பிள்ளைகளின் பொருள்
களைப் பெற, நீங்கள் சூதாடவும் செய் வீர்கள்.
உங்கள் சொந்த நண்பனையே விற்பீர்கள்.
28ஆனால் இப்போது, என் முகத்தை
ஆராயுங்கள். நான் உங்களிடம் பொய்
கூறமாட்டேன்.
29எனவே இப்போது உங்கள் மனதை
மாற்றுங்கள். அநீதியாய் செயல்படாதீர்கள்,
மீண்டும் சிந்தித்துப் பாருங்கள். நான்
தவறேதும் செய்யவில்லை.
30நான் பொய் கூறவில்லை. நான்
சரியானவற்றை தவறுகளிலிருந்து பிரித்தறி
வேன்” என்றான்.

7 யோபு மீண்டும், “பூமியில் மனிதனுக்கு
மிகுந்த கஷ்டங்களுண்டு வேலைக்கென
வாங்கப்பட்ட பணியாளின் நாட்களைப்
போன்றது அவன் நாட்கள்.
2வெப்பநாளில் மிகுந்த உழைப்பிற்குப்
பின் குளிர்ந்த நிழலை நாடும் அடிமையைப்
போன்றவன் மனிதன். சம்பள நாளுக்காகக்
காத்திருக்கும் அப்பணியாளைப் போன்றிருக்
கிறான்.
3ஏமாற்றந்தரும் மாதங்கள் ஒன்றன்பின்
ஒன்றாய் கழிந்தன. துன்பந்தரும் இரவுகளை
ஒன்றன்பின் ஒன்றாய் அனுபவித்தேன்.
4நான் படுத்திருக்கும்போது, ‘எழுவதற்கு
எத்தனை சமயம் இருக்கிறது?’ என்று
எண்ணுகிறேன். ஆனால் இரவு நீண்டுக்
கொண்டே போகிறது. நான் திரும்பியும்
புரண்டும் சூரியன் உதிக்கும்வரை படுத்திருக்
கிறேன்.
5என் உடம்பில் புழுக்களும் அழுக்குகளும்
படிந்திருக்கின்றன. என் தோல் உரிந்து
புண்களால் நிரம்பியிருக்கின்றன.
6“நெய்பவனின் நாடாவைக்* காட்டிலும்
என் நாட்கள் வேகமாகக் கழிகின்றன.
என் வாழ்க்கை நம்பிக்கையின்றி முடிவடை
கிறது.
7தேவனே, என் வாழ்க்கை ஒரு மூச்சே
என நினைவுகூறும். நான் இனிமேல் (மீண்
டும்) நன்மையைப் பார்க்கப்போவதில்லை.
8நீங்கள் என்னை மீண்டும் பார்க்கப்
போவதில்லை. என்னைத் தேடுவீர்கள்,
ஆனால் நான் அழிந்துப் போயிருப்பேன்.
9மேகம் மறைந்து காணாமற்போகிறது.
அதைப்போன்று, ஒருவன் மரித்துக் கல்லறை

நெய்பவனின் நாடா துணிகளை நெய்யும் ஒரு கருவி, ஒரு நூலை மற்ற நூற்களினூடே செலுத்துவதற்கு இந்தக் கருவி பயன்படுகிறது.

யில் அடக்கம் பண்ணப்படுகிறான், அவன்
மீண்டும் வருவதில்லை.
10அவனது பழைய வீட்டிற்கு அவன்
மீண்டும் வரப்போவதில்லை. அவன் வீடு
அவனை இனி ஒருபோதும் அறியாது.
11“எனவே, நான் அமைதியாக இருக்கமா
ட்டேன்! நான் வெளிப்படையாகப் பேசு
வேன்! என் ஆவி துன்புறுகிறது! என்
ஆத்துமா கசந்து போயிருப்பதால் நான்
முறையிடுவேன்.
12தேவனே, ஏன் எனக்குக் காவலா
யிருக்கிறீர்? நான் கடலா, கடல் அரக்கனா?
13என் படுக்கை எனக்கு ஆறுதல் தரு
மென்று நம்பிக்கொண்டிருந்தேன். என்
கட்டில் எனக்கு ஓய்வையும் நிம்மதியையும்
தருமென்று எதிர்பார்த்தேன்.
14ஆனால் தேவனே, நான் படுத்திருக்
கையில் நீர் என்னைக் கனவுகளால்
பயமுறுத்துகிறீர், என்னைத் தரிசனங்
களால்* அச்சுறுத்துகிறீர்.
15எனவே நான் வாழ்வதைக் காட்டிலும்
மூச்சடைத்து மரிப்பதை விரும்புகிறேன்.
16நான் என் வாழ்க்கையை வெறுக்
கிறேன். நான் என்றென்றும் வாழ விரும்ப
மாட்டேன். என்னைத் தனிமையாக
விட்டுவிடுங்கள்! ஏனெனில் என் வாழ்க்கை
பொருளற்றது (அர்த்தமற்றது)
17தேவனே, உமக்கு மனிதன் ஏன்
அத்தனை முக்கியமானவன்? ஏன் அவனைப்
பெருமைப்படுத்துகிறீர்? ஏன் அவனைக்
கண்டுக்கொள்கிறீர்?
18ஏன் அவனைக் கரிசனையோடு காலை
வேளைகளில் சந்தித்து, ஒவ்வொரு விநா
டியும் சோதிக்கிறீர்?
19தேவனே, என்னைவிட்டுத் தூர நீர்
பார்ப்பதில்லை. என்னைவிட்டு ஒரு கண
மும் நீர் விலகுவதில்லை.
20தேவனே, நீர் ஜனங்களை கவனித்து
காப்பாற்றுகிறீர். நான் பாவம் செய்திருந்
தால், நான் என்ன செய்யமுடியும். நீர்
என்னை உமது இலக்காக ஏன் பயன்
படுத்துகிறீர்? நான் உமக்குத் தொல்லையாகி
போனேனா?
21ஏன் நீர் என் தவறை மன்னிக்கக்
கூடாது? என் பாவங்களை நீர் ஏன்
மன்னிக்கக்கூடாது? நான் விரைவில் மடிந்து
கல்லறைக்குள் வைக்கப்படுவேன். அப்போது
என்னைத் தேடுவீர்கள், நான் அழிந்துப்
போயிருப்பேன்” என்றான்.

பில்தாத் யோபுவிடம் பேசுகிறான்

8 அப்போது சூகியனான பில்தாத் பதி
லாக,
2 “எத்தனை காலம் இவ்வாறு பேசுவீர்?
பலத்த காற்றைப்போன்று உமது சொற்கள்
வெளிப்படுகின்றன.
3தேவன் நியாயத்தை மாற்றுவாரோ? சர்வ
வல்லமையுள்ள தேவன் சரியானவற்றை
மாற்றுவாரோ?
4உமது பிள்ளைகள் தேவனுக்கெதிராகப்
பாவம் செய்தபோது அவர் அவர்களை
தண்டித்தார். அவர்கள் தங்கள் பாவங்களுக்
காகத் தண்டனைப் பெற்றார்கள்.
5ஆனால் இப்போது யோபுவே, தேவ
னைப் பார்த்து சர்வ வல்லமையுள்ள அவரி
டம் ஜெபம் செய்யும்.
6நீர் தூய்மையும் உத்தமனாகவும் இருந்
தால், அவர் விரைந்து உமக்கு உதவ
வருவார். உமது குடும்பத்தை மீண்டும்
உமக்குத் தருவார்.
7தொடக்கம் அற்பமாக இருந்தாலும் உமது
எதிர்காலம் ஆசீர்வாதமானதாக இருக்கும்.
8“வயது முதிர்ந்தோரைக் கேளும்,
அவர்கள் முற்பிதாக்கள் அறிந்து
கொண்டதைத் தெரிந்துகொள்ளும்.
9ஏனெனில் நாம் நேற்றுப் பிறந்தோம்.
ஒன்றும் நாம் அரியோம், ஏனெனில் பூமியில்
நம் நாட்கள் நிழலைப்போன்று மிகவும்
குறுகியவை.
10முதிர்ந்தோர் உமக்குக் கற்பிக்கக் கூடும்.
அவர்கள் அறிந்துக்கொண்டவற்றை உமக்
குச் சொல்லக்கூடும்” என்று கூறினான்.
11பில்தாத் மேலும், “பாப்பிரஸ்* உலர்ந்த
பூமியில் ஓங்கி வளருமோ? தண்ணீரின்றி
கோரைப்புற்கள் வளரக்கூடுமோ?
12இல்லை, தண்ணீர் வற்றிப் போகும்
போது அவை உலர்ந்துபோகும். அவற்றை
வெட்டிப் பயன்படுத்த முடியாதபடி சிறியன
வாக இருக்கும்.
13தேவனை மறப்போரும் அப்புற்களைப்
போலிருக்கிறார்கள். தேவனை மறக்கும்
மனிதனுக்கு எத்தகைய நம்பிக்கையும்
அழிந்துப்போகும்.
14அம்மனிதன் சாய்ந்து நிற்க எதுவு
மில்லை. அவன் பாதுகாவல் ஒரு சிலந்தி
வலையைப் போன்றது.
15சிலந்தி வலையில் ஒருவன் சாய்ந்தால்,
அந்த வலை அறுந்துப்போகும். அவன்
வலையைப் பற்றிக்கொள்வான், ஆனால்
அது அவனைத் தாங்கிக்கொள்ளாது.
16அந்த மனிதனோ சூரிய ஒளி உதிக்கும்
முன் இருக்கிற பச்சை செடியைப் போலிருக்
கிறான். தோட்டம் முழுவதும் அதன் கிளை
கள் பரவி நிற்கும்.

காட்சிகள் தேவன் மனிதனோடு பேசுவதற்குப் பயன்படுத்தும் கனவைப்போன்ற கருவி.

பாப்பிரஸ் தாளை உண்டாக்கப் பயன்படுத்தப்படும் ஒரு வகை தாவரம் அதன் பட்டை படகுகள், மரக்கலங்கள் ஆகியவற்றின் மேற்பகுதியைச் செய்யப் பயன்படுத்தப்பட்டது.

17 பாறைகளைச் சுற்றிலும் அதன் வேர்கள் படர்ந்திருக்கும். பாறைகளினூடே வளர்வதற்கு அது ஓர் இடம் தேடும்.

18 ஆனால் அத்தாவரத்தை அவ்விடத்திலிருந்து அகற்றினால் அது வாடிப்போகும், அது அங்கிருந்தது என்பதையும் ஒருவரும் அறியமாட்டார்கள்.

19 ஆனால், அத்தாவரம் மகிழ்ச்சியடைந்தது. அது இருந்த இடத்தில் மற்றொரு தாவரம் முளைத்தது.

20 தேவன் களங்கமற்றோரைக் கைவிடமாட்டார். அவர் கொடியோருக்கு உதவமாட்டார்.

21 தேவன் இன்னும் உமது வாயை நகைப்பினாலும் உதடுகளை மகிழ்ச்சி ஆரவாரங்களினாலும் நிரப்புவார்.

22 ஆனால் உனது பகைவர்கள் வெட்கத்தை ஆடையாக அணிந் துகொள்வார்கள். தீய ஜனங்களின் வீடுகள் அழிக்கப்படும்” என்றான்.

யோபு பில்தாத்திற்குப் பதில் கூறுகிறான்

9 அப்போது யோபு,

2 “ஆம், நீர் கூறுவது உண்மையென அறிவேன். ஆனால் ஒரு மனிதன் எப்படி தேவனுக்கு முன் நீதிமானாயிருக்க முடியும்?

3 ஒருவன் தேவனிடம் வாதாட முடியாது! தேவன் 1,000 கேள்விகளைக் கேட்கமுடியும், ஒருவனும் ஒரு கேள்விக்குக்கூட பதில் கூறமுடியாது!

4 தேவன் மிகுந்த ஞானமுள்ளவர், அவரது வல்லமை மிகப்பெரியது! ஒருவனும் தேவனோடு போராடி, காயமுறாமலிருக்க முடியாது.

5 தேவன் கோபமாயிருக்கும்போது பர்வதங்களை அசைக்கிறார், அவை அதனை அறியாது.

6 பூமியை அசைக்கும்படி தேவன் பூமியதிர்ச்சியை அனுப்புகிறார். தேவன் பூமியின் அஸ்திவாரங்களை அசைக்கிறார்.

7 தேவன் சூரியனிடம் பேசமுடியும், அதை உதயமாகாமல் செய்யமுடியும். அவர் விண்மீன்களை ஒளிவிடாதபடி பூட்டமுடியும்.

8 தேவன் மட்டுமே வானங்களை உண்டாக்கினார், அவர் சமுத்திரத்தின் அலைகளின் மேல் நடக்கிறார்.

9 அவர் துருவச்சக்கர நட்சத்திரங்களையும், மிருக சீரிஷத்தையும், அறு மீனையும், தட்சண மண்டலங்களையும் உண்டாக்கினார்.

10 மனிதர் புரிந்துகொள்ள முடியாத அற்புதமான காரியங்களைத் தேவன் செய்கிறார். தேவனுடைய எண்ணிமுடியாத அதிசயங்களுக்கு முடிவேயில்லை!

11 தேவன் என்னைக் கடந்துச் செல்கையில் நான் அவரைப் பார்க்க முடியாது. தேவன் என்னைக் கடந்துச் செல்கையில் நான் அவரைக் கவனிப்பதில்லை.

12 தேவன் எதையாவது எடுத்துக் கொண்டால் அவரை யாரும் தடுக்க முடியாது. ‘நீர் என்ன செய்கிறீர்?’ என்று யாரும் அவரைக் கேட்கமுடியாது.

13 தேவன் தமது கோபத்தை அடக்கிக் கொள்ளமாட்டார். ராகாபின்* உதவியாளருங்கூட தேவனுக்குப் பயந்திருக்கிறார்கள்.

14 எனவே நான் தேவனுக்கு பதில் கொடுக்க முடியாது. அவரிடம் என்ன சொல்லவென்பதை நான் அறியேன்.

15 நான் களங்கமற்றவன், ஆனால் என்னால் அவருக்குப் பதில் கூறமுடியாது. என் நீதிபதியிடம் (தேவனிடம்) இரக்கத்திற்காக மன்றாட மட்டுமே என்னாலாகும்.

16 நான் கூப்பிட்டு அவர் பதில் தந்தாலும், அவர் உண்மையாகவே எனக்குச் செவிகொடுக்கிறார் என்பதை நான் நம்ப முடியாது.

17 தேவன் என்னை நசுக்குவதற்குப் புயல்களை அனுப்புகிறார். எக்காரணமுமின்றி எனக்கு இன்னுமதிகமான காயங்களைத் தருகிறார்.

18 மீண்டும் இன்னொரு முறை சுவாசிக்க தேவன் என்னை அனுமதிக்கமாட்டார். அவர் எனக்கு இன்னும் தொல்லைகளைத் தருகிறார்.

19 தேவன் மிகுந்த வல்லமையுள்ளவர்! யார் தேவனை நியாயசபைக்கு அழைத்துவந்து, நியாயம் வழங்கும்படி சொல்ல முடியும்?

20 நான் களங்கமற்றவன், ஆனால் நான் கூறுபவை என்னைக் குற்றவாளியாகக் காட்டக்கூடும். நான் உத்தமன், ஆனால் நான் பேசினால் என் வாய் என்னைக் குற்றவாளியாக நிரூபிக்கிறது.

21 நான் களங்கமற்றவன், நான் எதைச் சிந்திப்பதென அறியேன். நான் என் சொந்த வாழ்க்கையையே வெறுக்கிறேன்.

22 நான் எனக்குள்ளே, ‘இதே மாதிரி எல்லோருக்கும் நிகழ்கிறது’ களங்கமற்றவர்களும் குற்றவாளிகளும் முடிவை காண்பார்கள்’ என்று சொல்லிக்கொள்கிறேன்.

23 கொடிய செயலொன்று நிகழ்ந்து களங்கமற்றவன் கொல்லப்பட்டால் தேவன் அவரைப் பார்த்து நகைப்பாரா?

24 தீயவன் ஒருவன் ஒரு நிலத்தைத் தனதாக்கிக் கொள்ளும்போது, நிகழ்வனவற்றைத் தலைவர்கள் காணாதபடி தேவன் செய்கிறாரா? அது உண்மையானால் தேவன் யார்?

25 “ஓர் ஓட்டக்காரனைக் காட்டிலும் என் நாட்கள் வேகமாகக் கழிகின்றன. என் நாட்கள் பறக்கின்றன, அவற்றில் சந்தோஷமில்லை.

ராகாப் ஒரு ராட்சசன் அல்லது கடல்மிருகம். ராகாப் கடலைக்கட்டுப்படுத்துவதாக ஜனங்கள் நினைத்தனர். ராகாப் தேவனின் பகைவரது அடையாளம் அல்லது தீமைக்குரிய ஏதோ ஒன்று.

26 வேகமாய் ஓடுகின்ற கப்பல்களைப்
போலவும் இரையைப் பிடிக்க பாய்கின்ற
கழுகுகளைப் போலவும் என் நாட்கள்
கடந்துச் செல்கின்றன.
27 ‘நான் முறையிடுவதில்லை, என்
வேதனையை மறப்பேன், என் முகத்தில்
புன்னகை பொலிவேன்!’ என்று நான்
கூறினால்,
28 அது எந்த மாற்றத்தையும் உண்மையாக
ஏற்படுத்துவதில்லை! துன்பங்கள் என்னை
அச்சுறுத்துகின்றன.
29 நான் ஏற்கனவே குற்றவாளியாக
நியாயந்தீர்க்கப்பட்டேன். எனவே, நான்
ஏன் முயன்று கொண்டிருக்க வேண்டும்?
‘அதை மறந்து விடு!’ என நான் சொல்
கிறேன்.
30 பனியால் என்னைக் கழுவினாலும்,
சவுக்காரத்தினால் (சோப்பினால்) என் கை
களைச் சுத்தம் செய்தாலும்,
31 தேவன் என்னைச் சேற்றுக் குழியில்*
தள்ளுவார். அப்போது என் உடைகளும்
என்னை வெறுக்கும்.
32 தேவன் கூறும் குற்றங்களுக்கு பதில் கூற
என்னைப் போன்று மனிதன் அல்ல,
நியாயசபையில் நாங்கள் ஒருவருக்கொருவர்
சந்திக்க முடியாது.
33 இரு பக்கங்களிலும் நியாயம் கேட்க
ஒருவர் இருந்தால், நல்லதென நான்
விரும்புகிறேன்.* எங்களை நியாயமாக (தக்க
முறையில்) நியாயந்தீர்க்க வல்லவர் ஒருவர்
இருக்கமாட்டாரா என நான் விரும்புகிறேன்.
34 தேவனுடைய தண்டிக்கும் கோலை
என்னிடத்திலிருந்து எடுத்துப்போடுவார்.
ஒருவர் இருக்கமாட்டாரா என விரும்பு
கிறேன். அப்போது அவருடைய பயமுறுத்து
தல்கள் என்னை அச்சுறுத்தாது.
35 அப்போது தேவனைப்பற்றிப் பயப்
படாமல், நான் சொல்ல விரும்புவன
வற்றைக் கூற முடியும். ஆனால் இப்போது
நான் அவ்வாறு செய்ய முடியாது”
என்றான்.

10 நான் என் சொந்த வாழ்க்கையை
வெறுக்கிறேன். எனவே நான் தாராள
மாக முறையிடுவேன். என் ஆத்துமா கசந்து
போயிற்று, எனவே நான் இப்போது பேசு
வேன்.
2 நான் தேவனிடம், ‘என்னைக் குற்றம்
சாட்டாதேயும்! நான் செய்த தவற்றை
எனக்குக் கூறும், எனக்கெதிராக உமது
காரியம் என்ன?’ என்பேன்.
3 தேவனே, என்னைத் துன்புறுத்துவது
உமக்கு மகிழ்ச்சித் தருகிறதா? நீர் உண்டாக்
கினதைக் குறித்து நீர் கவலைப்பட்டதாகத்
தெரியவில்லை. அல்லது தீயோர் செய்த
திட்டங்களில் நீர் மகிழ்ச்சிச்கொள்கிறீரா?
4 தேவனே, உமக்கு மனிதரின் கண்கள்
உண்டா? மனிதர் காண்பதுபோல் நீர்
காரியங்களைப் பார்க்கிறீரா?
5 எங்களைப்போல உமது வாழ்க்கையும்
குறுகியதா? மனிதனின் வாழ்க்கையைப்
போல் உமது வாழ்க்கையும் குறுகியதா?
இல்லை! எனவே அது எப்படிப்பட்டது
என்பதை எவ்வாறு அறிவீர்?
6 எனது தவறுகளைப் பார்க்கிறீர், என்
பாவங்களைத் தேடுகிறீர்.
7 நான் களங்கமற்றவன் என்பதை நீர்
அறிந்திருந்தும் உமது ஆற்றலிலிருந்து
தப்பித்துக்கொள்ள வழியில்லை!
8 தேவனே, உமது கைகள் என்னை
உண்டாக்கி, என் உடலுக்கு வடிவளித்தன.
இப்போது அவை என்னை மூடிக்கொண்டு
அழிக்கின்றன.
9 தேவனே, என்னைக் களிமண்ணைப்
போல உருவாக்கினீர் என நினைத்துப்
பாரும். என்னை மீண்டும் களிமண்ணாக
மாற்றுவீரா?
10 என்னைப் பாலைப்போன்று வெளியே
ஊற்றினீர். தயிரைக் கடைந்து வெண்ணெய்
எடுப்பவனைப்போன்று என்னைக்
கடைந்து உருமாற்றினீர்.
11 எலும்புகளாலும் தசைகளாலும் எனக்கு
உருவளித்தீர். பின்னர் தோலாலும் தசை
யாலும் உடுத்தினீர்.
12 எனக்கு உயிரளித்தீர், என்னிடம்
இரக்கமாயிருந்தீர். நீர் என்னை பராமரித்தீர்,
என் ஆவியைப் பாதுகாத்தீர்.
13 ஆனால் நீர் இதை உமது இருதயத்தில்
மறைத்து வைத்திருக்கிறீர். நீர் இரகசியமாக
உமது இருதயத்தில் திட்டமிட்டது இது
என்பதை நான் அறிவேன்.
14 நான் பாவம் செய்தால், நீர் அதைக்
கவனித்துக்கொண்டிருந்தீர், எனவே நீர் என்
தவறுகளுக்கு என்னைத் தண்டிக்க முடியும்.
15 நான் பாவம் செய்யும்போது குற்றவாளி
யாகிறேன், அது எனக்குத் தீமையானது.
ஆனால் நான் களங்கமற்றவனாயிருக்கும்
போதும், என் தலையை உயர்த்திப்பார்க்க
முடியவில்லை! நான் வெட்கப்பட்டு
அவமானமடைந்திருக்கிறேன்.
16 எனக்கு வெற்றி கிடைத்து நான் பெரு
மைப்பட்டால், ஒருவன் சிங்கத்தை வேட்டை
யாடுவதைப்போல என்னை வேட்டையாடு
கீறீர். எனக்கெதிராக உமது ஆற்றலை
மீண்டும் காட்டுகீறீர்.
17 நான் தவறு செய்தேன் என்று நிறுவ
உமக்கு எப்போதும் யாரேனும் கிடைப்
பர். பல வழிகளில் உமது கோபத்தை
மீண்டும் மீண்டும் வெளிப்படுத்துவீர் அவை
எனக்கெதிராக ஒன்றன்பின் ஒன்றாக
படைகளை அனுப்புவது போன்றிருக்கும்.
18 எனவே, தேவனே, ஏன் என்னைப்

சேற்றுக்குழி *பிணங்கள் அழுகும் கல்லறை.*

இருபக்கங்களிலும் … விரும்புகிறேன் *“நடு நிலைமையாளர்.”*

பிறக்க அனுமதித்தீர்? யாரேனும் என்னைக்
காணும் முன்பே நான் மரித்திருக்க வேண்டு
மென நான் விரும்புகிறேன்.
19நான் ஒருபோதும் வாழ்ந்திருக்க
வேண்டாமென விரும்புகிறேன். தாயின்
கருவிலிருந்து நேரே கல்லறைக்கு என்னைச்
சுமந்துப் போயிருக்க வேண்டுமென விரும்பு
கிறேன்.
20என் வாழ்க்கை ஏறக்குறைய முடிந்து
விட்டது. எனவே என்னைத் தனித்து
விடுங்கள்!
21யாரும் திரும்பிவராத, இருளும்
மரணமுமுள்ள இடத்திற்கு நான் போகும்
முன்பு, மிஞ்சியுள்ள சில காலத்தை நான்
சந்தோஷமாய் அனுபவிக்க அனுமதியுங்கள்.
22யாரும் பார்க்கமுடியாத, இருளும் நிழல்
களும் குழப்பமும் நிரம்பிய இடத்திற்கு
நான் போகும் முன்பு, மிஞ்சியுள்ள சில
காலத்தை நான் மகிழ்ந்திருக்க அனுமதி
யுங்கள். அங்கு ஒளியும் கூட இருளாகும்”
என்றான்.

சோப்பார் யோபுவிடம் பேசுகிறான்

11 அப்போது நாகமாவின் சோப்பார்
யோபுவுக்குப் பதில் கூறினான்.
2“இவ்வார்த்தைப் பெருக்குக்குப் பதில்
தரப்பட வேண்டும்! இத்தனை பேச்சுக்களும்
யோபுவுக்கு நீதி வழங்குகின்றனவா?
இல்லை!
3யோபுவே, உனக்குச் சொல்ல எங்களிடம்
பதில் இல்லை என்று நினைக்கிறாயா? நீ
நகைத்து பேசும்போது உன்னை எச்சரிக்க
ஒருவருமில்லை என நினைக்கிறாயா?
4யோபுவே, நீ தேவனிடம், ‘என் விவாதங்
கள் சரியானவை, நான் தூயவன் என நீர்
காணமுடியும்’ என்கிறாய்.
5யோபுவே, தேவன் உனக்குப் பதில்
சொல்லி, நீ கருதுவது தவறென உனக்குச்
சொல்வார் என விரும்புகிறேன்.
6தேவன் ஞானத்தின் இரகசியங்களை
உனக்குச் சொல்லமுடியும். ஏனெனில்
ஞானத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு
என்பதை அவர் உனக்குச் சொல்வார்.
தேவன் உன்னைத் தண்டிக்க வேண்டிய
அளவிற்கு அவர் தண்டிப்பதில்லை.
7யோபுவே, நீ உண்மையாகவே தேவ
னைப் புரிந்துகொண்டதாக நினைக்கிறாயா?
சர்வவல்லமையுள்ள தேவனுடைய அறிவை
நீ புரிந்துகொள்ள முடியுமோ?
8அது பரலோகத்திற்கும் உயர்ந்தது.
மரணத்தின் இடத்தைக் காட்டிலும் ஆழ
மானது. அது பற்றி நீர் அறியக்கூடுமோ?
9தேவனுடைய அறிவின் அளவு
உயர்ந்தது பூமியைக் காட்டிலும் கடல் களைக்
காட்டிலும் பெரியது.
10“தேவன் உன்னைச் சிறைபிடித்து
நியாயசபைக்கு அழைத்துவந்தால், ஒரு
வனும் அவரைத் தடுக்க முடியாது.
11உண்மையாகவே, யார் தகுதியற்ற
வரென்று தேவன் அறிகிறார்.
தேவன் தீமையைப் பார்க்கும்போது
அதை நினைவுக்கூர்கிறார்.
12ஒரு காட்டுக் கழுதை மனிதனை ஈன்
றெடுக்காது. மூடனான மனிதன் ஒருபோதும்
ஞானம் பெறமாட்டான்.
13“ஆனால் யோபுவே, உன் இருதயத்தைத்
தேவனுக்கு நேராக தயார்ப்படுத்த வேண்டும்,
உன் கரங்களை அவருக்கு நேராக உயர்த்தி
அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்.
14உன் வீட்டிலிருக்கும் பாவத்தை நீ
அகற்றிப்போட வேண்டும். உன் கூடாரத்தில்
தீமை தங்கியிருக்க விடாதே.
15அப்போது நீ தேவனை வெட்கமின்றிப்
பார்க்கக்கூடும். நீ தைரியமாக நின்று,
அச்சமில்லாது இருக்க முடியும்.
16அப்போது நீ உன் தொல்லைகளை
மறக்கக்கூடும் வழிந்தோடும் வெள்ளத்தைப்
போல் உன் தொல்லைகள் நீங்கிவிடும்.
17நண்பகலில் சூரியனின் பிரகாசத்தைக்
காட்டிலும், உன் வாழ்க்கை ஒளிமயமாக
இருக்கும். வாழ்க்கையின் இருண்ட
நேரங்களும் காலை சூரியனைப் போன்று
பிரகாசிக்கும்.
18அப்போது நீ பாதுகாவலை உணர்வாய்.
ஏனெனில், உனக்கு நம்பிக்கை உண்டு.
தேவன் உன்னைக் கவனித்து உனக்கு
ஓய்வளிப்பார்.
19நீ ஓய்வெடுக்கப் படுத்துக்கொள்வாய்,
யாரும் உனக்குத் தொல்லை தர மாட்டார்
கள். பலர் உன்னிடம் உதவி நாடி
வருவார்கள்.
20தீயோர் உன்னிடம் உதவியை எதிர்
பார்ப்பர், அவர்கள் தங்கள் தொல்லை
களிலிருந்து தப்பமுடியாது. அவர்களின்
நம்பிக்கை அவர்களை மரணத்திற்கு நேராக
மட்டுமே வழிநடத்தும்” என்றான்.

யோபு சோப்பாருக்குப் பதிலளிக்கிறான்

12 பின்பு யோபு சோப்பாருக்குப் பதி
லாக,
2“நீங்கள் மட்டுமே ஞானவான் என
நீங்கள் எண்ணுகின்றீர்கள் என நான் உறுதி
யாகக் கருதுகிறேன். நீங்கள் மரிக்கும்போது
ஞானமும் உங்களோடு அழிந்துப்போகும்.
3நானும் உன்னைப் போன்றே புத்திசாலி.
உங்களிலும் நான் தாழ்ந்தவன் அல்ல.
இப்படிப்பட்டவைகளை அறியாதவர்கள்
யார்?
4“என் நண்பர்கள் இப்போது என்னைக்
கண்டு நகைக்கிறார்கள். அவர்கள், “அவன்
தேவனிடம் ஜெபித்தான், அவன் பதிலைப்
பெற்றான் என்று சொல்கிறார்கள். “உத்தம
னாகிய நீதிமான் பரியாசம் பண்ணப்
படுகின்றான்.
5தொல்லைகளற்றோர் தொல்லையுடை

யோரைக் கண்டு நகைக்கிறார்கள். அவர்கள்
வீழும் மனிதனைத் தாக்குகிறார்கள்.
6ஆனால் திருடரின் கூடாரங்கள் பாதிக்கப்
படவில்லை. தேவனை கோபங்கொள்ளச்
செய்வோர் சமாதானமாக வாழ்கிறார்கள்.
அவர்களின் சொந்த வலிமையே அவர்களது
ஒரே தேவன்.
7“ஆனால் மிருகங்களைக் கேளுங்கள்,
அவை உங்களுக்குப் போதிக்கும். வானத்துப்
பறவைகளைக் கேளுங்கள், அவை உங்க
ளுக்குச் சொல்லும்.
8அல்லது பூமியிடம் பேசுங்கள்,அது
உங்களுக்குக் கற்பிக்கும். அல்லது கடலின்
மீன்கள் தங்கள் ஞானத்தை உங்களுக்குச்
சொல்லட்டும்.
9கர்த்தருடைய கரம் அவற்றை உண்டாக்
கினது என்பதை ஒவ்வொருவரும் அறிகி
றோம்.
10வாழும் ஒவ்வொரு மிருகமும் மூச்சு
விடும் ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய
வல்லமைக்குக் கட்டுப்பட்டவர்கள்.
11நாவு உணவைச் சுவைப்பதுப்போல
காதுகள் கேட்கும் சொற்களை ஆராய்ந்து
பார்க்கும்.
12முதிர்ந்தோர் ஞானவான்கள், புரிந்து
கொள்ளும் ஆற்றலையுடையவருக்கு நீண்ட
ஆயுள் உண்டு.
13ஞானமும் ஆற்றலும் தேவனுக்குரியவை.
ஆலோசனையும் புரிந்து கொள்ளுதலும்
அவருக்குரியவை.
14தேவன் எதையேனும் கிழித்து அழித்
தால் ஜனங்கள் அதை மீண்டும் உருவாக்க
முடியாது. தேவன் ஒருவனைச் சிறைக்குள்
அகப்படுத்தினால் ஜனங்கள் அவனை
விடுவிக்க முடியாது.
15தேவன் மழையைப் பெய்யாதிருக்கச்
செய்தால், பூமி உலர்ந்து போகும். தேவன்
மழையைத் தாராளமாகப் பெய்யச் செய்தால்,
அது பூமியில் வெள்ளப் பெருக்கெடுக்கும்.
16தேவன் வல்லமையுள்ளவரும் வெற்றி
பெறுவர். ஏமாந்தவரும் மற்றும் ஏமாற்று
கின்றவரும் அவருக்கு கீழிருக்கிறீர்கள்,
17தேவன் ஆலோசனைக் கூறுவோரின்
ஞானத்தை அகற்றுகிறார், அவர் தலை
வர்களை மூடர்களைப்போல் நடக்கும்படி
செய்கிறார்.
18அரசர்கள் ஜனங்களைச் சிறைகளில்
அடைக்கக்கூடும், ஆனால் தேவன் அந்த
ஜனங்களை விடுவித்து ஆற்றலுள்ளோராக்கு
கிறார்.
19தேவன் ஆசாரியர் ஆற்றலை அகற்று
கிறார், அவர் ஆலயப் பணியாட்களை
முக்கியமற்றோராக்குகிறார்.
20நம்பிக்கையுள்ள ஆலோசகர்களை அமை
தியாயிருக்கும்படி தேவன் செய்கிறார்,
முதிர்ந்தோரின் ஞானத்தை அவர் அகற்றி
விடுகிறார்.
21தேவன் தலைவர்களை முக்கிய மற்றோ
ராக்குகிறார், தலைவர்களின் ஆற்றலை
அவர் நீக்கிவிடுகிறார்.
22இருண்ட இரகசியங்களையும் கூட
தேவன் அறிகிறார், மரணம் போன்ற
இருளுள்ள இடங்களிலும் அவர் ஒளியைப்
பாய்ச்சுகிறார்.
23தேவன் தேசங்களைப் பெரிதாகவும்
வல்லமை மிக்கதாகவும் செய்கிறார். பின்பு
அவர் அவற்றை அழிக்கிறார். அவர் தேசங்
களைப் பெரிதாக வளரும்படி செய்கிறார்,
பின்பு அவர் அங்குள்ள ஜனங்களைச்
சிதறடிக்கிறார்.
24தேவன் தலைவர்களை மூடராக்குகிறார்,
அவர்கள் குறிக்கோளின்றி பாலை
வனத்தில் அலையும்படிச் செய்கிறார்.
25அத்தலைவர்கள் இருளில் தடுமாறி
வழி தேடுகின்றவனைப்போல் இருக்
கிறார்கள். குடித்து போகும்வழியை
அறியாது செல்கிறவனைப்போல் இருக்கி
றார்கள்” என்றான்.
13 யோபு, “நான் இவற்றையெல்லாம்
முன்னரே பார்த்திருக்கிறேன். நீங்கள்
கூறுகின்றவற்றையெல்லாம் நான் ஏற்கனவே
கேட்டிருக்கிறேன். அவற்றையெல்லாம் நான்
புரிந்துகொள்கிறேன். 2உங்களுக்கு தெரிந்த
வற்றை நான் அறிவேன். நானும் உங்களைப்
போலவே புத்திசாலி. 3ஆனால் நான்
உங்களோடு வாதாட விரும்பவில்லை. சர்வ
வல்லமையுள்ள தேவனோடு நான் பேச
விரும்புகிறேன். என் தொல்லைகளைப்பற்றி
நான் தேவனோடு வாதாட விரும்புகிறேன்.
4ஆனால் நீங்கள் மூவரும் உங்கள் அறியா
மையைப் பொய்களால் மறைக்க முயல்
கிறீர்கள். ஒருவரையும் குணப்படுத்த முடி
யாத தகுதியற்ற மருத்துவர்களைப்போல்
இருக்கிறீர்கள். 5நீங்கள் அமைதியாயிருக்க
வேண்டும் என விரும்புகிறேன். நீங்கள்
செய்யத்தக்க மிகுந்த ஞானமுள்ள காரியம்
அதுவேயாகும்.
6“இப்போது என் விவாதத்திற்கும் செவி
கொடுங்கள். நான் சொல்லவேண்டிய
வற்றிற்குச் செவிகொடுங்கள்.
7நீங்கள் தேவனுக்காகப் பொய் கூறுவீர்
களா? நீங்கள் கூறும் பொய்களை, நீங்கள்
கூறவேண்டுமென்று தேவன் விரும்பியதாக
நீங்கள் உண்மையாகவே நம்புகிறீர்களா?
8எனக்கெதிராக தேவனை ஆதரித்துப்
பேச முயன்றுக் கொண்டிருக்கிறீர்களா?
தேவனுக்காக வழக்குகள் கொண்டுவர
முடியுமா?
9உங்களைத் தேவன் கூர்ந்து ஆராய்ந்தால்,
நீங்கள் சரியானவர்கள் என காண்பிப்
பாரா? நீங்கள் ஜனங்களை மூடராக்குவது
போல் தேவனை முட்டாளாக்க முடியும் என
உண்மையாகவே எண்ணுகிறீர்களா?
10ஒரு மனிதன் முக்கியமானவன் என்ப
தால் மட்டும் நீதிமன்றத்தில் இரகசியமாக
அவன் பக்கம் சாய முடிவுசெய்தால், தேவன்

உங்களை விசாரணை செய்வார் என்பதை
நீங்கள் அறிவீர்கள்.
11 தேவனுடைய மகத்துவம் (முக்கியத்
துவம்) உங்களை அச்சுறுத்துகிறது. நீங்கள்
அவரைக் கண்டு பயப்படுகிறீர்கள்.
12 உங்கள் வாக்குவாதங்கள் சாம்பலைப்
போல் எந்தப் பயனுமற்றவை
உங்கள் பதில்கள் சேற்றுக்குவியல்கள்
போல பலனற்றவை.
13 “அமைதியாயிருங்கள், என்னைப் பேச
விடுங்கள்! பிறகு எனக்கு நேரிடும்
அனைத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.
14 நான் என்னை ஆபத்திற்குட்படுத்தி என்
உயிரை என் கைகளில் எடுப்பேன்.
15 தேவன் என்னைக் கொன்றாலும் நான்
அவரைத் தொடர்ந்து நம்புவேன். அவருக்கு
முன்பாக என் பொருட்டு வாதாடுவேன்.
16 தேவன் என்னை வாழவிட்டால், அது
நான் அவரிடம் துணிந்து பேசியதன்
விளைவாகும். தீயவன் ஒருவனும் தேவனை
முகத்துக்கு முகம் பார்க்கத் துணிவதில்லை.
17 நான் சொல்கின்றவற்றிற்குக் கவனமாகச்
செவிகொடுங்கள். நான் விவரித்துத் கூற
அனுமதியுங்கள்.
18 நான் எனக்காக வாதாட தயாராயிருக்
கிறேன். எனது வாதங்களைக் கவனமாகச்
சொல்வேன்.நான் குற்றமற்றவன் என்று
தீர்க்கப்படுவேனென்று அறிவேன்.
19 நான் தவறென யாரேனும் நிரூபித்தால்
உடனே நான் வாய் பேசாதிருப்பேன்
(அமைதியாக இருப்பேன்)
20 “தேவனே, எனக்கு இரண்டு காரியங்
களைத் தாரும், அப்போது உம்மிடமிருந்து
ஒளிந்திருக்கமாட்டேன்.
21 என்னைத் தண்டிப்பதை நிறுத்தும்,
பயங்கரங்களால் என்னை அச்சுறுத்துவதை
நிறுத்தும்.
22 பின்பு என்னைக் கூப்பிடும், நான் பதில்
தருவேன். அல்லது என்னைப் பேச விடும்,
நீர் எனக்குப் பதில் தாரும்.
23 நான் எத்தனை பாவங்கள் செய்துள்
ளேன்? நான் என்ன தவறு செய்தேன்? என்
பாவங்களையும்
எனது தவறுகளையும் எனக்குக் காட்டும்.
24 தேவனே, ஏன் என்னைவிட்டு விலகு
கிறீர்? ஏன் உமது பகைவனைப்போல்
என்னை நடத்துகிறீர்?
25 என்னை அச்சுறுத்த முயன்றுக் கொண்
டிருக்கிறீரா? நான் காற்றில் பறக்கும் ஒரு
இலை மட்டுமேயாவேன். ஒரு சிறிய காய்ந்த
வைக்கோல் துண்டினை நீர் தாக்குகிறீர்.
26 தேவனே, எனக்கெதிராகக் கசப்பான
வற்றைக் கூறுகிறீர். நான் இளமையில்
செய்த பாவங்களுக்காக என்னை துன்புறச்
செய்கிறீரா?
27 என் பாதங்களின் நீர் விலங்குகளை
இட்டீர். நான் எடுக்கும் ஒவ்வோர் அடியை
யும் நீர் கண்ணோக்குகிறீர்.
28 எனது ஒவ்வோர் அசைவையும் நீர்
கண்ணோக்குகிறீர். அரித்துப்போகின்ற மரத்
தைப் போலவும், அந்த பூச்சிகளால்
அரிக்கப்படும் துணியைப்போலவும் நான்
சோர்ந்து அழிந்துப்போகிறேன்” என்றான்.
14 யோபு, “நாமெல்லோரும் மனித
ஜீவிகளே.* நம் வாழ்க்கை குறுகிய
தும் தொல்லைகள் நிரம்பியதுமாகும். 2 மனி
தனின் வாழ்க்கை ஒரு மலரைப்போன்றது.
அவன் விரைவாக வளருகிறான், பின்பு
மடிந்துப்போகிறான். மனிதனின் வாழ்க்கை
ஒரு நிழலைப்போன்றது. அது குறுகிய
காலம் இருந்து, பின்பு மறைந்துப்போகும்.
3 அது உண்மையே, ஆனால் ஒரு மனி
தனாகிய என்னைத் தேவன் நோக்கிப்
பார்ப்பாரா? நீர் என்னோடு நியாய சபைக்கு
வருவீரா? அங்கு நாம் இருவரும் நம்
விவாதங்களை முன் வைப்போம்.
4 “ஆனால் அழுக்குப்படிந்த ஒரு பொரு
ளுக்கும் தூய்மையான ஒரு பொருளுக்கு
மிடையே இருக்கும் ஒற்றுமை என்ன?
ஒன்றுமில்லை!
5 மனிதனின் வாழ்க்கை ஒரு எல்லை
உடையது. தேவனே, ஒரு மனிதன் எத்த
னைக் காலம் வாழ்கிறான் என்பதை நீர்
முடிவு செய்கிறீர். ஒரு மனிதனுக்கு அந்த
எல்லைகளை நீர் முடிவெடுக்கிறீர், எதுவும்
அதை மாற்ற முடியாது.
6 எனவே, தேவனே எங்களைக் கவனிப்
பதை நிறுத்தும். எங்களைத் தனித்துவிடும்.
எங்கள் காலம் முடியும் வரைக்கும் எங்கள்
கடின வாழ்க்கையை நாங்கள் வாழ விடும்.
7 “ஒரு மரத்திற்கும் நம்பிக்கை உண்டு. அது
வெட்டப்பட்டால், மீண்டும் வளரக்கூடும்.
அது புது கிளைகளைப் பரப்பியபடி நிற்கும்.
8 அதன் வேர்கள் பலகாலம் மண்ணிற்குள்
வளரும், அதன் அடிப்பகுதி புழுதியில்
மடியும்.
9 ஆனால் தண்ணீரினால் அது மீண்டும்
வளரும். புதுச்செடியைப் போன்று அதில்
கிளைகள் தோன்றும்.
10 ஆனால் மனிதன் மரிக்கும்போது, அவன்
அழிந்துப்போகிறான். மனிதன் மரிக்கும்
போது, அவன் காணாமற்போகிறான்.
11 நதிகள் வற்றிப்போகும் படியாகவும்கடல்
தண்ணீர் முழுவதும் வற்றிப்போகும்படியாக
தண்ணீர் இறைத்தாலும் மனிதன் மரித்த
வனாகவே கிடப்பான்.
12 ஒருவன் மரிக்கும்போது அவன் படுத்
திருக்கிறான், மீண்டும் எழுகிறதில்லை.
அவர்கள் எழும் முன்னே வானங்கள்
எல்லாம் மறைந்துபோகும். ஜனங்கள் அந்த
உறக்கத்திலிருந்து எழுவதேயில்லை.
13 “நீர் என் கல்லறையில் என்னை ஒளித்து
வைப்பீரென விரும்புகிறேன். நீர் உமது
கோபம் ஆறும் வரை என்னை அங்கு

மனித ஜீவிகள் பெண்ணிடமிருந்து பிறந்தவர்கள்.

ஒளித்து வைப்பீரென விரும்புகிறேன். பின்பு
என்னை நினைவுகூரும் காலத்தை நீர்
தேர்ந்தெடுக்கலாம்.
14ஒருவன் இறந்தால், அவன் மீண்டும்
வாழ்வானா? நான் விடுதலையாகும் வரை
எத்தனை காலமாயினும் காத்திருந்தேயாக
வேண்டும்!
15தேவனே, நீர் என்னைக் கூப்பிடுவீர்,
நான் உமக்குப்பதில் தருவேன். நீர் என்னை
சிருஷ்டித்தீர், நான் உமக்கு முக்கியமானவன்.
16நான் எடுக்கும் ஒவ்வோர் அடியையும்
நீர் கண்ணோக்குகிறீர். ஆனால், நீர் என்
பாவங்களை நினைவுக்கூர்வதில்லை.
17நீர் என் பாவங்களை ஒரு பையில்
கட்டிவைப்பீர். அதை முத்திரையிடும், அதை
வீசியெறிந்து போடும்!
18"பர்வதங்கள் விழுந்து நொறுங்கிப்
போகும். பெரும் பாறைகள் தளர்ந்து
உடைந்து விழும்.
19கற்களின் மீது பாயும் வெள்ளம்
அவற்றைக் குடையும். பெருவெள்ளம் நிலத்
தின் மேற்பரப்புத்துகளை அடித்துச் (இழுத்து)
செல்லும். தேவனே, அவ்வாறே ஒருவனின்
நம்பிக்கையை நீர் அழிக்கிறீர்.
20அவனை முற்றிலும் தோற்கடித்து,
பின்பு விலகிப் போகிறீர்.அவனைத் துயரங்
கொள்ளச் செய்து, மரணத்தின் இடத்திற்கு
என்றென்றைக்கும் அனுப்புகிறீர்.
21அவன் மகன்கள் பெருமையடையும்
போது, அவன் அதை அறியான்.அவன்
மகன்கள் தவறு செய்யும்போது, அவன்
அதைக் காணான்.
22அம்மனிதன் தனது உடம்பின் வலியை
மட்டுமே உணருகிறான், அவன் தனக்காக
மட்டுமே உரக்க அழுகிறான்" என்றான்.

எலிப்பாஸ் யோபுக்குப் பதில் கூறுகிறான்

15 அப்போது தேமானைச் சார்ந்த
எலிப்பாஸ் யோபுக்குப் பதிலாக,
2"யோபுவே, நீ உண்மையாகவே ஞான
முள்ளவனாக இருந்தால், நீ பிரயோஜனமற்ற
வெறும் வார்த்தைகளால் பதில் கூற
மாட்டாய். வெப்பமான காற்று நிரம்பிய
வனாக ஞானவான் இருக்கமாட்டான்.
3பொருளற்ற பேச்சுக்களாலும் தகுதியற்ற
வார்த்தைகளாலும் ஒரு ஞானவான்
விவாதிப்பானென்று நீ நினைக்கிறாயா?
4யோபுவே, நீ கூறும்படி நடந்தால், ஒரு
வனும் தேவனை மதித்து, அவரிடம்
ஜெபிக்கமாட்டான்.
5நீ கூறும் காரியங்கள் உனது பாவத்தைத்
தெளிவாகக் காட்டுகின்றன. யோபுவே,
உனது புத்திசாலித்தனமான சொற்களால்
உனது பாவங்களை நீ மறைக்க முயன்றுக்
கொண்டிருக்கிறாய்.
6நீ செய்வது தவறென நான் உன்னிடம்
நிரூபிக்கத் தேவையில்லை. உனது வாயி
னால் கூறும் சொற்களே உனது தவற்றைச்
சுட்டிக் காட்டுகின்றன. உனது சொந்த
உதடுகளே உனக்கு எதிராகப் பேசுகின்றன.
7"யோபுவே, பிறந்தவர்களில் நீதான்
முதல் மனிதன் என எண்ணுகிறாயா?
மலைகள் தோன்றும் முன்னே நீ பிறந்தாயா?
8நீ தேவனுடைய இரகசிய திட்டங்
களுக்குச் செவிசாய்த்தாயா? நீ மட்டுமே
ஞானமுள்ளவனென நினைக்கிறாயா?
9யோபுவே, உன்னைக் காட்டிலும் நாங்
கள் மிகுதியாக அறிவோம். உனக்குப்
புரிகின்றக் காரியங்களை நாங்கள் புரிந்து
கொள்கிறோம்.
10நரைமயிருள்ளோரும் வயது முதிர்ந்
தோரும் எங்களோடு ஒத்திருக்கிறார்கள்.
ஆம், உனது தந்தையைக் காட்டிலும் வயது
முதிர்ந்தோரும் எங்கள் பக்கத்தில் இருக்
கிறார்கள்.
11தேவன் உனக்கு ஆறுதல் கூற முயற்சிக்
கிறார், ஆனால் அது உனக்குப் போத
வில்லை. தேவனுடைய செய்தியை நயமாக
நாங்கள் உனக்குக் கூறினோம்.
12யோபுவே, ஏன் நீ புரிந்துகொள்ள
வில்லை? ஏன் நீ உண்மையைக் காண
இயலவில்லை?
13நீ கோபமான இந்தச் சொற்களைப்
பேசும்போது நீ தேவனுக்கு எதிராக இருக்
கிறாய்.
14"ஒரு மனிதன் உண்மையில் தூயவனாக
இருக்க முடியாது. பெண் வயிற்றில் பிறந்த
ஒருவன் நியாயமுள்ளவனாக இருக்க முடி
யாது.
15தேவன் அவரது தூதர்களைக்கூட*
நம்புகிறதில்லை. வானங்களும் அவரது
பார்வையில் தூய்மையானவை அல்ல.
16மனிதன் இன்னும் கேவலமானவன்,
மனிதன் அழுக்கானவனும் அழியக்கூடிய
வனும் ஆவான். தண்ணீரைப்போன்று
அவன் கொடுமையைப் பருகுகிறான்.
17"யோபுவே, எனக்குச் செவிகொடு, நான்
உனக்கு விவரிப்பேன். எனக்குத் தெரிந்ததை
நான் உனக்குக் கூறுவேன்.
18ஞானவான்கள் எனக்குக் கூறியவற்றை
நான் உனக்குச் சொல்வேன். ஞானவான்
களின் முற்பிதாக்கள் அவர்களுக்கு இவற்
றைக் கூறினார்கள். அவர்கள் எந்த
இரகசியங்களையும் என்னிடமிருந்து மறைக்
கவில்லை.
19அவர்கள் மட்டுமே அவர்களின் நாட்டில்
வாழ்ந்தார்கள். கடந்து செல்லும்போது
அந்நியர்கள் அங்கு இருக்கவில்லை. எனவே
ஒருவரும் அவர்களுக்கு வேடிக்கையான
கருத்துக்களைச் சொல்லவில்லை.
20தீயவன் வாழ்க்கை முழுவதும்
துன்புறுகிறான். கொடியவன் வரையறுக்கப்

தூதர்களை எழுத்தின் பிராகாரமாக, "பரிசுத்தமான ஒன்று" எனப் பொருள்படும்.

பட்ட அவன் ஆயுள் முழுவதும் துன்புறு
கிறான்.
21 ஒவ்வொரு சத்தமும் அவனை அச்சுறுத்
துகிறது, அவன் பாதுகாப்பாக இருப்பதாக
எண்ணும்போது அவனது பகைவன் அவ
னைத் தாக்குவான்.
22 தீயவன் நம்பிக்கையற்றுக் கலங்கு
கிறான், மரண இருளிலிருந்து தப்புவதற்கு
அவனுக்கு எந்த நம்பிக்கையுமில்லை.
அவனைக் கொல்லக் காத்துக்கொண்
டிருக்கும் வாள் ஒன்று எங்கோ உள்ளது.
23 அவன் அங்குமிங்கும் அலைந்துத் திரி
கிறான், ஆனால் அவன் உடல் பருந்து
களுக்கு இரையாகும். அவனது மரணம்*
மிக அருகாமையிலுள்ளது என்பதை அவன்
அறிகிறான்.
24 கவலையும் துன்பமும் அவனை
அச்சுறுத்தும் அவனை அழிக்கத் தயாரா
யிருக்கிற அரசனைப்போன்று அவை
அவனைத் தாக்கும்.
25 ஏனெனில், தீயவன் தேவனுக்குக்
கீழ்படிய மறுக்கிறான். அவன் தனது கை
முட்டியைத் தேவனுக்கு எதிராக உயர்த்தி,
சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு எதிராகச்
செயல்படுகின்றான். தோற்கடிக்க முயல்
கிறான்.
26 தீயவன் மிகவும் அடம்பிடிப்பவன்.
அவன் கெட்டியான, வலிமையான கேடயத்
தால் தேவனைத் தாக்க முயல்கிறான்.
27 “அவன் செல்வந்தனும் கொழுத்தவனாக
இருப்பான்,
28 ஆனால் அவன் ஊர் அழிக்கப்படும்,
அவன் வீடு பாழாகும், அவன் வீடு
வெறுமையாகும்,
29 தீயவன் பலகாலம் செல்வனாக இருக்க
மாட்டான். அவன் செல்வம் நிலைக்காது.
அவனது பயிர்கள் செழிப்பாக வளராது
30 தீயவன் இருளிலிருந்து தப்பமாட்டான்.
நோயினால் மடியும் இலைகளையும் காற்றி
னால் பறக்கடிக்கப்படும் இலைகளையும்
கொண்ட மரத்தைப் போலிருப்பான்.

31 தீயவன்தகுதியற்றவற்றைநம்பி தன்னை
மூடனாக்கிக்கொள்ளக் கூடாது. ஏனெனில்
அவன் எதையும் அடையமாட்டான்.
32 அவன் வாழ்க்கை முடியும் முன்பே,
தீயவன் வயதாகி வாடிப்போவான். என்றும்
பசுமையுற முடியாத, உலர்ந்த கிளையைப்
போல அவன் இருப்பான்.
33 இன்னும் பழுக்காத திராட்சைக் கனி
களை இழக்கின்ற திராட்சைக் கொடியைப்
போன்று தீயவன் இருப்பான். மொட்டுக்
களை இழக்கும் ஒலிவ மரத்தைப்போன்று
அம்மனிதன் இருப்பான்.
34 ஏனெனில் தேவனற்ற மனிதர்களுக்கு
எதுவுமில்லை (ஒன்றுமில்லை). பணத்தை
நேசிப்போரின் வீடுகள் நெருப்பால் அழியும்.
35 தீயனச் செய்து, தொல்லை விளை
விப்பதற்குத் தீயோர் வழிகளைத் திட்டமிடு
கிறார்கள். ஜனங்களை ஏமாற்றும் வழிகளை
அவர்கள் எப்போதும் திட்டமிடுகிறார்கள்”
என்று கூறினான்.

யோபு எலிப்பாசுக்குப் பதிலளிக்கிறான்

16 அப்போது யோபு பதிலாக,
2 “நான் இவற்றையெல்லாம் முன்பே
கேட்டிருக்கிறேன். நீங்கள் மூவரும் எனக்குத்
தொல்லையை அல்லாமல் ஆறுதலைத்
தரவில்லை.
3 உங்கள் நீண்ட பேச்சுகளுக்கு முடிவே
யில்லை! ஏன் தொடர்ந்து விவாதிக்கிறீர்கள்?
4 எனக்கு வந்த தொல்லைகள் உங்களுக்கு
ஏற்பட்டால் நீங்கள் சொல்வதையே நானும்
சொல்லக்கூடும். நானும் ஞானமுள்ள
காரியங் களை உங்களுக்குச் சொல்லி, என்
தலையை உங்களுக்கு நேர் அசைக்கக்கூடும்.
5 நான் கூறும் காரணங்களால் உங்களுக்கு
உற்சாகமூட்டி உங்களுக்கு நம்பிக்கையளிக்க
முடியும்.
6 “ஆனால் நான் கூறுபவை எதுவும்
என் வேதனையை அகற்ற முடியாது!
ஆயினும் மௌனமாய் இருப்பதிலும் பயன்
இல்லை.
7 தேவனே, உண்மையாகவே என்
பலத்தை எடுத்துப் போட்டீர். என் குடும்பம்
முழுவதையும் அழித்தீர்.
8 நீர் என்னை இணைத்து பலவீனமாக்கி
னீர் அதனால் நான் குற்றவாளியே என
ஜனங்கள் நினைக்கிறார்கள்.
9 தேவன், என்னைத் தாக்குகிறார், அவர்
என் மீது கோபங்கொண்டு, என் உடம்பைக்
கிழித்தெறிகிறார். தேவன் எனக்கெதிராக
அவரது பற்களைக் கடிக்கிறார். என் பகை
வனின் கண்கள் என்னை வெறுப்போடு
(பகையோடு) பார்க்கின்றன.
10 ஜனங்கள் என்னைச் சூழ்ந்து ஒன்றுக்
கூடி, என்னை பார்த்து நகைத்து, என்
முகத்தில் அறைகிறார்கள்.
11 தேவன் என்னைத் தீய ஜனங்களிடம்
ஒப்படைத்தார். அத்தீயர் என்னைக் காயப்
படுத்தும்படி விட்டார்.
12 எனக்கு எல்லாம் நல்லபடியாக இருந்
தன, ஆனால், பின்பு தேவன் என்னை
நசுக்கினார்! ஆம், அவர் என்னைக் கழுத்தில்
பிடித்து, என்னைத் துண்டுகளாக நொறுக்
கினார்! தேவன் என்னை இலக்காகப்
பயன்படுத்தினார்.
13 தேவனுடைய வில்வீரர்கள்* என்னைச்
சூழ்ந்து நிற்கிறார்கள். அவர் என் சிறுநீரகங்
கள்மேல் அம்புகளை எய்கிறார். அவர்

மரணம் எழுத்தின் பிரகாரமாக, “இருளின் நாள்” எனப் பொருள்படும்.

வில்வீரர்கள் போரில் வில்லையும் அம்பையும் பயன்படுத்தும் வீரர்கள்.

*இரக்கம் காட்டவில்லை. என் ஈரலின் பித்த**
தண்ணீரைத் தரையில் சிந்தச் செய்கிறார்.
14 *மீண்டும், மீண்டும் தேவன் என்னைத்*
தாக்குகிறார். யுத்தம் செய்யும் வீரனைப்
போல் அவர் என்மேல் பாய்கிறார்.
15 “*நான் மிகவும் துயரமுற்றிருக்கிறேன்,*
எனவே துயரத்தைக் காட்டும் இந்த ஆடை
களை அணிந்திருக்கிறேன். நான் இங்குத்
துகளிலும் சாம்பலிலும் உட்கார்ந்திருக்கி
றேன், நான் தோற்கடிக்கப்பட்டதாய் உணரு
கிறேன்.
16 *அழுது என் முகம் சிவந்திருக்கிறது.*
கருவளையங்கள் என் கண்ணைச் சுற்றிலும்
காணப்படுகின்றன.
17 *நான் யாரிடமும் கொடுமையாக நடந்துக்*
கொண்டதில்லை, ஆனால் இத்தீய காரியங்கள்
எனக்கு நேரிட்டுள்ளன. என் ஜெபங்கள்
தூய்மையும் நேர்மையுமானவை.
18 “*பூமியே, எனக்குச் செய்யப்பட்ட அநீதி*
களை மறைக்காதே. நியாயத்திற்கான என்
வேண்டுதல் (நிறுத்த) தடுக்கப்படாமல்
இருக்கட்டும்.
19 *இப்போதும் பரலோகத்தில் யாரேனும்*
இருந்தால், அவர்கள் எனக்காக பேசு
வார்கள். மேலிருந்து யாராவது எனக்காக
சாட்சி கூறுவார்கள்.
20 *என் கண்கள் தேவனுக்கு முன்னால்*
கண்ணீரைச் சொரிகையில் என் நண்பர்கள்
எனக்கு எதிராகப் பேசுகிறார்கள்.
21 *நண்பனுக்காக வாதாடுகின்ற ஒரு*
மனிதனைப்போன்று எனக்காகத் தேவனை
வேண்டுகிற ஒருவன் எனக்கு வேண்டும்!
22 “*சில ஆண்டுகளில் திரும்பமுடியாத*
அந்த இடத்திற்கு, (மரணம்) நான்
போவேன்.”

17 *என் ஆவி நொறுங்கிப் போயிற்று;*
நான் விட்டுவிலகத் தயாராயிருக்
கிறேன். என் வாழ்க்கை முடியும் நிலை
யிலுள்ளது. கல்லறை எனக்காகக் காத்துக்
கொண்டிருக்கிறது.
2 *ஜனங்கள் என்னைச் சூழ்ந்து நின்று,*
என்னைப் பார்த்து நகைக்கிறார்கள். அவர்
கள் என்னைக் கேலிச்செய்து, அவமானப்
படுத்துவதைப்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்.
3 “*தேவனே, நீர் என்னை ஆதரிக்கிறீர்*
என்பதை எனக்குக் காட்டும். வேறெவரும்
என்னை ஆதரிக்கமாட்டார்கள்.
4 *நீர் என் நண்பர்களின் மனத்தை*
மூடிவைத்திருக்கிறீர், அவர்கள் என்னை
புரிந்துக்கொள்ளார்கள். தயவுசெய்து அவர்
கள் வெற்றியடையாதபடிச் செய்யும்.
5 *ஜனங்கள் கூறுவதை நீர் அறிவீர்:*
‘ஒருவன் அவனது நண்பர்களுக்கு உதவு
வதற்காகத் தன் பிள்ளைகளைக் கூடப்
*பொருட்படுத்தமாட்டான்’** *ஆனால் என்*
நண்பர்களோ எனக்கெதிராகத் திரும்பியிருக்
கிறார்கள்.
6 *எல்லோருக்கும் ஒரு கெட்ட சொல்லாக,*
தேவன் என் பெயரை மாற்றியிருக்கிறார்.
ஜனங்கள் என் முகத்தில் உமிழ்கிறார்கள்.
7 *என் கண்கள் குருடாகும் நிலையில்*
உள்ளன ஏனெனில், நான் மிகுந்த துக்கமும்
வேதனையும் உள்ளவன். என் உடம்பு
முழுவதும் ஒரு நிழலைப்போல மெலிந்து
விட்டது.
8 *நல்லோர் இதைப்பற்றிக் கலங்கிப்*
போயிருக்கிறார்கள். தேவனைப் பற்றிக்
கவலையுறாத ஜனங்களுக்கு எதிராக, களங்க
மற்றோர் கலக்கமடைந்துள்ளனர்.
9 *ஆனால் நல்லோர் நல்ல வழியில்*
தொடர்ந்து வாழ்கிறார்கள். களங்கமற்றோர்
இன்னும் வலிமை பெறுவார்கள்.
10 “*ஆனால் நீங்கள் எல்லோரும் வாருங்*
கள், இது எனது தவறால் விளைந்ததே
எனக் காட்ட முயலுங்கள். உங்களில்
ஒருவரும் ஞானமுடையவன் அல்லன்.
11 *என் வாழ்க்கை கடந்து போகிறது, என்*
திட்டங்கள் அழிக்கப்பட்டன. என் நம்பிக்கை
போயிற்று.
12 *ஆனால் என் நண்பர்கள் குழம்பிப்*
போயிருக்கிறார்கள். அவர்கள் இரவைப்
பகலென்று நினைக்கிறார்கள். அவர்கள்
இருள் ஒளியை விரட்டிவிடுமென நினைக்
கிறார்கள்.
13 “*கல்லறையே என் புது வீடாகும் என*
நான் எதிர்பார்க்கலாம். இருண்ட கல்லறை
யில் என் படுக்கையை விரிக்கலாம் என
நான் எதிர்பார்க்கலாம்.
14 *நான் கல்லறையிடம், ‘நீயே என் தந்தை’*
என்றும் புழுக்களிடம், ‘என் தாய்’ அல்லது
‘என் சகோதரி’ என்றும் கூறலாம்.
15 *ஆனால் அதுவே என் ஒரே நம்பிக்கை*
யாயிருந்தால், அப்போது எனக்கு நம்பிக்கை
யே இல்லை! அதுவே என் ஒரே
நம்பிக்கையாக இருந்தால், அந்த நம்பிக்கை
நிறைவுப்பெறுவதை காண்பவர் யார்?
16 *என் நம்பிக்கை என்னோடு மறையுமோ?*
அது மரணத்தின் இடத்திற்குக் கீழே
போகுமா? நாம் ஒருமித்துத் துகளில் இறங்கு
வோமா?” *என்றான்.*

பில்தாத் யோபுவுக்குப் பதில் கூறுகிறான்

18 *சூகியனான பில்தாத் அப்போது*
பதிலாக:
2 “*யோபுவே, நீ எப்போது பேசுவதை*
நிறுத்துவாய்? அமைதியாயிருந்து கேளும்.

பித்தம் *ஈரலின் மேலிருக்கும் பித்தப் பையில் பித்த தண்ணீர் சுரக்கும். பித்தப்பையைப் பிளந்தால் பித்த தண்ணீர் சிந்தும். கசப்பானதும் வேதனை தருவதுமான நிகழ்ச்சியைத் தாங்கிக்கொள்வதை இது குறிக்கும்.*

ஜனங்கள் ... மாட்டான் *எழுத்தின் பிராகாரமாக, “அவன் தனது நண்பர்களுக்கு ஒரு பங்கைத் தர வாக்குறுதியளிக்கிறான். அவனது பிள்ளைகளின் கண்கள் குருடாகும்” எனப் பொருள்படும்.*

நாங்கள் சிலவற்றைச் சொல்லவிடும் (அனு
மதியும்).
3 நாங்கள் பசுக்களைப்போல் மூடரென
நீ நினைப்பதேன்?
4 யோபுவே, உனது கோபம் உன்னையே
துன்புறுத்துகிறது. உனக்காக ஜனங்கள்
பூமியைவிட்டுச் செல்லவேண்டுமா? உன்
னைத் திருப்திப்படுத்துவதற்காக தேவன்
பர்வதங்களை அசைப்பார் என்று நினைக்
கிறாயா?
5 “ஆம், தீயவனின் தீபம் அணைந்துப்
போகும். அவனது நெருப்பு எரிவதை
நிறுத்தும்.
6 வீட்டின் ஒளி இருளாகும். அவனருகே
ஒளிவிடும் விளக்கு அணைந்துவிடும்.
7 அவன் அடிகள் வலியதாகவும் விரை
வாகவும் இராது. ஆனால் அவன் மெது
வாகவும் சோர்வாகவும் நடப்பான். அவனது
சொந்த தீய திட்டங்களே அவனை விழச்
செய்யும்.
8 அவனது பாதங்கள் அவனைக் கண்ணிக்
குள் வழிநடத்தும். அவன் கண்ணிக்குள்
நடந்து அதிலே அகப்பட்டுக்கொள்வான்.
9 அவன் குதிகாலை ஒரு கண்ணிப்
பிடிக்கும். ஒரு கண்ணி அவனை இறுகப்
பிடிக்கும்.
10 தரையிலுள்ள ஒரு கயிறு அவனை
அகப்படுத்தும். அவன் வழியில் ஒரு கண்ணி
அவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கும்.
11 சுற்றிலும் பயங்கரம் அவனுக்காகக்
காத்துக்கொண்டிருக்கும். அவன் எடுக்கும்
ஒவ்வோர் அடியிலும் பயங்கள் அவனைத்
தொடரும்.
12 கெட்ட தொல்லைகள் அவனுக்காகப்
பசித்திருக்கும். அழிவும், கேடும் அவன்
விழும்போது அவனுக்காகத் தயாராக
இருக்கும்.
13 கொடிய நோய் அவனது தோலை
அரிக்கும். அது அவனது கரங்களையும்
கால்களையும் அழுகச்செய்யும்.
14 தீயவன் அவனது வீட்டின்
பாதுகாப்பிலிருந்து அகற்றப்படுவான். பயங்
கரங்களின் அரசனைச் சந்திக்க அவன்
அழைத்துச் செல்லப்படுவான்.
15 அவன் வீட்டில் ஒன்றும் மிஞ்சியிராது.
ஏனெனில், அவன் வீடு முழுவதும் எரியும்
கந்தகம் நிரம்பியிருக்கும்.
16 கீழேயுள்ள அவன் வேர்கள் உலர்ந்துப்
(காய்ந்து) போகும், மேலேயுள்ள அவன்
கிளைகள் மடிந்துபோகும்.
17 பூமியின் ஜனங்கள் அவனை நினைவுகூர
மாட்டார்கள். ஒருவனும் இனிமேல் அவனை
நினைத்துப்பார்க்க மாட்டார்கள்.
18 ஜனங்கள் அவனை ஒளியிலிருந்து
இருளுக்குள் தள்ளிவிடுவார்கள். அவர்கள்
அவனை இந்த உலகிற்கு வெளியே துரத்தி
விடுவார்கள்.
19 அவனுக்குப் பிள்ளைகளோ, பேரப்
பிள்ளைகளோ இருக்காது. அவன் குடும்பத்
தில் எவரும் உயிரோடு விட்டுவைக்கப்பட
மாட்டார்கள்.
20 மேற்கிலுள்ள ஜனங்கள் அத்தீயவனுக்கு
நிகழ்ந்ததைக் கேள்விப்படும்போது, அதிர்ச்சி
யடைவார்கள். கிழக்கிலுள்ள ஜனங்கள்
பயங்கர பீதியடைந்து வாயடைத்துப்
போவார்கள்.
21 தீயவனின் வீட்டிற்கு அது உண்மை
யாகவே நடக்கும். தேவனைப்பற்றிக்
கவலைப்படாதவனுக்கு இப்படியே நிகழும்!”
என்றான்.

யோபு பதில் கூறுகிறான்

19 அப்போது யோபு பதிலாக:
2 “எத்தனை காலம் நீங்கள் என்னைத்
துன்புறுத்தி, வார்த்தைகளால் என்னை
உடைப்பீர்கள்?
3 நீங்கள் இப்போது என்னைப் பத்துமுறை
இழிவுப் படுத்தியிருக்கிறீர்கள். நீங்கள்
என்னைத் தாக்கும்போது வெட்கமடைய
வில்லை?
4 நான் பாவம் செய்திருந்தாலும் அது
எனது தொல்லையாகும். அது உங்களைத்
துன்புறுத்தாது.
5 என்னைக் காட்டிலும் உங்களைச்
சிறந்தவர்களாக காட்ட நீங்கள் விரும்பு
கிறீர்கள். என் தொல்லைகள் என் சொந்தத்
தவறுகளால் நேர்ந்தவை என்று நீங்கள்
கூறுகிறீர்கள்.
6 ஆனால் தேவனே எனக்குத் தவ
றிழைத்தார். என்னைப் பிடிப்பதற்கு அவர்
ஒரு கண்ணியை வைத்தார்.
7 ‘அவர் என்னைத் துன்புறுத்தினார்!’
என நான் கத்துகிறேன். ஆனால் எனக்குப்
பதிலேதும் கிடைக்கவில்லை. நான் உரக்க
உதவிக்காகக் கூப்பிட்டாலும், நியாயத்
திற்காக வேண்டும் என் குரலை ஒருவரும்
கேட்கவில்லை.
8 தேவன் என் வழியை அடைத்ததால் நான்
தாண்டிச்செல்ல முடியவில்லை. அவர் என்
பாதையை இருளால் மறைத்திருக்கிறார்.
9 தேவன் என் பெருமையை எடுத்துப்
போட்டார். அவர் என் தலையின்
கிரீடத்தை (முடியை) எடுத்தார்.
10 தேவன் நான் அழியும் வரைக்கும்
என்னை எல்லாப் பக்கங்களிலுமிருந்து
தாக்குகிறார். வேரோடு வீழ்ந்த மரத்தைப்
போன்று அவர் என் நம்பிக்கையை
அகற்றினார்.
11 தேவனுடைய கோபம் எனக்கெதிராக
எரிகிறது. அவர் என்னைத் தமது பகைவன்
என்று அழைக்கிறார்.
12 தேவன் தமது படையை என்னைத்
தாக்குவதற்கு அனுப்புகிறார். என்னைத் தாக்
குவதற்கு என்னைச் சுற்றிலும் கோபுரங்
களை எழுப்புகிறார்கள். என் கூடாரத்தைச்

சுற்றிலும் அவர்கள் முற்றுகையிட்டிருக்
கிறார்கள்.
13“என் சகோதரர்கள் என்னை வெறுக்கும்
படி தேவன் செய்தார். என் நண்பர்களுக்கு
நான் ஒரு அந்நியனானேன்.
14என் உறவினர்கள் என்னை விட்டு
சென்றார்கள். என் நண்பர்கள் என்னை
மறந்துப்போனார்கள்.
15என்னை ஒரு அந்நியனைப் போலவும்
வெளிநாட்டினனைப் போலவும் என்
வீட்டிற்கு வரும் விருந்தினர்களும் பணி
விடைப் பெண்களும் பார்க்கிறார்கள்.
16நான் என் பணியாளைக் கூப்பிடும்
போது, அவன் பதில் தருவதில்லை. நான்
உதவிக்காகக் கெஞ்சும்போதும் என் பணி
யாள் பதில் தரமாட்டான்.
17என் மனைவி என் மூச்சின் வாசனை
யை வெறுக்கிறாள். என் சொந்த சகோ
தரர்கள் என்னை வெறுக்கிறார்கள்.
18சிறு குழந்தைகளும் என்னைக் கேலிச்
செய்கிறார்கள். நான் அவர்கள் அருகே
வரும்போது அவர்கள் கெட்டவற்றைச்
சொல்கிறார்கள்.
19என் நெருங்கிய நண்பர்கள் என்னை
வெறுக்கிறார்கள். நான் நேசிக்கும் ஜனங்கள்
கூட எனக்கெதிராகத் திரும்பியிருக்கிறார்கள்.
20“நான் மிகவும் மெலிந்துபோனேன். என்
தோல் எலும்போடு ஒட்டித் தொங்குகிறது.
எனக்குச் சற்றே உயிர் மீந்திருக்கிறது.
21“என் நண்பர்களே, எனக்கு இரங்குங்
கள்! எனக்கு இரங்குங்கள்! ஏனெனில்,
தேவன் எனக்கு எதிராக இருக்கிறார்.
22தேவன் செய்வதைப் போன்று நீங்கள்
ஏன் என்னைத் தண்டிக்கிறீர்கள்? என்னைத்
துன்புறுத்துவதால் நீங்கள் தளர்ந்துப்
போகவில்லையா?
23“நான் சொல்வதை யாரேனும் நினை
வில் வைத்து ஒரு புத்தகத்தில் எழுத
மாட்டீர்களா? என விரும்புகிறேன். என்
வார்த்தைகள் ஒரு சுருளில் எழுதப்படாதா?
என விரும்புகிறேன்
24நான் சொல்பவை என்றென்றும்
நிலைக்கும்படி ஈயத்தின்மேல் ஒரு இரும்புக்
கருவியால் பொறிக்கப்படவோ அல்லது
பாறையில் செதுக்கப்படவோ வேண்டுமென
விரும்புகிறேன்.
25என் மீட்பர் உயிரோடு இருக்கிறார்
என்று எனக்குத் தெரியும்! முடிவில் அவர்
பூமியின்மேல் எழுந்து நின்று என்னைக்
காப்பாற்றுவார்!
26நான் என் உடலைவிட்டுச் சென்றாலும்
(நான் உயிர் நீத்தாலும்), என் தோல்
அழிந்துப்போனாலும், பின்பு நான் என்
தேவனைக் காண்பேன் என அறிவேன்!
27என் சொந்த கண்களால் நான்
தேவனைக் காண்பேன்! நானே,
வேறெவருமல்ல, தேவனைக் காண்பேன்!
நான் எத்தனை உணர்ச்சி வசப்பட்டவனாக
உணருகிறேன் என்பதை என்னால் உங்க
ளுக்குச் சொல்ல முடியாது.
28“நீங்கள், ‘நாம் யோபுவைத் துன்புறுத்து
வோம். அவனைக் குற்றம் சாட்ட ஒரு
காரணத்தைக் காண்போம்’ என்று கூறலாம்.
29ஆனால் நீங்களே அஞ்சுவீர்கள். ஏனெ
னில், தேவன் குற்றவாளிகளைத் தண்டிக்
கிறார். தேவன் வாளைப் பயன்படுத்தி
உங்களைத் தண்டிப்பார். அப்போது
நியாயந்தீர்க்கும் காலம் ஒன்று உண்டு
என்பதை நீங்கள் அறிவீர்கள்” என்றான்.

சோப்பார் பதிலளிக்கிறான்

20 அப்போது நாகமாவின் சோப்பார்
பதிலாக:
2“யோபுவே, உன்னிடம் குழப்பமான
எண்ணங்கள் மிகுந்துள்ளன. எனவே நான்
உனக்குப் பதில் கூறவேண்டும். நான்
நினைத்துக்கொண்டிருப்பதை விரைந்து
உனக்குக் கூறவேண்டும்.
3நீ உனது பதில்களால் எங்களை
அவமானப்படுத்தினாய்! ஆனால் நான் ஞான
முள்ளவன் உனக்கு எவ்வாறு பதில்
தரவேண்டும் என்பதை நான் அறிவேன்.
4-5“தீயவனின் மகிழ்ச்சி நீண்டகாலம்
நிலைக்காது என்பதை நீ அறிவாய். ஆதாம்,
பூமியில் வந்த காலம் முதல் அதுவே
உண்மையாக உள்ளது. தேவனைப்பற்றிக்
கவலைப்படாதவனின் மகிழ்ச்சி குறுகிய
காலமே நிலைக்கும்.
6தீயவனின் பெருமை வானத்தை எட்ட
லாம், அவன் தலை மேகங்களைத்
தொடலாம்.
7அவன் தன் மலத்தைப் போலவே,
என்றென்றும் அழிக்கப்படுவான். அவனை
அறிந்த ஜனங்கள் ‘அவன் எங்கே?’ என்பார்
கள்.
8கனவைப் போன்று, அவன் பறந்துப்
போவான். ஒருவனும் அவனைக் கண்ட
டைய முடியாது. அவன் துரத்தப்பட்டு,
ஒரு கெட்ட கனவாய்* மறக்கப்படுவான்.
9அவனைப் பார்த்த ஜனங்கள் மீண்டும்
அவனைக் காணமாட்டார்கள். அவன்
குடும்பத்தினர் அவனை மீண்டும் பார்ப்ப
தில்லை.
10அவன் ஏழைகளிடமிருந்து எடுத்ததை
அத்தீயவனின் பிள்ளைகள் திரும்பக் கொடுப்
பார்கள். தீயவனின் சொந்தக் கைகளே
அவனது செல்வத்தைத் திருப்பிக் கொடுக்
கும்.
11அவன் இளைஞனாயிருந்த போது,
அவன் எலும்புகள் பெலனுள்ளவையாக
இருந்தன. ஆனால், உடம்பின் பிற பகுதி
களைப் போன்று, அவை விரைவில்
துகளில் கிடக்கும்.
12“கெட்ட மனிதனின் வாய் தீமையை

கெட்ட கனவு “இரவில் வரும் காட்சி.”

இனிமையாக ருசிக்கும். அவன் அதை
முழுவதும் சுவைப்பதற்காக அவனது
நாவின் அடியில் வைப்பான்.
13கெட்ட மனிதன் தீமையில் களிப்பான்.
அவன் அதை விட்டுவிட விரும்பமாட்டான்.
அது அவனது வாய்க்குள்ளிருக்கும் இனிப்
பைப் போலிருக்கும்.
14ஆனால் அத்தீமை அவன் வயிற்றில்
நஞ்சாகும். பாம்பின் விஷத்தைப்போன்று
அது அவனுள் கசப்பான விஷமாக மாறும்.
15தீயவன் செல்வங்களை விழுங்கியிருக்
கிறான். ஆனால் அவன் அவற்றை
வாந்தியெடுப்பான். தீயவன் அவற்றை
வாந்தியெடுக்கும்படி தேவன் செய்வார்.
16பாம்புகளின் விஷத்தைப்போன்று, தீய
வன் பருகும் பானமும் இருக்கும். பாம்பின்
நாக்கு அவனைக் கொல்லும்.
17அப்போது, அத்தீயவன் தேனாலும்
பாலாலும் ஓடுகிற நதிகளைக் கண்டு களிக்க
மாட்டான்.
18-19தீயவன், அவன் சம்பாதித்த செல்வங்
களையெல்லாம் திருப்பித் தரும்படி
கட்டாயப் படுத்தப்படுவான். தன்னுடைய
உழைப்பின் பலனை அவன் அனுபவிக்க
அனுமதிக்கமாட்டான். அவன் மற்றவர்கள்
கட்டியிருந்த வீடுகளை அபகரித்துக் கொண்
டான்.
20“தீயவன் ஒருபோதும் திருப்தியடை
வதில்லை. அவனது செல்வம் அவனைக்
காப்பாற்றாது.
21அவன் சாப்பிடுகிறபோது, எதுவும்
மீதியாகிருப்பதில்லை. அவன் வெற்றி தொட
ராது.
22தீயவனுக்கு மிகுதியாக இருக்கும்போது
அவன் துன்பங்களால் அழுத்தப்படுவான்.
அவனது சிக்கல்கள் அவன்மேல் வந்து
அழுத்தும்!
23தீயவன் அவனுக்குத் தேவையான
வற்றையெல்லாம் உண்ட பின்பு, அவனுக்
கெதிராக தேவன் அவரது எரியும்
கோபத்தை வீசுவார். தீயவன் மேல் தேவன்
தண்டனையைப் பொழிவார்.
24தீயவன் இரும்பு வாளுக்குத் தப்பி ஓடி
விடலாம், ஆனால் ஒரு வெண்கல அம்பு
அவனை எய்து வீழ்த்தும்.
25அவன் உடம்பின் வழியாக அந்த
வெண்கல அம்புச் சென்று முதுகின்
வழியாக வெளிவரும். அதன் பிரகாசிக்கும்
(ஒளி விடும்) முனை அவனது ஈரலைப்
பிளக்கும். அவன் பயங்கர பீதி அடைவான்.
26அவன் பொக்கிஷங்கள் அழிந்துபோகும்.
எந்த மனிதனும் பற்ற வைக்காத ஒரு
நெருப்பு அவனை அழிக்கும். அவன் வீட்டில்
மீந்திருக்கும் ஒவ்வொரு பொருளையும் அந்த
நெருப்பு அழிக்கும்.
27தீயவன் குற்றவாளி என்று பரலோகம்
நிரூபிக்கும் (நிறுவும்) பூமி அவனுக்கெதிராக
சாட்சிச் சொல்லும்.
28தேவனுடைய கோப வெள்ளத்தில்
அவன் வீட்டிலுள்ளவை எல்லாம் இழுத்துச்
செல்லப்படும்.
29தீயோருக்குத் தேவன் இவற்றைச்
செய்யத் திட்டமிடுகிறார். அவர்களுக்கு
அதையே கொடுக்கத் தேவன் திட்ட
மிடுகிறார்” என்றான்.

யோபு பதில் கூறுகிறான்

21 அப்போது யோபு பதிலாக:
2“நான் சொல்வதற்குச் செவிகொடும்.
அதுவே, நீர் எனக்கு ஆறுதல் கூறும்
வகையாயிருக்கும்.
3நான் பேசும்போது பொறுமையாயிரும்.
நான் பேசி முடித்தபின்பு, நீங்கள் என்னைக்
கேலிச் செய்யலாம்.
4“நான் ஜனங்களைப்பற்றிக் குறை கூற
வில்லை. நான் பொறுமையாயிராததற்குத்
தக்க காரணம் இருக்கிறது.
5என்னைக் கண்டு அதிர்ச்சியடையும்,
உம் கையை வாயில் வைத்து, அதிர்ச்சியால்
என்னைப் பாரும்!
6எனக்கு நேர்ந்ததைப்பற்றி நான்
எண்ணும்போது, நான் அஞ்சுகிறேன், என்
உடம்பு நடுங்குகிறது!
7தீயோர் ஏன் நீண்ட ஆயுளோடு வாழ்
கிறார்கள்? அவர்கள் ஏன் நீண்ட
ஆயுளுடையவர்களாகவும் வெற்றிபெற்றவர்
களாகவும் இருக்கிறார்கள்?
8அவர்கள் பிள்ளைகள் தங்களோடு
வளர்வதைத் தீயோர் பார்க்கிறார்கள். அவர்
களின் பேரப்பிள்ளைகளைப் பார்க்கும்படித்
தீயோர் வாழ்கிறார்கள்.
9அவர் வீடுகள் பாதுகாப்பாக உள்ளது,
அவர்கள் பயப்படுவதில்லை. தீயோரைத்
தண்டிப்பதற்குத் தேவன் ஒரு கோலையும்
பயன்படுத்துவதில்லை.
10அவர்களின் காளைகள் புணரத் தவறு
வதில்லை. அவர்களின் பசுக்கள் கன்றுகளை
ஈனுகின்றன. அக்கன்றுகள் பிறக்கும்போது
மடிவதில்லை.
11ஆட்டுக்குட்டிகளைப்போல்
விளையாடுவதற்குத் தீயோர் அவர்கள்
குழந்தைகளை அனுப்புகிறார்கள். அவர்கள்
குழந்தைகள் சுற்றிலும் நடனமாடுகிறார்கள்.
12தம்புறா, யாழ், குழல் ஆகியவற்றின்
ஓசைக்கேற்ப அவர்கள் பாடி, நடனமாடுகி
றார்கள்.
13தீயோர் அவர்கள் வாழ்க்கையில்
வெற்றிக் காண்கிறார்கள். பின்பு, அவர்கள்
மடிந்து துன்பமின்றி அவர்களின் கல்ல
றைக்குப் போகிறார்கள்.
14ஆனால் தீயோர் தேவனை நோக்கி,
‘எங்களை விட்டு விடும்! நாங்கள் செய்வதற்
கென நீர் விரும்புவதைப்பற்றி நாங்கள்
கவலைப்படுவதில்லை!’ என்கிறார்கள்.

[15]தீயோர், 'சர்வ வல்லமையுள்ள தேவன்
யார்? நாம் அவருக்குச் சேவை செய்யத்
தேவையில்லை! அவரிடம் ஜெபிப்பது
உதவாது, என்கிறார்கள்!
[16]"அது உண்மையே, தீயோர் அவர்களாக
வெற்றிக் காண்பதில்லை. அவர்கள்
அறிவுரையை நான் பின்பற்ற முடியாது.
[17]ஆனால், தேவன் தீயோரின் ஒளியை
எத்தனை முறை அணைக்கிறார்? எத்தனை
முறை தீயோருக்குத் துன்பம் நேர்கிறது?
எப்போது தேவன் அவர்களிடம் கோபங்
கொண்டு, அவர்களைத் தண்டித்தார்?
[18]காற்று புல்லைப் பறக்கடிப்பதைப்
போலவும், பெருங்காற்று தானியத்தின் உமி
யைப் பறக்கடிப்பதைப் போலவும், தேவன்
தீயோரைப் பறக்கடிக்கிறாரா?
[19]ஆனால் நீங்கள், 'தந்தையின் பாவத்
திற்கென்று தேவன் ஒரு பிள்ளையைத்
தண்டிக்கிறார்' என்கிறீர்கள். இல்லை!
தேவன் தாமே தீயோனைத் தண்டிக்கட்டும்.
அப்போது அத்தீயோன், அவன் செய்த
பாவங்களுக்குத் தண்டனை பெற்றதை
அறிவான்!
[20]பாவம் செய்தவன் தான் பெற்ற
தண்டனையைப் பார்க்கட்டும் சர்வ வல்ல
மையுள்ள தேவனின் கோபத்தை அவன்
உணரட்டும்.
[21]தீயவனின் வாழ்க்கை முடியும் போது,
அவன் மடிகிறான், அவன் தன்பின்னே
விட்டுச் செல்லும் குடும்பத்தைப்பற்றி அவன்
கவலைப்பட வேண்டியதில்லை.

[22]"ஒருவனும் தேவனுக்கு அறிவைப்
போதிக்க முடியாது. உயர்ந்த இடங்களிலிருக்
கிற ஜனங்களையும் கூட தேவன் நியாயந்
தீர்க்கிறார்.
[23]ஒரு முழுமையும் வெற்றிகரமுமான
வாழ்க்கைக்குப் பின் ஒருவன் மரிக்கிறான்.
அவன் முழுக்க பாதுகாப்பான, சுகமான
வாழ்க்கை வாழ்கிறான்.
[24]அவன் உடல் போஷாக்குடையதாக
உள்ளது. அவன் எலும்புகள் இன்னும்
வலிவோடு காணப்படுகின்றன.
[25]ஆனால், மற்றொருவன் கடின வாழ்க்கை
வாழ்ந்து, கசப்பான ஆன்மாவோடு மரிக்
கிறான். அவன் நல்லவற்றில் களிப்படைந்த
தில்லை.
[26]இறுதியில், இருவரும் ஒருமித்துத்
மண்ணில் கிடப்பார்கள். அவர்கள் இருவரை
யும் பூச்சிகள் சூழ்ந்துக்கொள்ளும்.
[27]"ஆனால், நீங்கள் நினைப்பதை நான்
அறிவேன், என்னைத் துன்புறுத்த நீங்கள்
விரும்புகிறீர்கள் என அறிவேன்.
[28]நீங்கள், 'நல்லவன் ஒருவனின் வீட்டை
எனக்குக் காட்டுங்கள். இப்போது, தீயோர்
வாழுமிடத்தை எனக்குக் காட்டுங்கள்'
என்கிறீர்கள்.
[29]"நீங்கள் நிச்சயமாக பயணிகளிடம் பேசி
யிருக்கலாம் நிச்சயமாக நீங்கள் அவர்களின்
கதைகளை ஏற்கலாம்.
[30]அழிவு வரும்போது தீயோர் தவிர்க்கப்
பட்டுள்ளார்கள். தேவன் தமது கோபத்தைக்
காட்டும் போது, அவர்கள் அதற்குத்
தப்பியிருக்கிறார்கள்.
[31]யாரும் தீயவனை அவன் செய்த
தவறுகளுக்காக அவனெதிரே விமர்சிக்கிற
தில்லை. அவன் செய்த தீமைகளுக்காக
ஒருவரும் அவனைத் தண்டிக்கிறதில்லை.
[32]அத்தீயவனைக் கல்லறைக்குச் சுமந்துச்
செல்லும்போது, அவன் கல்லறையருகே ஒரு
காவலாளி நிற்கிறான்.
[33]எனவே பள்ளத்தாக்கின் மண்ணும்
அத்தீயவனுக்கு இன்பமாயிருக்கும். அவன்
கல்லறையின் அடக்கத்திற்கு ஆயிரக்
கணக்கான ஜனங்கள் செல்வார்கள்.
[34]"எனவே நீங்கள் உங்கள் வெறுமையான
வார்த்தைகளால் எனக்கு ஆறுதல்கூற
முடியாது. உங்கள் பதில்கள் எனக்கு உதவ
மாட்டாது!" என்றான்.

எலிப்பாஸ் பதில் கூறுகிறான்

22 அப்போது தேமானின் எலிப்பாஸ்
பதிலாக,
[2]"தேவனுக்கு நமது உதவி தேவையா?
இல்லை! மிகுந்த ஞானவானும் உண்மை
யாகவே தேவனுக்குப் பயன்படுவதில்லை.
[3]நீ தக்க நெறியில் வாழ்ந்தது தேவனுக்கு
உதவுமா? இல்லை! நீ தேவனைப் பின்பற்று
வதால் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு
ஏதேனும் கிடைக்குமா? இல்லை!
[4]"யோபுவே, ஏன் தேவன் உன்னைத்
தண்டித்து, உன்னில் குறை காண்கிறார்.
நீ அவரை தொழுதுகொள்வதாலா?
[5]இல்லை! நீ மிகுதியாகப் பாவம்
செய்திருப்பதால்தான். யோபுவே, நீ பாவம்
செய்வதை நிறுத்துவதில்லை!
[6]நீ உன் சகோதரன் ஒருவனுக்குக்
கொஞ்சம் பணத்தைக் கடனாகக் கொடுத்து,
அவன் உனக்குத் திருப்பித் தருவதற்கு
அடையாளமாக எதையேனும் கொடுக்க
வற்புறுத்தியிருக்கலாம். நீ கடனுக்கு ஈடாக
ஏதேனும் ஏழை மனிதனின் ஆடைகளை
எடுத்திருக்கலாம். இல்லையெனில்,
எக்காரணமுமின்றி அவ்வாறு செய்திருக்க
லாம்.
[7]சோர்ந்த, பசித்த ஜனங்களுக்கு நீ
தண்ணீரும், உணவும் கொடாது இருந்திருக்க
லாம்.
[8]யோபுவே, உனக்கு மிகுதியான விளை
நிலங்கள் உண்டு, ஜனங்கள் உன்னை
மதிக்கிறார்கள்.
[9]விதவைகளுக்கு எதுவும் கொடாது
அவர்களை நீ துரத்தியிருக்கலாம், யோபுவே,
நீ அநாதைகளை ஏமாற்றியிருக்கலாம்.
[10]ஆகவே, உன்னைச் சுற்றிலும் கண்ணி

கள் அமைந்துள்ளன, திடீர்பயம் உன்னை
அஞ்சவைக்கிறது.
11 ஆகவே, நீ பார்க்க முடியாதபடி மிகுந்த
இருள் சூழ்ந்திருக்கிறது, வெள்ளப் பெருக்கு
உன்னை மூடுகிறது.
12 “தேவன் பரலோகத்தின் மிக உயர்ந்த
இடத்தில் வாழ்கிறார். விண்மீன்கள் எத்
தனை உயரத்தில் உள்ளன எனப்பாருங்கள்.
மிக உயர்ந்த நட்சத்திரத்தை தேவன் கீழே
நோக்கிப் பார்க்கிறார்.
13 ஆனால் யோபுவே, ‘நீ சொல்லலாம்
தேவன் என்ன அறிவார்? இருண்ட மேகங்
கள் வழியாகப் பார்த்து, தேவன் நம்மை
நியாயந்தீர்க்கக் கூடுமா?
14 அடர்த்தியான மேகங்கள் அவரை
நம்மிடமிருந்து மறைக்கின்றன, எனவே,
அவர் வானத்தின் விளிம்பைத் தாண்டி
நடக்கிறபோது நம்மைப் பார்க்க முடி
வதில்லை’ எனக் கூறுவாய்.
15 “யோபுவே, பல காலம் முன்பு தீயோர்
நடந்த அந்தப் பழைய பாதையில் நீ
நடந்துக் கொண்டிருக்கிறாய்.
16 அவர்கள் இறக்க வேண்டிய காலத்திற்கு
முன்னரே, அத்தீயோர் அழிக்கப்பட்டார்கள்.
அவர்கள் வெள்ளப் பெருக்கில் அடித்துச்
செல்லப்பட்டார்கள்.
17 அவர்கள் தேவனைப் பார்த்து, ‘எங்
களைத் தனித்து விட்டு விடும்! சர்வ
வல்லமையுள்ள தேவன் எங்களை என்னச்
செய்ய முடியும்!’ என்பார்கள்.
18 நற்காரியங்களால் அவர்கள் வீடுகளை
நிரப்பியவர் தேவனே! இல்லை, என்னால்
தீயோரின் அறிவுரையைப் பின்பற்ற முடி
யாது.

19 அவர்கள் அழிவதை நல்லோர் காண்
பார்கள். அந்த நல்ல ஜனங்கள் மகிழ்ச்சி
யடைவார்கள். களங்கமற்ற ஜனங்கள்
தீயோரைக் கண்டு நகைப்பார்கள்,
20 ‘உண்மையாகவே நம் பகைவர்கள்
அழிக்கப்பட்டார்கள். நெருப்பு அவர்களின்
செல்வத்தைத் கொளுத்துகிறது!’
21 “இப்போது, யோபுவே, உன்னைத்
தேவனுக்குக் கொடுத்து அவரோடு சமா
தானம் செய்துக்கொள். இதைச் செய், உனக்கு
நல்லவை பல வாய்க்கும்.
22 அவரது போதனையை ஏற்றுக்கொள்.
அவர் சொல்வதைக் கவனமாகக் கேள்.
23 யோபுவே, சர்வ வல்லமையுள்ள தேவ
னிடம் திரும்பி வா, உன் பழைய நிலைக்கு
அழைத்துச் செல்லப்படுவாய் ஆனால், நீ
உனது வீட்டிலிருந்து தீமையை அகற்ற
வேண்டும்.
24 உனது பொன்னை நீ தூசியாகக்
கருதவேண்டும். பள்ளத்தாக்கின் பாறை
களைப்போல, உனது உயர்ந்த பொன்னைக்
கருதவேண்டும்.
25 சர்வ வல்லமையுள்ள தேவனே,
உனக்குப் பொன்னாகட்டும் அவரே உனக்கு
வெள்ளிக் குவியல் ஆகட்டும்.
26 அப்போது நீ சர்வ வல்லமையுள்ள
தேவனுக்கு களிகூருவாய். அப்போது நீ
தேவனை நோக்கிப் பார்ப்பாய்.
27 நீ அவரிடம் ஜெபிப்பாய். அவர் உன்
னைக் கேட்பார். நீ செய்வதாக உறுதியளித்த
காரியங்களை, அப்போது நீ செய்யமுடியும்.
28 நீ ஏதேனும் செய்யத் தீர்மானித்தால்,
அது வெற்றியடையும், உனது எதிர்காலம்
ஒளிமயமாக இருக்கும்.
29 தேவன் பெருமையுள்ளோரை வெட்க
மடையச் செய்கிறார். ஆனால் தேவன்
எளியோருக்கு உதவுகிறார்.
30 அப்போது நீ தவறு செய்யும் ஜனங்
களுக்கு உதவ முடியும். நீ தேவனிடம்
ஜெபிப்பாய் அவர் அந்த ஜனங்களுக்கு
மன்னிப்பார். ஏனெனில் நீ அத்தனை
பரிசுத்தமாக இருப்பாய்” என்றான்.

யோபு பதில் கூறுகிறான்

23 அப்போது யோபு பதிலாக:
2 “நான் இன்றைக்கு இன்னும் மனங்
கசந்து முறையிடுகிறேன். ஏனெனில் நான்
இன்னும் துன்புற்றுக் கொண்டிருக்கிறேன்.
3 எங்கே தேவனைப் பார்க்கக் கூடுமென
நான் அறிந்திருக்க வேண்டுமென்று விரும்பு
கிறேன். தேவனிடம் போகும் வழியை
அறிய விரும்புகிறேன்.
4 நான் தேவனிடம் என் நியாயத்தை
விளக்குவேன். நான் களங்கமற்றவனெனக்
காட்டும் விவாதங்களால் என் வாய் நிரம்பி
யிருக்கும்.
5 என் விவாதங்களுக்குத் தேவன் எவ்
வாறு பதிலளிப்பார் என்று அறிவேன்.
தேவனுடைய பதில்களைப் புரிந்து கொள்
வேன்.
6 தேவன் எனக்கெதிராக அவரது வல்ல
மையைப் பயன்படுத்துவாரா? இல்லை
அவர் எனக்குச் செவிகொடுப்பார்!
7 நான் ஒரு நேர்மையான மனிதன். என்
கதையை நான் கூற, தேவன் அனுமதிப்பார்.
அப்போது என் நீதிபதி என்னை விடுதலை
யாக்குவார்!
8 “ஆனால் நான் கிழக்கே போனால்,
அங்கே தேவன் இல்லை. நான் மேற்கே
போனால், அங்கும் நான் தேவனைக்
காணேன்.
9 தேவன் வடக்கே பணி செய்யும்போது,
நான் அவரைப் பார்க்க முடியவில்லை.
தேவன் தெற்கே திரும்பும்போதும், நான்
அவரைக் காணவில்லை
10 ஆனால் தேவன் என்னை அறிவார்.
அவர் என்னைப் பரிசோதித்துக் கொண்
டிருக்கிறார், நான் பொன்னைப்போன்று
தூயவனெனக் காண்பார்.
11 தேவன் விரும்புகிறபடியே நான் எப்
போதும் வாழ்ந்திருக்கிறேன். நான்

தேவனைப் பின்பற்றுவதை நிறுத்திய
தேயில்லை.
12நான் தேவனுடைய கட்டளைகளுக்கு
எப்போதும் கீழ்ப்படிகிறேன். என் உண
வைக் காட்டிலும்* அதிகமாக தேவனுடைய
வாயிலிருந்து வரும் வார்த்தைகளை நான்
நேசிக்கிறேன்.
13“ஆனால் தேவன் மாறுகிறதில்லை. ஒரு
வனும் தேவனுக்கெதிராக நிற்கமுடியாது.
தேவன் தான் விரும்புகின்றவற்றையெல்லாம்
செய்கிறார்.
14தேவன் எனக்கென்று அவர் திட்ட
மிட்டவற்றைச் செய்வார். எனக்காக வேறு
பல திட்டங்களையும் அவர் வைத்திருக்
கிறார்.
15அதனாலே நான் தேவனுக்குப்
பயந்திருக் கிறேன். இக்காரியங்களை நான்
புரிந்துக் கொள்கிறேன். ஆகையால் நான்
தேவனுக்குப் பயந்திருக்கிறேன்.
16தேவன் என் இருதயத்தை இளைக்கச்
(சோர்வடைய) செய்கிறார், நான் என்
தைரியத்தை இழக்கிறேன். சர்வ வல்லமை
யுள்ள தேவன் என்னை அஞ்சச் செய்கிறார்.
17என் முகத்தை மூடும் கருமேகத்தைப்
போன்று எனக்கு நேர்ந்த தீயகாரியங்கள்
உள்ளன. ஆனால் அந்த இருள் என்னை
அடக்காது.

24 “சர்வ வல்லமையுள்ள தேவன்,
ஜனங்களின் வாழ்வில் கேடுகள்
நிகழும் காலத்தை அறிந்தபோதும் அவர்
அதற்குப் பரிகாரம் செய்யும் காலத்தை
அவரைப் பின்பற்றுவோர் அறியமுடியாம
லிருப்பது ஏன்?
2“அயலானின் நிலத்தின் பகுதியை
அடைவதற்காக ஜனங்கள் எல்லைக் குறிப்பு
களை மாற்றுகிறார்கள். ஜனங்கள் மந்தை
களைத் திருடி, வேறு மேய்ச்சல் நிலங்
களுக்கு அழைத்துச் செல்கிறார்கள்.
3பெற்றோரற்ற அனாதைப் பிள்ளை
களுக்குச் சொந்தமான கழுதையை அவர்கள்
திருடுகிறார்கள். விதவை தான் பட்ட
கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை
அவளது பசுவைக் கவர்ந்து சென்று
விடுகிறார்கள்.
4ஏழைகள் வீடின்றி ஓரிடத்திலிருந்து
மற்றோர் இடத்திற்கு அலையும்படி வற்புறுத்
துகிறார்கள். தீயோரிடமிருந்து அந்த
ஏழைகள் தங்களை ஒளித்துக்கொள்ளும்படி
கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.
5“பாலைவனத்தில் உணவு தேடி
அலையும் காட்டுக் கழுதைகளைப்போல்
ஏழைகள் இருக்கிறார்கள். அவர்கள் உணவு
தேடுவதற்காக அதிகாலையில் எழுந்திருக்
கிறார்கள். அவர்களின் குழந்தைகளுக்காக
உணவு பெறும் பொருட்டு அவர்கள்
மாலையில் வெகு நேரம் வரை
உழைக்கிறார்கள்.
6வயல்களில் வைக்கோலும் புல்லும்
வெட்டியபடி ஏழைகள் இரவில் வெகுநேரம்
உழைக்கவேண்டும். வயல்களில் திராட்சைப்
பழங்களைப் பறித்துச் சேர்ப்பவர்களாய்,
அவர்கள் செல்வந்தர்களுக்காக உழைக்க
வேண்டும்.
7இரவு முழுவதும் ஆடையின்றி ஏழைகள்
தூங்கவேண்டும். குளிரிலிருந்து காப்பதற்கு
அவர்களுக்குப் போர்வைகள் இல்லை.
8அவர்கள் பர்வதங்களில் மழையால்
நனைந்திருக்கிறார்கள். குளிரிலிருந்து காப்
பதற்கு அவர்களுக்கு எதுவும் இல்லை.
எனவே அவர்கள் பெரிய பாறைகளுக்கு
அருகே அண்டிக் கொள்கிறார்கள்.
9தீயோர் பால் மணம் மாறாத
குழந்தையை அதன் தாயிடமிருந்து பிரிக்
கிறார்கள். கடனுக்கு உறுதிப்பொருளாக
அவர்கள் ஒரு ஏழையின் குழந்தையை
எடுத்துக் கொள்கிறார்கள்.
10ஏழைகளுக்கு ஆடையில்லை. எனவே
அவர்கள் வேலை செய்யும்போது நிர்வாண
மாயிருக்கிறார்கள். தீயோருக்கு அவர்கள்
தானியக்கட்டுகளைச்* சுமந்துச் செல்
கிறார்கள். ஆனால் அந்த ஏழைகள் பசியோ
டிருக்கிறார்கள்.

11ஏழைகள் ஒலிவ எண்ணெயைப் பிழிந்
தெடுக்கிறார்கள். திராட்சைரசம் பிழியும்
இடத்தில்* அவர்கள் திராட்சைக்கனிகளின்
மேல் நடக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப்
பருகுவதற்கு எதுவுமில்லை.
12நகரத்தில் மரிப்போரின் துயரக்குரல்
களை நீ கேட்க முடியும். துன்புறும்
அந்த ஜனங்கள் உதவிக்காக குரலெழுப்பு
கிறார்கள். ஆனால் தேவன் செவி சாய்ப்ப
தில்லை.
13“சிலர் ஒளிக்கு எதிராகக் கலகம்
செய்கிறார்கள். தேவன் விரும்புவது எது
வென அவர்கள் அறிய விரும்பமாட்டார்கள்.
தேவன் விரும்புகிறபடி அவர்கள் வாழ
மாட்டார்கள்.
14ஒரு கொலைகாரன் அதிகாலையில்
எழுந்து திக்கற்ற ஏழைகளைக் கொல்கிறான்.
இரவில் அவன் ஒரு திருடனாகிறான்.
15விபச்சாரம் செய்பவன் (தகாத நெறியில்
ஒழுகுபவன்) இரவுக்காகக் காத்திருக்கிறான்.
‘யாரும் என்னைப் பார்க்கமாட்டார்கள்’

உனவைக் காட்டிலும் எழுத்தின் பிரகாரமாக “என்னுடைய வழக்கமான பழக்கத்தைக் காட்டிலும், வழக்கமான பழக்கத்தில் சாப்பாடு சாப்பிடுகிற நேரம் முதலானவைகளைச் சேர்த்து கொள்ளலாம்.”

தானியக்கட்டுகள் கட்டி வைத்திருக்கும் தானியக் கதிர்கள்.

திராட்சை பிழியும் இடம் திராட்சைப் பழங்களிலிருந்து சாறு எடுக்கும் இடம். சில வேளைகளில் பூமியிலுள்ள பாறையில் காணப் படும் ஓர் ஆழமற்ற துவாரமாகவே அந்த இடம் இருக்கும்.

என அவன் நினைக்கிறான். ஆயினும்
அவன் தனது முகத்தை மூடிக்கொள்கிறான்.
16 இரவில் இருள் சூழ்ந்திருக்கும் போது,
தீயோர் ஜனங்களின் வீடுகளை உடைத்து
உள்ளே நுழைகிறார்கள். ஆனால் பகலொளி
யில், அவர்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே
இருந்துகொண்டு பூட்டிக்கொள்கிறார்கள்.
அவர்கள் ஒளியைவிட்டு விலகியிருக்
கிறார்கள்.
17 தீயோருக்கு மிக இருண்ட இரவுகள்
காலை நேரத்தைப் போன்றது. ஆம், அந்த
மரண இருளின் பயங்கரத்தை அவர்கள்
நன்றாக அறிவார்கள்!
18 "வெள்ளப் பெருக்கில் அடித்துச் செல்லப்
படும் பொருள்களைப் போன்று தீயோர்
அகற்றப்படுவார்கள். அவர்களுக்குச் சொந்த
மான நிலம் சபிக்கப்பட்டது, எனவே
அவர்கள் தங்கள் வயல்களிலிருந்து திராட்
சைக் கனிகளைத் திரட்டமாட்டார்கள்.
19 குளிர் காலத்துப் பனியிலிருந்து வரும்
தண்ணீரை, வெப்பமும், உலர்ந்ததுமான
காலம் கவர்ந்து விடும். எனவே அந்தப்
பாவிகள் கல்லறைக்குக் கொண்டு செல்லப்
படுவார்கள்.
20 தீயவன் மரிப்பான், அவனது சொந்த
தாயார் கூட அவனை மறந்து விடுவார்.
அவன் உடலைத் தின்னும் புழுக்களே,
அவனை விரும்புகிறவளாயிருக்கும். ஜனங்
கள் அவனை நினைவுகூர மாட்டார்கள்.
எனவே அத்தீயவன் மரத்துண்டைப்
போன்று உடைந்துபோவான்
21 குழந்தைகளற்ற பெண்களைத் (மலடி
களை) தீயோர் துன்புறுத்துவர். கணவர்
களை இழந்த பெண்களுக்கு (விதவை
களுக்கு) உதவ அவர்கள் மறுக்கிறார்கள்.
22 ஆற்றலுள்ள மனிதர்களை அழிக்க,
தீயோர் தங்கள் ஆற்றலைப் பயன்படுத்து
கிறார்கள். தீயோர் ஆற்றல் பெறக்கூடும்,
ஆனால், அவர்களுக்குத் தங்கள் சொந்த
வாழ்க்கையின் மீது நிச்சயமில்லை.
23 தீயோர் குறுகியகாலம் பாதுகாப்பாகவும்
ஆபத்தின்றியும் உணரலாம். தேவன் அவர்
களை கவனித்துக் கொண்டிருக்கிறார்.
24 தீயோர் சிலகாலம் வெற்றியடையலாம்.
ஆனால் அவர்கள் அழிந்துப்போவார்கள்.
தானியத்தைப் போன்று அவர்கள் அறுக்கப்
படுவார்கள். அத்தீய ஜனங்கள் பிறரைப்
போலவே எல்லோராலும் வெட்டி வீழ்த்தப்
படுவார்.கள்
25 "இவை உண்மையென நான் வாக்குறுதி
யளிக்கிறேன்! நான் பொய் கூறியதாக
யார் நிரூபிக்கக் கூடும்? நான் தவறிழைத்
தேனென யார் காட்டக்கூடும்?" என்றான்.

பில்தாத் யோபுக்குப் பதில் கூறுகிறான்

25 சூகியனான பில்தாத் பதிலாக:
2 "தேவனே அரசாள்பவர். ஒவ்வொரு
மனிதனையும் அவருக்கு பயந்து மதிக்கச்
செய்கிறார். தேவன் தமது உன்னதமான
இடத்தில் சமாதானமாக வைக்கிறார்.
3 அவரது நட்சத்திரங்களை* எவரும்
எண்ண முடியாது. தேவனுடைய வெளிச்சம்
எல்லோர் மேலும் உதிக்கிறது.
4 தேவனுக்கு முன்பாக நீதிமான் யார்
இருக்க முடியும்? மனித இனத்தில்* ஒருவனும்
உண்மையில் தூயவனாக இருக்க முடியாது.
5 தேவனுடைய கண்களுக்கு சந்திரன் ஒளி
யுடையதோ அல்ல. நட்சத்திரங்களும் அவ
ருடைய பார்வையில் தூயவை அல்ல.
6 ஜனங்கள் இன்னும் தூய்மையில் குறைந்த
வர்கள். பூச்சியைப்* போன்றும், புழுக்
களைப் போன்றும் பயனற்றவர்கள்!"
என்றான்.

யோபு பில்தாதுக்குப் பதில் தருகிறான்

26 அப்போது யோபு பதிலாக,
2 "பில்தாத், சோப்பார், எலிப்பாஸ்
ஆகியோரே, சோர்வற்று நலிந்த இம்மனித
னுக்கு நீங்கள் எப்படி உதவிசெய்தீர்கள்?
ஆம், நீங்கள் உண்மையிலேயே நல்ல
ஊக்கமூட்டுபவர்களாக இருந்திருக்கிறீர்கள்!
3 ஆம், ஞானமற்றவனுக்கு நீங்கள்
அற்புதமான அறிவுரையைத் தந்திருக்
கிறீர்கள்! நீங்கள் எத்தனை ஞானவான்கள்
என்பதை உண்மையாகவே காட்டியிருக்
கிறீர்கள்!*
4 இவற்றைச் சொல்ல உங்களுக்கு
உதவியவர் யார்? யாருடைய ஆவி உங்
களுக்கு எழுச்சியூட்டியது?
5 "பூமிக்கு அடியிலுள்ள வெள்ளங்களில்
மரித்தோரின் ஆவிகள் பயத்தால் நடுங்கு
கின்றன.
6 ஆனால் தேவனால் மரணத்தின் இடத்தில்
தெளிவாகப் பார்க்க முடியும். மரணம்*
தேவனிடமிருந்து மறைந்திருக்கவில்லை.
7 வெறுமையான இடத்தில் தேவன்
வடக்கு வானத்தைப் பரப்பினார். வெற்றிடத்
தின் மேல் தேவன் பூமியைத் தொங்க
விட்டார்.
8 தேவன் அடர்ந்த மேகங்களை தண்ணீ
ரால் நிரப்புகிறார். மிகுந்த பாரம் மேகங்

அவரது நட்சத்திரங்கள் "அவரது சேனைகள்." தேவனுடைய விண்ணின் படைகளை இது குறிக்கும். எல்லாத் தூதர்களையும் அல்லது வானின் எல்லா விண்மீன்களையும் இது குறிப்பிடலாம்.

மனித இனம் "பெண்ணின் வயிற்றில் பிறப்பவர்கள்."

பூச்சிகள் புழுவைப்போன்ற ஒரு பூச்சி, ஈயாக மாறுவது பொதுவாக, இதனை பிணத்தின் மீதும் அழுகிய பொருள்களிலும் காணலாம்.

வாக்கியம் 2-3 யோபு இங்கே சொல்வதைப்போல் உண்மையில் அர்த்தம் கொள்ளவில்லை. யோபு பலியிடப்படுகிறான். அவன் இதனை அவ்வாறு அர்த்தம்கொள்ளவில்லை என்பதைப்போல் பேசுகிறான்.

மரணம் "அபெத்தோன் அல்லது அழிவு" (பார்க்க: வெளிப்படுத்தின விசேஷம் 9:11).

களை உடைத்துத் திறக்காதபடி தேவன் பார்க்கிறார்.
9முழு நிலாவின் முகத்தை தேவன் மூடு
கிறார். அவர் தமது மேகங்களை அதன்
மீது விரித்து அதைப் போர்த்துகிறார்.
10தேவன் ஒரு எல்லைக் கோடுபோன்ற
வளையத்தை கடலில் வரைந்து ஒளியும்,
இருளும் சந்திக்கும்படிச் செய்தார்.
11தேவன் பயமுறுத்தும்போது வானைத்
தாங்கும் அஸ்திவாரங்கள் அச்சத்தால்
நடுங்கு கின்றன.
12தேவனுடைய வல்லமை கடலை அமை
திப்படுத்துகிறது. தேவனுடைய ஞானம்
ராகாபின் உதவியாளர்களை அழித்தது.
13தேவனுடைய மூச்சு வானங்களைத்
தெளிவாக்கும். தப்பிச்செல்ல முயன்ற பாம்
பைத் தேவனுடைய கை அழித்தது.*
14தேவன் செய்கிற வியக்கத்தக்க காரியங்
களில் இவை சிலவே. தேவனிடமிருந்து
ஒரு சிறிய இரகசிய ஒலியையே நாம்
கேட்கிறோம். தேவன் எத்தனை மேன்மை
யானவரும் வல்லமையுள்ளவரும் என்பதை
ஒருவனும் உண்மையாகப் புரிந்துகொள்ள
முடியாது" என்றான்.

27 பின்பு யோபு தன் விரிவுரையைத்
தொடர்ந்தான். அவன்,
2"உண்மையாகவே, தேவன்உயிரோடிருக்
கிறார். தேவன் உண்மையாக வாழ்வதைப்
போல, அவர் உண்மையாக என்னோடு
அநீதியாய் நடக்கிறார். ஆம், சர்வ வல்லமை
யுள்ள தேவன் என் வாழ்க்கையைக்
கசப்பாக்கினார்.
3ஆனால் என்னில் உயிருள்ள வரை
யிலும் தேவனுடைய உயிர்மூச்சு என்
மூக்கில் இருக்கும் மட்டும்
4என் உதடுகள் தீயவற்றைப் பேசாது,
என் நாவு ஒருபோதும் பொய் கூறாது.
5நீங்கள் சொல்வது சரியென நான் ஏற்றுக்
கொள்ள மாட்டேன். நான் மரிக்கும் நாள்
மட்டும், நான் களங்கமற்றவன் என்று
தொடர்ந்துச் சொல்வேன்.
6நான் செய்த நல்லவற்றைத் கெட்டியாகப்
(இறுகப்) பிடித்துக்கொள்வேன். நியாயமாக
நடப்பதை விட்டுவிட மாட்டேன். நான்
வாழும்வரை என் மனச்சாட்சி என்னை
உறுத்தாது.
7"ஜனங்கள் எனக்கெதிராக எழுந்து
நிற்கிறார்கள். தீயோர் தண்டிக்கப்படுவதைப்
போல என் பகைவர்கள் தண்டனை
பெறுவார்கள் என நம்புகிறேன்.
8ஒருவன் தேவனைப்பற்றிக் கவலைப்படா
விட்டால், அவன் மரிக்கும்போது, அவ
னுக்கு ஒரு நம்பிக்கையுமில்லை. தேவன்
அவன் உயிரை எடுக்கும்போது, அம்மனித
னுக்கு நம்பிக்கை எதுவுமில்லை.
9அத்தீயவனுக்குத் தொல்லைகள் விளை
யும், அவன் தேவனை நோக்கி உதவி
வேண்டுவான். ஆனால் தேவன் அவனுக்குச்
செவிசாய்க்க மாட்டார்!
10சர்வ வல்லமையுள்ள தேவனிடம் பேசு
வதில் அவன் களிப்படைந்திருக்க வேண்டும்.
எப்போதும் அம்மனிதன் தேவனிடம் ஜெபம்
செய்திருக்கவேண்டும்.
11"தேவனுடைய வல்லமையைக் குறித்து
நான் உங்களுக்குப் போதிப்பேன். சர்வ
வல்லமையுள்ள தேவனுடைய திட்டங்களை
நான் உங்களிடம் மறைக்கமாட்டேன்.
12உங்கள் சொந்தக் கண்களால் தேவ
னுடைய வல்லமையைக் கண்டிருக்கிறீர்கள்.
எனவே அந்தப் பயனற்ற காரியங்களை
நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்?
13தீயோருக்காகத் தேவன் திட்டமிட்டது
இதுவே சர்வ வல்லமையுள்ள தேவனிட
மிருந்து கொடியோர் இதையே பெறு
வார்கள்.
14தீயவனுக்குப் பல பிள்ளைகள் இருக்க
லாம். ஆனால் அவனது பிள்ளைகள் மரிப்
பார்கள். தீயவனின் பிள்ளைகளுக்கு உண்
பதற்கு போதிய உணவு இராது.
15அவனது எல்லாப் பிள்ளைகளும்
மரிப்பார்கள். அவனது விதவை அவனுக்
காகத் துக்கப்படமாட்டாள்.
16தீயோனுக்குத் துகளைப்போன்று மிகுதி
யான வெள்ளி கிடைக்கலாம். களிமண்
குவியலைப்போன்று அவனிடம் பல ஆடை
கள் இருக்கலாம்.
17ஆனால் அவனது ஆடைகள் நல்ல
வனுக்குக் கிடைக்கும். களங்கமற்ற ஜனங்கள்
அவனது வெள்ளியைப் பெறுவார்கள்.
18தீயவன் ஒரு வீட்டைக் கட்டலாம், ஆனால்
அது நீண்டகாலம் நிலைக்காது. அது
ஒரு சிலந்தி வலையைப் போன்றும்,
காவலாளியின் கூடாரத்தைப் போன்றும்
இருக்கும்.
19தீயவன் ஒருவன் படுக்கைக்குப் போகும்
போது, செல்வந்தனாக இருக்கலாம். ஆனால்
அவனது கண்களை அவன் திறக்கும்போது,
எல்லா செல்வங்களும் மறைந்திருக்கும்.
20அவன் அச்சமடைவான். அது வெள்ளப்
பெருக்கைப் போன்றும், புயல்வீசி எல்லா
வற்றையும் அடித்துச் செல்வதைப்போன்றும்
இருக்கும்.
21கிழக்குக் காற்று அவனை அடித்துச்
செல்லும், அவன் அழிந்துபோவான். புயல்
அவன் வீட்டிலிருந்து அவனை இழுத்துச்
செல்லும்.
22புயலின் வல்லமையிலிருந்து தீயவன்
ஓடிப்போக முயல்வான் ஆனால், இரக்க
மின்றி புயல் அவனைத் தாக்கும்.
23தீயவன் ஓடிப்போகும்போது, மனிதர்கள்
கைகொட்டுவார்கள். தீயவன் வீட்டைவிட்டு

தப்பி ... ழித்தது "தப்பும் மிருகம்." பாம்பு என்பது ராகாபிற்கு மற்றொரு பெயராக இருக்கலாம்.

ஓடுகிறபோது, அவர்கள் அவனைப் பார்த்து சீட்டியடிப்பார்கள்.

28 “வெள்ளியை ஜனங்கள் பெறும் சுரங்கங்கள் உண்டு, ஜனங்கள் பொன்னை உருக்கிப் புடமிடும் (தூயதாக்கும்) இடங்கள் உண்டு.

2 மனிதர்கள் நிலத்திலிருந்து இரும்பை வெட்டியெடுக்கிறார்கள், செம்பு பாறையிலிருந்து உருக்கி எடுக்கப்படுகிறது.

3 வேலையாட்கள் குகைகளுக்குள் விளக்குகளை எடுத்துச்செல்கிறார்கள். அவைகள் குகைகளின் ஆழமான பகுதிகளில் தேடுகிறார்கள். ஆழ்ந்த இருளில் அவர்கள் பாறைகளைத் தேடிப் பார்க்கிறார்கள்.

4 தாது இருக்கும் பகுதிகளைத் தேடி, வேலையாட்கள் நிலத்தினுள் ஆழமாகத் தோண்டுகிறார்கள். ஜனங்கள் வசிக்காத (வாழாத) தூரமான இடங்களிலும், ஒருவரும் சென்றிராத இடங்களிலும், அவர்கள் நிலத்தினுள் ஆழமாகப் போகிறார்கள். மற்ற ஜனங்களைக் காட்டிலும் ஆழமான இடங்களில், அவர்கள் கயிறுகளிலிருந்து தொங்குகிறார்கள்.

5 நிலத்தின் மேல் உணவு விளைகிறது, ஆனால் நிலத்திற்குக் கீழே, அனைத்தும் நெருப்பினால் உருக்கப்பட்டதுபோல, அது வேறு மாதிரியாகத் தோன்றுகிறது.

6 நிலத்தின் கீழே இந்திர நீலக்கற்கள்* காணப்படும். அங்குத் தூயப் பொன் பொடிகள் உண்டு.

7 நிலத்தின் கீழுள்ள பாதைகளைப்பற்றிக் காட்டுப் பறவைகள் கூட அறியாது. அந்த இருண்ட பாதைகளை வல்லூறும்* பார்த்ததில்லை.

8 காட்டு மிருகங்கள் அப்பாதையில் நடந்ததில்லை. சிங்கங்கள் அவ்வழியில் பயணம் செய்ததில்லை.

9 வேலையாட்கள் மிகக் கடினமான பாறைகளைத் தோண்டுகிறார்கள். அப்பணியாட்கள் பர்வதங்களை தோண்டி அதனை வெட்டாந் தரையாக்குகிறார்கள்.

10 வேலையாட்கள் பாறைகளினூடே நீர்க்கால்களை வெட்டுகிறார்கள். எல்லா பாறைகளின் பொக்கிஷங்களையும் அவர்கள் பார்க்கிறார்கள்.

11 பணியாட்கள் தண்ணீரைத் தடை செய்ய, அணைகளைக் கட்டுகிறார்கள். அவர்கள் மறை பொருளை வெளிச்சத் திற்குக் கொண்டுவருகிறார்கள்.

12 “ஆனால் ஒருவன் ஞானத்தை எங்கே காண்பான்? நாம் எங்கு புரிந்து கொள்ளுதலைக் காணமுடியும்?

13 ஞானம் எத்தனை விலையுயர்ந்தது என நாம் அறியோம். பூமியின் ஜனங்கள் நிலத்தைத் தோண்டி, ஞானத்தைக் கண்டடைய முடியாது.

14 ஆழமான சமுத்திரம், ‘ஞானம் இங்கு என்னிடம் இல்லை’ என்கிறது. கடல், ‘ஞானம் இங்கு என்னிடம் இல்லை’ என்கிறது.

15 மிகத்தூய பொன்னாலும் கூட, உங்களால் ஞானத்தை வாங்கமுடியாது! ஞானத்தை வாங்கப் போதுமான அளவு வெள்ளி இவ்வுலகில் இராது!

16 ஓபீரின் தங்கத்தாலோ, கோமேதகத்தாலோ, இந்திர நீலக்கல்லாலோ, நீங்கள் ஞானத்தை வாங்கமுடியாது.

17 ஞானம் பொன் அல்லது படிகத்தைக் காட்டிலும் சிறப்பானது! பொன்னில் பதிக்கப்பெற்ற விலையுயர்ந்த கற்களால் ஞானத்தை வாங்க முடியாது.

18 பவளம், சூரியகாந்தம் ஆகியவற்றிலும் ஞானம் உயர்ந்தது. சிவந்தக் கற்களைக் காட்டிலும் ஞானம் விலையுயர்ந்தது.

19 எத்தியோப்பியா நாட்டின் புஷ்பராகம் ஞானத்தைப் போன்று விலைமதிப்புடையதல்ல. தூயப் பொன்னால் உங்களால் ஞானத்தை வாங்கமுடியாது.

20 “எனவே ஞானம் எங்கிருந்து வருகிறது? எங்கு நாம் புரிந்துகொள்ளுதலைக் காண முடியும்?

21 பூமியின் உயிரினங்களுக்கு எல்லாம் ஞானம் மறைந்திருக்கிறது. வானத்துப் பறவைகள் கூட ஞானத்தைக் காண முடியாது.

22 மரணமும் அழிவும், ‘நாங்கள் ஞானத்தைக் கண்டதில்லை. நாங்கள் அதைக் குறித்த வதந்திகளைக் காதினால் மட்டும் கேட்டோம்’ என்கின்றன.

23 “தேவன் மட்டுமே ஞானத்தின் வழியை அறிகிறார். தேவன் மட்டுமே ஞானம் இருக்குமிடத்தை அறிகிறார்.

24 பூமியின் இறுதிப் பகுதிகளையும் தேவனால் பார்க்க முடிகிறது. வானின் கீழுள்ள எல்லாவற்றையும் தேவன் பார்க்கிறார்.

25 தேவன் காற்றிற்கு அதன் வல்லமையை அளித்தார். கடல்களை எத்தனை பெரிதாக படைக்கவேண்டுமென்று தேவன் முடிவெடுத்தார்.

26 எங்கே மழையை அனுப்புவதென்றும், இடிமுழக்கங்களை எங்கே செலுத்துவதென்றும் தேவன் முடிவெடுக்கிறார்.

27 தேவன் ஞானத்தைக் கண்டு, அதைப் பற்றி யோசித்தார். ஞானத்தின் மதிப்பைத் தேவன் கண்டு, அதனை ஏற்றுக்கொண்டார்.

28 தேவன் மனிதரை நோக்கி, “கர்த்தருக்கு பயப்படுங்கள், அவரை மதியுங்கள். அதுவே ஞானம் ஆகும். தீமைச் செய்யாதீர்கள் அதுவே புரிந்துகொள்ளும் திறன் ஆகும்!” என்றார்.

இந்திர நீலக்கற்கள் மிக அபூர்வமான, விலையுயர்ந்த கல்.

வல்லூறு பருந்தைப்போன்ற ஒரு வகைப் பறவை.

யோபு அவனது பேச்சைத் தொடர்கிறான்

29 யோபு அவனுடைய பேச்சைத்
தொடர்ந் தான்.
2 யோபு: “தேவன் என்னைக் கண்காணித்
துக் கவனித்து வந்தபோது, பல மாதங்
களுக்கு முன்பு இருந்தாற்போன்று என்
வாழ்க்கை அமையாதா என விரும்புகிறேன்.
3 அந்நாட்களில் தேவனுடைய ஒளி என்
மீது பிரகாசித்ததால், நான் இருளின் ஊடே
நடக்க முடிந்தது. தேவன் நான் வாழ
வேண்டிய சரியான வழியைக் காண்பித்தார்.
4 நான் வெற்றிகரமானவனாகவும், தேவன்
எனக்கு நெருங்கிய நண்பராகவும் இருந்த
நாட்களை நான் விரும்புகிறேன்.
அந்நாட்களில் தேவன் என் வீட்டை
ஆசீர்வதித்தார்.
5 சர்வ வல்லமையுள்ள தேவன் என்னோ
டிருந்தும், என் பிள்ளைகள் என்னருகே
இருந்ததுமான காலத்தை நான் விரும்பு
கிறேன்.
6 என் வாழ்க்கை மிக நன்றாக இருந்த
காலம் அது. நான் பாலேட்டில் என்
கால்களைக் கழுவினேன், சிறந்த எண்
ணெய்கள் என்னிடம் ஏராளம் இருந்தன.
7 “நான் நகரவாயிலுக்குச் சென்று, பொது
ஜனங்கள் கூடும் இடத்தில் நகர மூப்பர்
களுடன் வீற்றிருந்த நாட்கள் அவை.

8 அங்கு எல்லா ஜனங்களும் எனக்கு
மதிப்பளித்தார்கள்! நான் வருவதைப்
பார்க்கும்போது இளைஞர்கள் என் பாதை
யிலிருந்து (எனக்கு வழிவிட்டு) விலகி
நின்றார்கள். முதியோர் எழுந்து நின்றனர்.
என்னை அவர்கள் மதித்ததைக் காட்டும்
பொருட்டு அவர்கள் எழுந்தனர்.
9 ஜனங்களின் தலைவர்கள் பேசுவதை
நிறுத்தினார்கள். பிறரும் அமைதியாயிருக்
கும்படி அவர்கள் தங்கள் கைகளை வாய்
களில் வைத்தார்கள்.
10 மிக முக்கியமான தலைவர்கள் கூட
தங்கள் சத்தத்தைக் குறைத்து (தாழ்ந்த
தொனியில்) பேசினார்கள். ஆம், அவர்கள்
நாவு வாயின் மேல் அன்னத்தில் ஒட்டிக்
கொண்டாற் போலத் தோன்றிற்று.
11 ஜனங்கள் எனக்குச் செவி
கொடுத்தார்கள், என்னைப்பற்றி நல்ல
காரியங்களைச் சொன்னார்கள்.
12 ஏனெனில், ஏழை உதவிக்காக
கூப்பிட்டபோது, நான் உதவினேன். நான்
பெற்றோரற்ற பிள்ளைகளுக்கும், கவனிப்
பாரற்ற பிள்ளைகளுக்கும் உதவினேன்.
13 கெட்டுப்போன மனிதன் என்னை
ஆசீர்வதித்தான். உதவி தேவைப்பட்ட
விதவைகளுக்கு நான் உதவினேன்.
14 நேர்மையான வாழ்க்கையை நான்
ஆடையாக உடுத்தியிருந்தேன். நியாயம்
எனக்கு அங்கியாகவும், தலைப்பாகையா
கவும் அமைந்தது.
15 குருடர்களுக்கு நான் கண்களானேன்.
அவர்கள் போகவேண்டிய இடத்திற்கு வழி
நடத்தினேன். முடவருக்கு நான் காலானேன்.
அவர்கள் போகவேண்டிய இடத்திற்கு அவர்
களைச் சுமந்து சென்றேன்.
16 நான் ஏழைகளுக்குத் தந்தையைப்
போன்றிருந்தேன். நான் அறிந்திராத ஜனங்
களுக்கு உதவினேன். நியாயசபையில்
அவர்களின் வழக்கு வெற்றிப்பெற உதவி
னேன்.
17 நான் தீயோரின் ஆற்றலை அழித்தேன்.
அவர்களிடமிருந்து களங்கமற்றோரைக் காப்
பாற்றினேன்.
18 “என் குடும்பத்தினர் என்னைச் சூழ்ந்
திருக்க வயது முதிர்ந்தவனாக நீண்ட காலம்
வாழ்வேன் என எண்ணியிருந்தேன்.
19 பனிப் படர்ந்த கிளைகளும் தண்ணீரை
மிகுதியாகப் பெற்ற வேர்களையுமுடைய
ஆரோக்கியமான செடியைப் போல நானும்
ஆரோக்கியமாயிருப்பேன் என எண்ணி
யிருந்தேன்.
20 என் பெலன் தொடர்ந்து புதுப்பிக்கப்
பட்டது. என் கையிலுள்ள வில் புதுப் பெலன்
கொண்டது.
21 “கடந்தக் காலத்தில், ஜனங்கள் எனக்குச்
செவிகொடுத்தார்கள். அவர்கள் எனது
அறிவுரைக்காகக் காத்திருந்தபோது அமைதி
யாக இருந்தார்கள்.
22 நான் பேசி முடித்தப் பின்பு, எனக்குச்
செவிகொடுத்த ஜனங்கள், அதற்குமேல்
எதையும் கூறவில்லை. என் வார்த்தைகளை
அவர்கள் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டனர்.
23 மழைக்காக காத்திருப்பதைப்போல நான்
பேசுவதற்காக ஜனங்கள் காத்திருந்தார்கள்.
வசந்த காலத்தில் தரை மழையை
உறிஞ்சுவதுபோல, அவர்கள் என் வார்த்தை
களை குடித்தார்கள்.
24 நான் அந்த ஜனங்களோடு சேர்ந்து
சிரித்தேன். அவர்களால் அதை நம்ப
முடியவில்லை. என் புன்னகை அவர்களுக்கு
நல்லுணர்வைக் கொடுத்தது.
25 நான் ஜனங்களுக்குத் தலைவனாக
இருந்தும் கூட, நான் அந்த ஜனங்
களோடிருப்பதைத் தேர்ந்தெடுத்தேன். பாளை
யத்தில் தனது சேனைகளோடு வீற்றிருக்கும்
அரசனைப் போன்று,
நான் துயரமுற்ற ஜனங்களுக்கு ஆறுதல்
சொல்லிக்கொண்டிருந்தேன்.

30 ஆனால் இப்போது என்னைக் காட்டி
லும் இளைஞர்கள் கூட என்னைக்
கேலிச் செய்கிறார்கள். அவர்களின் தந்தை
களை நான் என் மந்தையைக் காக்கும்
நாய்களோடே வைக்கவும் வெட்கப்பட்டிருப்
பேன்.
2 அந்த இளைஞர்களின் தந்தைகள் எனக்கு
உதவமுடியாதபடிச் சோர்ந்திருக்கிறார்கள்.
அவர்கள் வயது முதிர்ந்தவர்கள், அவர்

களின் களைத்துப்போன தசைநார்கள் வலி
மையும் ஆற்றலுமற்றுக் காணப்படுகின்றன.
3அவர்கள் மரித்தவர்களைப் போலிருக்
கிறார்கள்- அவர்கள் உண்பதற்கு எதுவுமில்
லாமல் பட்டினியாயிருக்கிறார்கள். எனவே
அவர்கள் பாலைவனத்தின் உலர்ந்த
அழுக்கை உண்கிறார்கள்.
4அவர்கள் பாலைவனத்திலுள்ள உப்புத்
தாவரங்களைப் பறித்தெடுக்கிறார்கள். மரத்
தின் வேர்களை அவர்கள் தின்றார்கள்.
5அவர்கள் பிற ஜனங்களிடமிருந்து
துரத்தப்பட்டார்கள். அவர்கள் கள்ளர் என
ஜனங்கள் அவர்களை உரத்தக் குரலில்
சத்தமிட்டார்கள.
6அவர்கள் உலர்ந்த ஆற்றுப் படுகை
களிலும், மலைப்பக்கத்துக் குகைகளிலும்
நிலத்தின் துவாரங்களிலும் வாழவேண்டும்.
7அவர்கள் புதர்களில் ஊளையிடுகிறார்
கள். முட்புதர்களின் கீழே அவர்கள்
ஒதுங்கியிருக்கிறார்கள்.
8தங்கள் நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்
பட்ட,பெயரற்ற, தகுதியில்லாத ஒரு கூட்டம்
ஜனங்கள் அவர்கள்!
9"இப்போது அந்த மனிதர்களின் மகன்கள்
என்னைக் கேலிச் செய்யும் பாடல்களை
பாடுகிறார்கள். என் பெயர் அவர்களுக்கு
ஒரு கெட்ட வார்த்தை ஆயிற்று.
10அந்த இளைஞர்கள் என்னை வெறுக்
கிறார்கள், அவர்கள் என்னிலிருந்து தூரத்
தில் போய் நிற்கிறார்கள். அவர்கள்
என்னைக் காட்டிலும் சிறந்தவர்கள் என
நினைக்கிறார்கள். அவர்கள் என் முகத்தில்
உமிழவும் செய்கிறார்கள்!
11தேவன் என் வில்லின் நாணை
அறுத்துப்போட்டு என்னைத் தளர்ச்சி
யடையச் செய்தார். அந்த இளைஞர்கள்
தாங்களாகவே நிறுத்தாது, எனக்கெதிராகத்
தங்கள் கோபத்தையெல்லாம் காட்டினார்கள்.
12அவர்கள் என் வலது பக்கத்தில் தாக்கு
கிறார்கள். அவர்கள் என் பாதங்களை அகல
தள்ளிவிட்டார்கள். நான் தாக்கப் படும்
நகரத்தைப்போல் இருக்கிறேன். என் னைத்
தாக்கி அழிப்பதற்கு அவர்கள் என்
சுவர்களுக்கெதிராக அழுக்குகளைக் கட்டு
கிறார்கள்.
13அவர்கள் என் பாதையை கெடுத்தார்கள்
அவர்கள் என்னை அழிப்பதில் வெற்றி
யடைகிறார்கள். அவர்களுக்கு உதவுவதற்கு
யாரும் தேவையில்லை.
14அவர்கள் சுவரில் துளையிடுகிறார்கள்.
அவர்கள் அதன் வழியாக விரைந்து வரு
கிறார்கள். உடையும் கற்கள் என்மீது
விழுகின்றன.
15நான் பயத்தால் நடுங்குகிறேன். காற்று
பொருள்களைப் பறக்கடிப்பதைப்போல அந்த
இளைஞர்கள் என் மகிமையைத் துரத்தி
விடுகிறார்கள். என் பாதுகாப்பு ஒரு
மேகத்தைப்போன்று மறைகிறது.
16"இப்போது என் உயிர் நீங்கும் நிலை
யில் உள்ளது. நான் விரைவில் மடிவேன்.
துன்பத்தின் நாட்கள் என்னைப் பற்றிக்
கொண்டன.
17என் எலும்புகள் எல்லாம் இரவில்
வலிக்கின்றன. என்னைக் கடித்துக்குதறும்
வேதனை நிற்கவேயில்லை.
18தேவன் என் மேற்சட்டையின் கழுத்துப்
பட்டையைப் பற்றியிழுத்து என் ஆடை
களை உருவின்றி சிதைத்தார்.
19தேவன் என்னைச் சேற்றினுள் தள்ளி
னார். நான் அழுக்கைப் போன்றும் சாம்ப
லைப் போன்றும் ஆனேன்.
20"தேவனே, உம்மிடம் உதவிக்காக
வேண்டுகிறேன், ஆனால் நீர் பதிலளிப்ப
தில்லை. நான் எழுந்து நின்று ஜெபம்
செய்கிறேன், ஆனால் நீர் என்னிடம் பாரா
முகமாயிருக்கிறீர்.
21தேவனே, நீர் என்னிடம் கொடுமையாக
நடந்தீர். என்னைத் தாக்குவதற்கு நீர் உமது
வல்லமையைப் பயன்படுத்தினீர்.
22தேவனே, பலத்த காற்று என்னைப்
பறக்கடிக்குமாறு செய்தீர். புயலில் நீர்
என்னை வெளியே வீசினீர்.
23நீர் என்னை மரணத்திற்கு வழி
நடத்துவீர் என அறிவேன். ஒவ்வொரு
மனிதனும் மடிய (மரிக்க) வேண்டும்.
24"ஆனால், ஏற்கனவே அழிந்தவனை
மீண்டும் நிச்சயமாய் ஒருவனும் தாக்க
மாட்டான்.
25தேவனே, தொல்லைகளுள்ள ஜனங்
களுக்காக நான் அழுதேன் என்பதை நீர்
அறிவீர். ஏழைகளுக்காக என் இருதயம்
துயருற்றது என்பதை நீர் அறிவீர்.
26நான் நல்லவற்றை எதிர்பார்த்த போது,
தீயவை நேர்ந்தன. நான் ஒளியைத் தேடிய
போது, இருள் வந்தது.
27நான் உள்ளே கிழிந்து போனேன், என்
துன்பம் நிற்கவில்லை. இன்னும் வரப்
போகும் துன்பங்கள் மிகுதி.
28நான் எப்போதும் துக்கமாயிருக்கிறேன்,
அதனால் நான் எந்த ஆறுதலும் பெற
வில்லை. நான் சபையில் எழுந்து நின்று,
உதவிக்காகக் கூக்குரலிட்டேன்.
29நான் காட்டு நாய்களைப் போலவும்
நெருப்புக் கோழிகளை போலவும் தனித்தவ
னானேன்.
30என் தோல் நெருப்பினால் எரிந்து உரிந்து
கழன்று போகிறது. என் உடல் காய்ச்சலால்
சுடுகிறது.
31துக்கமான பாடல்களைப் பாட என்
தம்புரு மீட்டப்பட்டுள்ளது. துக்கமான
அழுகையைப் போன்று என் புல்லாங்
குழலின் குரல் ஒலிக்கிறது.

31 "என்னைக் கவர்கின்ற ஒரு
கன்னிப்பெண்ணைப் பாராதிருக்கும்
படி என் கண்களோடு நான் ஒரு ஒப்பந்தம்
செய்துக்கொண்டேன்.

2சர்வ வல்லமையுள்ள தேவன் ஜனங்
களுக்கு என்ன செய்கிறார்? உயரத்திலுள்ள
பரலோகத்தின் வீட்டிலிருந்து எவ்வாறு
தேவன் ஜனங்களுக்குத் திரும்பக் கொடுக்
கிறார்?
3தேவன் தொல்லையையும் அழிவையும்
கெட்ட ஜனங்களுக்கு அனுப்புகிறார். தவறு
செய்வோர்க்கு அழிவை அனுப்புகிறார்.
4நான் செய்கிற ஒவ்வொன்றையும் தேவன்
அறிகிறார். நான் எடுக்கும் ஒவ்வோர்
அடியையும் தேவன் காண்கிறார்.
5“நான்பொய்களாலானவாழ்க்கை வாழ்ந்
திருந்தால் அல்லது நான் பொய் சொல்லவும்
ஜனங்களை ஏமாற்றவும் ஓடியிருந்தால்,
6அப்போது, தேவன் என்னைச்
சீர்தூக்கிப் பார்ப்தற்குத் தக்க அளவு
கோலைப் பயன் படுத்தட்டும். அப்போது
நான் களங்கமற்றவன் என்பதைத் தேவன்
அறிவார்!
7நான் சரியான பாதைக்குப் புறம்பே
நடந்தால், என் கண்கள் என் இருதயத்தை
தீமைக்கு நேரே நடத்தினால், என் கைகளில்
பாவத்தின் அழுக்குப் படிந்திருந்தால், அப்
போது தேவன் அறிவார்,
8அப்போது நான் நட்ட பயிர்களைப் பிறர்
உண்ணட்டும், என் பயிர்கள் பிடுங்கப்
படட்டும்.
9“நான் பெண்களிடம் காம இச்சை
(மோகம்) கொண்டிருந்தால். அயலானின்
மனைவியோடு தகாத நெறியில் நடக்கும்படி
அவன் கதவருகே காத்திருந்தால்,
10அப்போது, எனது மனைவி மற்றொரு
வனின் உணவைச் சமைக்கட்டும், பிற
மனிதன் அவளோடு படுத்திருக்கட்டும்.
11ஏனெனில் உடலுறவால் விளையும்
பாவம் அவமானத்திற்குரியது. அது தண்ட
னை பெறக்கூடியப் பாவமாகும்.
12பாலின உறவு சம்மந்தமான பாவம்
அனைத்தையும் அழிக்கும்வரை எரியும்
நெருப்பைப் போன்றது. நான் இதுவரைச்
செய்த அனைத்தையும், எனது உடமைகள்
யாவற்றையும் அது அழித்துவிடும்!
13“என் அடிமைகளுக்கு என்னிடம் ஏதோ
குறைபாடு ஏற்பட்டபோது அவர்களிடம்
நியாயமாயிருக்க நான் மறுத்திருந்தால்,
14நான் தேவனைச் சந்திக்கும்போது
என்ன செய்வேன்? நான் செய்ததைக்
குறித்து தேவன் விளக்கம் கேட்டால் நான்
என்ன சொல்வேன்?
15என் தாயின் கர்ப்பத்தில் தேவன்
என்னை உண்டாக்கினார், தேவன் என்
அடிமைகளையும் உண்டாக்கினார், நம்
முடைய தாயின் கருவில் தேவன் நமக்கு
உருவம் கொடுத்தார்.
16“நான் ஏழைகளுக்கு உதவ ஒருபோதும்
மறுத்ததில்லை. விதவைகளுக்குத் தேவை
யானவற்றை நான் எப்போதும் கொடுத்
தேன்.
17நான் உணவைப் பொறுத்தமட்டில்
சுயநலம் பாராட்டியதில்லை. நான் எப்
போதும் அநாதைகளுக்கு உணவளித்தேன்.
18தந்தையற்ற பிள்ளைகளுக்கு என்
வாழ்க்கை முழுவதும், நான் ஒரு தந்தையைப்
போன்றிருந்தேன். என் வாழ்க்கை முழு
வதும், நான் விதவைகளை ஆதரித்து
வந்திருக்கிறேன்.
19ஆடையில்லாததால் ஜனங்கள் துன்புறு
வதைக் கண்டபோதும், மேற்சட்டையில்லாத
ஏழையைக் கண்டபோதும்.
20நான் அவர்களுக்கு எப்போதும் ஆடை
களைக் கொடுத்தேன். என் ஆடுகளின்
மயிரைப் பயன்படுத்தி, அவர்கள் குளிர்
நீங்கச் செய்தேன். அவர்கள் தங்கள் முழு
இருதயத்தோடு என்னை ஆசீர்வதித்தார்கள்.
21வாயிலில் ஒரு அநாதை வந்து உதவி
வேண்டி நிற்கும்போது நான் என்
கைமுட்டியை ஒருபோதும் ஆட்டிய
தில்லை.*

22நான் எப்போதேனும் அப்படிச் செய்
திருந்தால், அப்போது என் கரம்
தோளிலிருந்து விழுந்திருக்கும் என நான்
நம்புகிறேன்! நான் எப்போதேனும் அப்படிச்
செய்திருந்தால், என் கரம் எலும்புக் குழியி
லிருந்து அகற்றப்பட்டிருக்கும் என நான்
நம்புகிறேன்!
23ஆனால் நான் அத்தகைய தீயகாரியங்கள்
எதையும் செய்யவில்லை. நான் தேவனு
டைய தண்டனைக்கு அஞ்சியிருக்கிறேன்.
அவரது மகத்துவம் என்னை அச்சுறுத்து
கிறது.*
24“நான் என் செல்வங்களில் நம்பிக்கை
வைத்ததில்லை. எனக்கு உதவுவதற்காக
நான் எப்போதும் தேவனையே நம்பி
யிருந்தேன். தூய பொன்னிடம், ‘நீயே
என் நம்பிக்கை’ என்று நான் கூறியதில்லை,
25நான் செல்வந்தனாக இருந்தேன். ஆனால்
அது என்னைப் பெருமைக்காரனாக்க
வில்லை! நான் மிகுதியான பொருளைச்
சம்பாதித்தேன். ஆனால், என்னைச்
சந்தோஷப்படுத்தியது அதுவல்ல!

26நான் ஒளிவிடும் சூரியனையோ, அழகிய
சந்திரனையோ ஒருபோதும் தொழுது
கொண்டதில்லை.
27சூரியன் அல்லது சந்திரனை தொழுது
கொள்ளுமளவிற்கு நான் ஒருபோதும்
மூடனாக இருந்ததில்லை.
28அதுவும் தண்டிக்கப் படவேண்டிய
பாவம் ஆகும். நான் அப்பொருள்களை
தொழுதுகொண்டிருந்திருப்பேனாகில் சர்வ

21ம் வசனம் *நியாயசபையில் எனக்கு ஆதரவு இருந்தபோதும் நான் ஒரு அநாதையைப் பயமுறுத்தியதில்லை.*

அவரது … அச்சுறுத்துகிறது *அவரது மகத்துவத்திற்கு முன்னால் என்னால் நிற்கமுடியவில்லை.*

வல்லமையுள்ள தேவனிடம் உண்மையற்ற
வனாவேன்.
29“என் பகைவர்கள் அழிந்தபோது நான்
மகிழ்ச்சியடைந்ததில்லை. தீயவை என்
பகைவர்களுக்கு நேரிட்டபோது, நான் அவர்
களைக் கண்டு நகைத்ததில்லை.
30என் பகைவர்களைச் சபிப்பதாலோ,
அவர்கள் மரிக்க வேண்டும் என விரும்
பியோ என் வாய் பாவம் செய்ய நான்
ஒருபோதும் அனுமதித்ததில்லை.
31நான் அந்நியருக்கு எப்போதும் உணவ
ளித்தேன் என்பதை என் வீட்டிலுள்ளோர்
எல்லோரும் அறிவார்கள்.
32அந்நியர்கள் இரவில் தெருக்களில் தூங்
காதபடி நான் எப்போதும் அவர்களை
வீட்டினுள்ளே வரவேற்றேன்.
33பிறர் தங்கள் பாவங்களை மறைக்க
முயல்கிறார்கள். ஆனால் நான் என்
குற்றத்தை மறைத்ததில்லை.
34ஜனங்கள் என்ன சொல்வார்களோ?
என்று நான் அஞ்சியதில்லை. அந்த அச்சம்
என்னை அமைதியாயிருக்கச்செய்ததில்லை.
நான் வெளியே போகாமலிருக்க அது
தடையாயிருக்கவில்லை. என்னை ஜனங்கள்
வெறுப்பதற்கு (ஜனங்களின் வெறுப்புக்கு)
நான் அஞ்சவில்லை.
35“ஓ! யாரேனும் எனக்குச் செவிகொடுக்க
வேண்டுமென விரும்புகிறேன்! நான் எனது
நியாயத்தை விளக்கட்டும். சர்வ வல்லமை
யுள்ள தேவன் எனக்குப் பதில் தருவார்
என விரும்புகிறேன். நான் செய்தவற்றில்
தவறென அவர் நினைப்பதை அவர்
எழுதிவைக்கட்டும் என்று நான் விரும்பு
கிறேன்.

36அப்போது என் கழுத்தைச் சுற்றிலும்
அந்த அடையாளத்தை அணிந்து
கொள்வேன். ஒரு கிரீடத்தைப் போன்று
அதை என் தலைமேல் வைப்பேன்.
37தேவன் அதைச் செய்தால், நான் செய்த
ஒவ்வொன்றையும் விளக்கிக் கூறமுடியும்.
தலை நிமிர்ந்தபடியே ஒரு தலைவனைப்
போன்று நான் தேவனிடம் வரமுடியும்.
38“மற்றொருவனிடமிருந்து நான் என்
நிலத்தைத் (அபகரிக்கவில்லை) திருட
வில்லை. நிலத்தைத் திருடியதாக ஒருவனும்
என் மீது குற்றம் சாட்ட முடியாது.
39நிலத்திலிருந்து நான் பெற்ற
உணவிற்காக எப்போதும் உழவர்களுக்கு
ஊதியம் கொடுத்துள்ளேன். ஒருவருக்குச்
சொந்தமான நிலத்தை கைப்பற்ற நான்
ஒருபோதும் முயன்றதில்லை.
40நான் அத்தீயக்காரியங்களை எப்போ
தேனும் செய்திருந்தால் அப்போது என்
வயல்களில் கோதுமை, பார்லி* ஆகிய
வற்றிற்குப் பதிலாக முள்ளும் களைகளும்
முளைக்கட்டும்!” என்றான். யோபின் வார்த்
தைகள் (சொற்கள்) முடிவடைந்தன.

எலிகூ விவாதத்தில் பங்குக் கொள்கிறான்

32 அப்போது யோபுவின் நண்பர்கள்
மூவரும் யோபுவுக்குப் பதில் கூற
முயல்வதை விட்டு விட்டார்கள். தான்
உண்மையாகவே களங்கமற்றவன் என
யோபு உறுதியாக இருந்ததால், அவர்கள்
தங்கள் முயற்சியைக் கைவிட்டார்கள்.
2ஆனால், அங்கு எலிகூ என்னும் பெயருள்ள
ஒரு இளைஞன் இருந்தான். அவன்
பரகெயேலின் மகன். அவன் பூசு என்னும்
பெயருள்ள ஒரு மனிதனின் சந்ததியில்
வந்தவன். எலிகூ ராம் குடும்பத்தினன்.
எலிகூ யோபுவிடம் மிகுந்தக் கோபமடைந்
தான். ஏனெனில், யோபு தானே சரியாக
நடந்துக்கொண்டான் எனச் சொல்லிக்
கொண்டிருந்தான். தேவனைக் காட்டிலும்
தானே நியாயமானவன் என்று யோபு
சொல்லிக்கொண்டிருந்தான். 3யோபுவின்
நண்பர்கள் மூவரிடமும் எலிகூ கோபங்
கொண்டான். ஏனெனில், யோபுவின்
கேள்விகளுக்கு அம்மூவரும் பதில் கூற
முடியவில்லை. யோபு தவறு செய்தானென
அவர்களால் நிறுவ முடியவில்லை. 4எலிகூ
அங்கிருந்தவர்களில் வயதில் இளைய
வனாயிருந்தான். அதனால், பிறர் ஒவ்வொரு
வரும் பேசி முடிக்கும்வரை காத்திருந்தான்.
அப்போது அவன் பேசத் தொடங்கலாம் என
உணர்ந்தான். 5யோபுவின் மூன்று
நண்பர்களும் சொல்வதற்கு இனி ஏதும்
இல்லை என அப்போது எலிகூ கண்டான்.
அதனால் அவன் கோபமடைந்தான்.
6எனவே, அவன் பேசத் தொடங்கினான்.
அவன்:
“நான் இளைஞன், நீங்கள் முதியவர்கள்.
ஆகவேதான் நான் நினைப்பதை உங்க
ளுக்குச் சொல்ல அஞ்சினேன். 7நான்
எனக்குள், ‘முதியோர் முதலில் பேச
வேண்டும். முதியோர் பல ஆண்டுள் வாழ்ந்
திருக்கிறார்கள். எனவே அவர்கள் பல
காரியங்களைக் கற்றிருக்கிறார்கள்’ என்று
சிந்தித்தேன்.
8ஆனால் தேவனுடைய ஆவி ஒருவனை
ஞானமுள்ளவனாக்குகிறது. சர்வ வல்லமை
யுள்ள தேவனுடைய ‘மூச்சு’ ஜனங்களைப்
புரிய வைக்கிறது.
9முதியோர் மட்டுமே ஞானவான்கள்
அல்லர். சரியானதைப் புரிந்துகொள்வோர்
முதியோர் மட்டுமல்லர்.
10“எனவே தயவுசெய்து எனக்குச் செவி
கொடுங்கள்! நான் நினைப்பதை உங்க
ளுக்குச் சொல்வேன்.
11நீங்கள் பேசும்போது நான் பொறுமை
யாகக் காத்திருந்தேன். யோபுவுக்கு நீங்கள்
கூறிய பதில்களைக் கேட்டேன்.
12நீங்கள் கூறியவற்றை நான் கவனமாகக்

பார்லி ஒரு வகை தானியம்.

கேட்டேன். உங்களில் ஒருவரும் யோபுவை
குற்றம்கூறவில்லை. அவனுடைய விவாதத்
திற்கு உங்களில் ஒருவரும் பதில் கூற
வில்லை.
13நீங்கள் மூவரும் ஞானத்தைக்
கண்டடைந்ததாகக் கூறமுடியாது. மனித
ரல்ல, தேவன் யோபுவின் விவாதங்களுக்குப்
பதில் கூறவேண்டும்.
14யோபு அவனது விவாதங்களை என்
னிடம் முன் வைக்கவில்லை. எனவே நீங்கள்
மூவரும் பயன்படுத்திய விவாதங் களை
நான் பயன்படுத்த மாட்டேன்.
15“யோபுவே, இம்மனிதர்கள் தங்கள் விவா
தத்தில் தோற்றார்கள். அவர்கள் மேலும்
கூற எதுவுமில்லை. அவர்களிடம் வேறு
பதில்கள் இல்லை.
16யோபுவே, இம்மனிதர்கள் உமக்குப்
பதில் கூறும்படி நான் காத்திருந்தேன்.
ஆனால் இப்போது அவர்கள் அமைதியா
யிருக்கிறார்கள். அவர்கள் உம்மோடு விவா
திப்பதை நிறுத்தியிருக்கிறார்கள்.
17எனவே இப்போது என் பதிலை நான்
உமக்குச் சொல்வேன். ஆம், நான் நினைப்
பதை உமக்குக் கூறுவேன்.
18“நான் சொல்வதற்கு நிரம்ப இருக்கிறது.
நான் அவற்றைக் கொட்டிவிடப் போகிறேன்.

19திறக்கப்படாத புது திராட்சைரசம்
நிரம்பிய புட்டியைப் போலிருக்கிறேன்.
உடைத்துத் திறப்பதற்கு தயாராயிருக்கிற புது
திராட்சைரசம் உடைய தோல்பையை*
போலிருக்கிறேன்.
20எனவே நான் பேசவேண்டும். அப்போது
நான் நலமடைவேன். நான் பேசவேண்டும்,
நான் யோபுவின் விவாதத்திற்குப் பதில் கூற
வேண்டும்.
21“பிறரை நடத்துவதைப்போல், நான்
யோபுவையும் நடத்தவேண்டும். அவனிடம்
நல்லவற்றைச் சொல்ல நான் முயல
மாட்டேன். நான் சொல்ல வேண்டியதைச்
சொல்வேன்.
22நான் ஒருவனை மற்றொருவனைக்
காட்டிலும் சிறப்பாக நடத்த முடியாது. நான்
அவ்வாறு செய்தால், அப்போது தேவன்
என்னைத் தண்டிப்பார்!

33 “இப்போது, யோபுவே, என்னைக்
கவனித்துக்கேளும்: நான்
சொல்கிறவற்றிற்குச் செவிகொடும்.
2நான் பேச தயாராயிருக்கிறேன்.
3என் இருதயம் நேர்மையானது, எனவே
நேர்மையான வார்த்தைகளைப் பேசுவேன்.
எனக்குத் தெரிந்தவற்றைக் குறித்து நான்
உண்மை பேசுவேன்.
4தேவனுடைய ஆவி என்னை உண்டாக்
கிற்று. என் உயிர் சர்வ வல்லமையுள்ள
தேவனிடமிருந்து வந்தது.
5யோபுவே, நான் சொல்வதைக் கேளும்,
உனக்கு முடிந்தால் எனக்குப் பதில் சொல்
லும். உனது பதிலைத் தயாராக வைத்திரும்,
அப்போது நீ என்னோடு விவாதிக்க
முடியும்.
6தேவனுக்கு முன்பாக நீயும் நானும்
சமமானவர்களே. தேவன் மண்ணைப் பயன்
படுத்தி நம்மிருவரையும் உண்டாக்கினார்.
7யோபுவே, எனக்கு அஞ்சாமல் இரும்.
நான் உன்னிடம் கடினமாயிருக்க மாட்டேன்.
8“ஆனால் யோபுவே, நீ சொன்னதை
நான் கேட்டேன்.
9நீ, ‘நான் பரிசுத்தமானவன் நான்
களங்கமற்றவன். நான் தவறேதும் செய்ய
வில்லை. நான் குற்றமற்றவன்.
10நான் தவறேதும் செய்யவில்லை.
ஆனால் தேவன் எனக்கு எதிராக இருக்
கிறார். தேவன் என்னை ஒரு பகைவனைப்
போல் நடத்தினார்.
11தேவன் என் கால்களில் விலங்கிட்டார்.
நான் செய்கிற ஒவ்வொன்றையும் தேவன்
கண்ணோக்குகிறார்’ என்று சொன்னாய்.
12“ஆனால் யோபுவே, நீ இவ்விஷயத்தில்
தவறியிருக்கிறாய். நீ தவறு செய்கிறாய்
என்பதை நான் நிரூபிப்பேன். ஏனெனில்
தேவன் எல்லா மனிதர்களையும் விட
அதிகமாக அறிந்திருக்கிறார்.*
13யோபுவே, நீ தேவனோடு விவாதிக்
கிறாய். தேவன் எல்லாவற்றையும் உனக்கு
விளக்கவேண்டுமென நீ நினைக்கிறாய்.
14தேவன் தாம் செய்கிற எல்லாவற்றையும்
விளக்கலாம். வெவ்வேறு வகைகளில்
தேவன் பேசலாம், ஆனால் ஜனங்கள் புரிந்து
கொள்ளமாட்டர்கள்.
15-16தேவன் கனவில் ஜனங்களோடு பேச
லாம், அல்லது இரவில் அவர்கள் ஆழ்ந்த
நித்திரைக் கொள்ளும்போது தரிசனம் தந்து
பேசலாம், அவர்கள் தேவனுடைய எச்சரிக்
கையைக் கேட்கும்போது மிகவும் அச்சம்
கொள்ளலாம்.
17ஜனங்கள் தவறு செய்வதை நிறுத்தவும்
பெருமை கொள்வதை விடவும் தேவன்
எச்சரிக்கை செய்கிறார்.
18மரணத்தின் இடத்திற்குப்* போகாதபடி
அவர்களைக் காப்பதற்காகத் தேவன் ஜனங்
களை எச்சரிக்கிறார். ஒருவன் அழியாதபடி
காப்பதற்குத் தேவன் அவ்வாறு செய்கிறார்.
19“அல்லது ஒருவன் படுக்கையில் கிடந்து
தேவனுடைய தண்டனையை அனுபவிக்கும்
போது ஒருவன் தேவனுடைய சத்தத்தைக்
கேட்கக்கூடும். வேதனையால் அம்மனி

புது … தோல்பையை தோலினால் ஆன பையில் திராட்சைரசத்தை அடைத்து வைக்கும் பழக்கம் யூதர்களிடம் இருந்தது.

தேவன் … அறிந்திருக்கிறார் தேவன் எல்லோரைக் காட்டிலும் மிகவும் பெரியவர்.

மரணத்தின் இடம் “குழி” ஜனங்கள் மரிக்கும்போது போகும் இடம்.

தனைத் தேவன் எச்சரிக்கிறார். எலும்பெல்
லாம் நொறுங்கும்படி அம்மனிதன் நோவை
அனுபவிக்கிறான்.
20அப்போது அம்மனிதன் உண்ண
முடியாது. மிகச் சிறந்த உணவையும்
வெறுக்கும்படி அவன் மிகுந்த நோவை
அனுபவிக்கிறான்.
21அவன் மிகவும் மெலிந்து எலும்புகள்
வெளித்தோன்றும் வரை அவன் உடம்பு
மெலிந்துபோகும்.
22அம்மனிதன் மரணத்தின் இடத்திற்கு
அருகே இருக்கிறான். அவன் வாழ்க்கை
மரணத்திற்கு அருகாமையில் உள்ளது.
23“தேவனிடம் ஆயிரக்கணக்கான
தூதர்கள் இருப்பார்கள். அத்தூதர்களுள்
ஒருவன் அம்மனிதனைக் கண்ணோக்கிக்
கொண்டிருக்கலாம். அந்த தூதன் அம்மனி
தனுக்காகப் பரிந்துபேசி அவன் செய்த
நற்செயல்களை எடுத்துரைக்கலாம்.

24அந்த தூதன் அம்மனிதனிடம் இரக்கம்
காட்டலாம். அத்தூதன் தேவனிடம், ‘மரணத்
தின் இடத்திலிருந்து அம்மனிதனைக் காப்
பாற்றும். அவன் பாவத்திற்குப் பரிகாரமாக
நான் ஒரு வழியைக் கண்டு பிடித்
திருக்கிறேன்’ எனலாம்.
25அப்போது அம்மனிதனின் உடல்
மீண்டும் இளமையும், வலிமையும்பெறும்.
அவன் இளமையிலிருந்தாற் போன்று
இருப்பான்.
26அம்மனிதன் தேவனிடம் ஜெபிப்பான்,
தேவன் அவனுடைய ஜெபத்திற்குப் பதில்
தருவார். அம்மனிதன் களிப்பால் ஆர
வாரித்து, தேவனைத் தொழுதுகொள்வான்.
அப்போது அம்மனிதன் மீண்டும் நல்
வாழ்க்கை வாழ்வான்.
27அப்போது அம்மனிதன் ஜனங்களிடம்
அறிக்கையிடுவான். அவன், ‘நான் பாவம்
செய்தேன். நான் நல்லதைக் கெட்டதாக்கி
னேன். ஆனால் தேவன் என்னைத் தண்டிக்க
வேண்டிய அளவு தண்டிக்கவில்லை.
28மரணத்தின் இடத்திற்குப் போகாதபடி,
தேவன் என் ஆத்துமாவைக் காப்பாற்றினார்.
இப்போது மீண்டும் என் வாழ்க்கையை நான்
அனுபவிக்கமுடியும்’ என்பான்.
29“அம்மனிதனுக்காக மீண்டும், மீண்டும்
தேவன் எல்லாவற்றையும் செய்கிறார்.
30ஏனென்றால், அம்மனிதனை எச்சரித்து,
அவனது ஆத்துமாவை மரணத்தின்
இடத்திலிருந்து காப்பதால் அம்மனிதன்
வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்ப
தற்காக இதைச் செய்கிறார்.
31“யோபுவே, என்னைக் கவனியும். நான்
கூறுவதைக் கேளும். அமைதியாக இரும்,
என்னை பேசவிடும்.
32ஆனால் யோபுவே, நீர் என்னோடு
கருத்துவேறுபாடு கொள்ளவிரும்பினால்,
அப்போது நீர் பேசத் தொடங்கும். உமது
விவாதத்தைக் கூறும், ஏனெனில், நான்
உம்மைத் திருத்த விரும்புகிறேன்.
33ஆனால் யோபுவே, நீர் கூற எதுவு
மில்லையெனில், நான் சொல்வதைக் கேளும்.
அமைதியாக இரும், உமக்கு ஞானத்தைப்
போதிப்பேன்” என்றான்.

34 பின்பு எலிகூ தொடர்ந்து பேசினான்.
அவன்:
2“நான் கூறுபவற்றை கேளுங்கள், ஞானி
களே, நான் சொல்வதைக் கவனியுங்கள்,
அறிஞர்களே
3உங்கள் நாவு, அது தொடுகிற உணவை
ருசிக்கிறது. உங்களது காது, அது கேட்கிற
வார்த்தைகளைச் சோதிக்கிறது.
4எனவே நாம் அந்த விவாதங்களைச்
சோதிப்போம், எது சரியென நாமே முடிவு
செய்வோம். எது நல்லதென நாம்
ஒருமித்திருந்து கற்போம்.
5யோபு, ‘யோபாகிய நான் களங்க
மற்றவன், தேவன் என்னிடம் நியாயமுடைய
வராயிருக்கவில்லை.
6நான் களங்கமற்றவன், ஆனால் நீதி
எனக்கெதிராக வழங்கப்பட்டது, அது நான்
பொய்யனெனக் கூறுகிறது. நான் களங்க
மற்றவன், ஆனால் மிக மோசமாகக் காயமுற்
றேன்’ என்கிறான்.
7“யோபைப் போல வேறெவனாகிலும்
இருக்கிறானா? நீங்கள் அவமானப்படுத்தி
னால் யோபு அதைப் பொருட்படுத்து
வதில்லை.
8யோபு தீயோரோடு நட்புடையவனா
யிருந்தான். யோபு கெட்ட ஜனங்களோ
டிருக்க விரும்புகிறான்.
9ஏன் நான் அவ்வாறு சொல்கிறேன்?
ஏனெனில் யோபு, ‘ஒருவன் தேவனைத்
தவறான வழிகளில் சந்தோஷப்படுத்த
முயற்சி செய்தால் அதனால் அவனுக்கு
நன்மையேதும் வாய்க்காது‘ என்கிறான்.
10“உங்களால் புரிந்துகொள்ள முடியும்,
எனவே நான் சொல்வதைக் கேளுங்கள்.
தேவன் தீயவற்றை ஒருபோதும் செய்ய
மாட்டார்! சர்வ வல்லமையுள்ள தேவன்
தவறிழைக்க மாட்டார்!
11ஒருவன் செய்யும் காரியங்களுக்கேற்ற
படியே தேவன் பலனளிப்பார். ஒருவனுக்கு
உரியதைத் தேவன் அவனுக்குக் கொடுக்
கிறார்.
12இதுவே உண்மை, தேவன் தவறிழைக்க
மாட்டார், சர்வ வல்லமையுள்ள தேவன்
எப்போதும் நியாயந்தீர்ப்பார்.
13பூமிக்குப் பொறுப்பாக இருக்கும்படி
தேவனை எந்த மனிதனும் தேர்ந்தெடுக்க
வில்லை, உலகம் முழுவதற்கும் பொறுப்பை
தேவனுக்கு ஒருவனும் கொடுக்கவில்லை.
தேவன் எல்லாவற்றையும் படைத்தார். எல்
லாம் அவரது ஆதிக்கத்தின் கீழ் இருக்
கின்றன.
14தேவன் மனிதனது ஆவியை எடுக்க

முடிவெடுத்தால், அவனது மூச்சை நீக்கிவிட முடிவெடுத்தால்,
15அப்போது பூமியின் ஜனங்கள் எல்லோரும் மரிப்பார்கள். எல்லா ஜனங்களும் மீண்டும் மண்ணாவார்கள்.
16“நீங்கள் ஞானிகளாயிருந்தால், நான் சொல்வதற்குச் செவி கொடுப்பீர்கள்.
17ஒருவன் நியாயஞ் செய்வதை வெறுத் தால், அவன் அரசனாக இருக்கமுடியாது. யோபுவே, தேவன் வல்லவரும் நல்லவரு மானவர். அவரைக் குற்றவாளியாக நியாயந் தீர்க்க முடியும் என்று நினைக்கிறீர்களா?
18தேவனே அரசர்களிடம், ‘நீங்கள் தகுதி யற்றவர்கள்’ என்கிறார். தேவனே தலைவர் களிடம், ‘நீங்கள் தீயவர்கள்’ என்கிறார்!
19தேவன் ஜனங்களைக் காட்டிலும் தலை வர்களை நேசிப்பதில்லை. தேவன் ஏழை களைக் காட்டிலும் செல்வந்தரை நேசிப்ப தில்லை. ஏனெனில், தேவனே ஒவ்வொரு வரையும் உண்டாக்கினார்.
20ஜனங்கள் நள்ளிரவில் திடீரென மரிக்க முடியும். ஜனங்கள் நோயுற்று மடிவார்கள். தெளிவான காரணமின்றி வலிமையான ஜனங்களும் கூட மரிப்பார்கள்.
21“ஜனங்கள் செய்வதைத் தேவன் கண்ணோக்குகிறார். ஒருவன் வைக்கிற ஒவ்வோர் அடியையும் தேவன் அறிகிறார்.
22தேவனிடமிருந்து ஒளிப்பதற்கேற்ற இருள் நிரம்பிய இடம் எதுவும் தீயோருக்குக் கிடைப்பதில்லை.

23ஜனங்களைச் சோதித்துப் பார்க்கும் நேரத்தைத் தேவன் தேர்ந்தெடுக்க வேண்டிய தில்லை. தேவன் நியாயந்தீர்ப்பதற்குத் தனக்கு முன்னிலையில் ஜனங்களைக் கொண்டுவர தேவையில்லை.
24வல்லமையுள்ள ஜனங்கள் தீய காரியங்களைச் செய்யும்போது, தேவன் கேள்விகளைக் கேட்கத் தேவையில்லை. தேவன் அந்த ஜனங்களை அழித்துவிடுவார், வேறு ஜனங்களைத் தலைவர்களாகத் தேர்ந் தெடுப்பார்.
25எனவே ஜனங்கள் செய்வது என்ன என்பதைத் தேவன் அறிகிறார். அதனால் விரைவில் தேவன் தீயோரைத் தோற்கடித்து அவர்களை ஒரே இரவில் அழித்து விடுவார்.
26கெட்ட ஜனங்கள் செய்த தீய காரியங் களுக்காக, தேவன் அவர்களைத் தண்டிப் பார். பிற ஜனங்கள் காணும்படியாக அந்த ஜனங்களைத் தேவன் தண்டிப்பார்.
27ஏனெனில், கெட்ட ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதை நிறுத்தி விட்டார்கள். தேவன் விரும்புகிறபடியே செய்வதற்கும் அந்த ஜனங்கள் கவலைப் படுவதில்லை.
28அந்தக் கெட்ட ஜனங்கள் ஏழைகளைத் துன்புறுத்துகிறார்கள். தேவனை நோக்கி அவர்கள் உதவி வேண்டி அழும்படிச் செய்கிறார்கள். ஏழைகள் உதவி கேட்டு அழுவதைத் தேவன் கேட்கிறார்.
29ஆனால் ஏழைகளுக்கு உதவ வேண்டா மென்று தேவன் முடிவுச் செய்தால், ஒருவரும் தேவனைக் குற்றவாளியாக நியாயந்தீர்க்க முடியாது. தேவன் ஜனங் களிடமிருந்து தன்னை மறைத்துக் கொண் டாரானால் அப்போது அவரை ஒருவரும் பார்க்க முடியாது. தேவனே ஜனங்களுக்கும் தேசங்களுக்கும் அரசர்.
30ஒரு அரசன் தீயவனாக இருந்து பிறர் பாவம் செய்யும்படி பண்ணினால், அப் போது, தேவன் அவனை அரசாளும்படி அனுமதிக்கமாட்டார்.
31“ஒரு மனிதன் தேவனிடம், ‘நான் குற்ற வாளி, இனிமேல் பாவம் செய்ய மாட்டேன்.
32தேவனே, நான் உம்மைப் பார்க்க முடியாவிட்டாலும் தக்க நெறியில் வாழும் வகையைத் தயவுசெய்து எனக்குப் போதியும். நான் தவறு செய்திருந்தால், மீண்டும் அதைச் செய்யமாட்டேன்’ என்று கூறலாம்.
33“யோபுவே, தேவன் உனக்குப் பரிசளிக்க (பலன் தர) வேண்டுமென நீ விரும்புகிறாய். ஆனால் நீயோ உன்னை மாற்றிக்கொள்ள மறுக்கிறாய். யோபுவே, இது உம் முடிவு, என்னுடையதல்ல, நீ நினைப்பதை எனக்குச் சொல்லும்.

34“ஒரு ஞானி நான் சொல்வதைக் கேட் பான். ஒரு ஞானி,
35‘யோபு அறியாமையுடையவனைப் போலப் பேசுகிறான். யோபு சொல்கின்றவை பொருள் தருவன அல்ல’ என்பான்
36யோபு இன்னும் அதிகமாகத் தண்டிக்கப் பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். ஏனெனில் ஒரு தீயவன் பதில் சொல்கிறாற் போல, யோபுவும் எங்களுக்குப் பதில் சொல்கிறான்.
37யோபு தனது பிற பாவங்களோடு இன்னும் பாவங்களை அதிகமாக்கினார். எங்களுக்கு முன்பாக யோபு அமர்ந்திருக் கிறான், அவர் எங்களை அவமானப் படுத்துகிறான், தேவனைக் கேலிச் செய் கிறான்!” என்றான்.

35 எலிகூ பேசுவதைத் தொடர்ந்தான். அவன்,
2“யோபுவே, ‘நான் தேவனைக் காட்டிலும் நியாயமானவன்’ எனக் கூறுவது சரியல்ல
3யோபுவே, நீ தேவனை, ‘ஒருவன் தேவனைச் சந்தோஷப்படுத்த விரும்பினால் அவனுக்கு லாபம் என்ன? நான் பாவம் செய்யாதிருந்தால், அது எனக்கு என்ன நன்மையைத் தரும்?’ என்று கேளும்.
4“யோபுவே, நான் (எலிகூ) உனக்கும், உன்னோடு இங்கிருக்கும் உமது நண்பர் களுக்கும் பதில் கூற விரும்புகிறேன்.
5யோபுவே, வானத்தை நோக்கிப்பாரும்,

உனக்கும்மேல் உயர்ந்திருக்கிற மேகங்களை
அண்ணாந்து பாரும்.
6யோபுவே, நீ பாவஞ்செய்தால், அது
தேவனைத் துன்புறுத்தாது. யோபுவே உன்
னிடம் பாவங்கள் மிகுதியாயிருந்தால், அது
தேவனை ஒன்றும் செய்யாது.
7யோபுவே, நீ நல்லவனாக இருந்தால்,
அது தேவனுக்கு உதவாது. தேவன் உன்னிட
மிருந்து எதையும் பெறமாட்டார்.
8யோபுவே, நீ செய்யும் நல்ல காரியங்
களோ, தீயகாரியங்களோ உன்னைப்
போன்ற பிறரை மட்டுமே பாதிக்கும். அவை
தேவனுக்கு உதவவோ, அவரைத் துன்புறுத்
தவோ செய்யாது.
9“தீயோர் துன்புறுத்தப்பட்டால், அவர்கள்
உதவிக்காக கூக்குரலிடுவார்கள். அவர்கள்
வல்லமையுள்ள ஜனங்களிடம் சென்று
உதவிக்காக கெஞ்சி கேட்பார்கள்.
10ஆனால் அத்தீயோர் தேவனிடம் உதவிக்
கேட்கமாட்டார்கள். அவர்கள், ‘என்னை
உண்டாக்கின தேவன் எங்கே? ஜனங்கள்
மனக்கவலையோடிருக்கையில் தேவன்
அவர்களுக்கு உதவுவார். எனவே அவர்
எங்கிருக்கிறார்?
11தேவன் நம்மை பறவைகள், மிருகங்
களைக் காட்டிலும் ஞானமுள்ளவராக்கு
கிறார்? எனவே அவர் எங்கிருக்கிறார்?’
என்று கேட்பார்கள்.
12“அல்லது, அத்தீயோர் தேவனிடம் உதவி
வேண்டினால் தேவன் அவர்களுக்குப்
பதிலளிக்கமாட்டார். ஏனெனில் அவர்கள்
மிகவும் பெருமை (அகந்தை) உடையவர்கள்.
அவர்கள் மிகவும் முக்கியமானவர்களென்று
இன்னமும் நினைக்கிறார்கள்.
13தேவன் அவர்களின் தகுதியற்ற கெஞ்சு
தலுக்குச் செவிசாய்க்கமாட்டார் என்பது
உண்மை. சர்வ வல்லமையுள்ள தேவன்
அவர்களைக் கவனிக்கமாட்டார்.
14எனவே யோபுவே, நீ தேவனைப்
பார்க்கவில்லை என்று கூறும்போது தேவன்
உனக்குச் செவிசாய்க்கமாட்டார். தேவனைச்
சந்திக்கும் வாய்ப்பை எதிர்பார்த்து நீ
களங்கமற்றவனென்று நிரூபிக்கக் காத்துக்
கொண்டிருப்பதாகக் கூறுகிறாய்.
15யோபுவே, தேவன் தீயோரைத் தண்டிப்ப
தில்லை எனவும், தேவன் பாவங்களைக்
கவனிப்பதில்லை எனவும் நீ நினைக்கிறாய்.
16“எனவே யோபு அவனது தகுதியற்ற
பேச்சைத் தொடருகிறான். யோபு தான்
முக்கியமானவனாக பாவித்துக் கொண்டிருக்
கிறான். யோபு தான் பேசிக்கொண்டிருப்
பதைப்பற்றி அறியான் என்பதை எளிதாகக்
காணமுடியும்” என்றான்.

36 எலிகூ தன் பேச்சைத் தொடர்ந்தான்.
அவன்,
2“என்னோடு இன்னும் கொஞ்சம்
பொறுமையாயிரும். இன்னும் சில வார்த்தை
களைக் கூட நான் பேச தேவன் விரும்பு
கிறார்.
3நான் எனது அறிவை எல்லோரோடும்
பகிர்ந்துக்கொள்வேன். தேவன் என்னை
உண்டாக்கினார், தேவன் நியாயமானவரென
நான் நிரூபிப்பேன்.
4யோபுவே, நான் உண்மையைக் கூறிக்
கொண்டிருக்கிறேன். நான் எதைக் குறித்துப்
பேசுகிறேன் என்று நான் அறிவேன்.
5“தேவன் மிகுந்த வல்லமையுள்ளவர்,
ஆனால் அவர் ஜனங்களை வெறுப்ப
தில்லை. தேவன் மிகுந்த வல்லமையுள்ளவர்,
ஆனால் அவர் மிகுந்த ஞானமுள்ளவர்.
6தேவன் தீய ஜனங்களை வாழவிட
மாட்டார், தேவன் ஏழைகளை எப்போதும்
நியாயமாக நடத்துகிறார்.
7தக்க வழியில் நடப்போரைத் தேவன்
கண்ணோக்குகிறார். அவர் நல்லோரை
அரசர்களாயிருக்க அனுமதிக்கிறார். தேவன்
நல்லோருக்கு என்றென்றும் மகிமையைக்
கொடுக்கிறார்.
8எனவே ஜனங்கள் தண்டிக்கப்பட்டால்,
அவர்கள் விலங்குகளினாலும் கயிறு
களினாலும் கட்டப்பட்டால், அப்போது
அவர்கள்தவறு செய்தவர்களாயிருப்பார்கள்.
9அவர்கள் செய்தது என்னவென்பதைத்
தேவன் சொல்வார். அவர்கள் பாவம்
செய்தார்கள் என்பதை தேவன் சொல்வார்.
அவர்கள் பெருமையாயிருந்தார்கள் என்
பதை தேவன் சொல்வார்.
10தேவன் தனது எச்சரிக்கைக்குச் செவி
சாய்க்குமாறு அந்த ஜனங்களைக் கட்டாயப்
படுத்துவார். அவர்கள் பாவம் செய்வதை
நிறுத்துமாறு தேவன் கட்டளையிடுவார்.
11அந்த ஜனங்கள் தேவனுக்குச் செவி
கொடுத்து அவருக்குக் கீழ்ப்படிந்தால்,
தேவன் அவர்கள் வெற்றிக் காணச் செய்
வார். அவர்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையை
வாழ்வார்கள்.
12ஆனால் அந்த ஜனங்கள் தேவனுக்குக்
கீழ்ப்படிய மறுத்தால், அப்போது அவர்கள்
அழிக்கப்படுவார்கள். அவர்கள், அறியாமை
யுடையவர்களாக மரித்துப்போவார்கள்.
13“தேவனைப் பற்றிக் கவலைப்படாத
ஜனங்கள் எப்போதும் கசப்பானவர்கள்.
தேவன் அவர்களைத் தண்டிக்கிற போதும்
கூட,அவர்கள் தேவனிடம் உதவிக்காக
ஜெபம் செய்ய மறுக்கிறார்கள்.
14அவர்கள் ஆண் விபசாரிகளைப்* போல
இளமையிலேயே மரித்துபோவார்கள்.
15ஆனால் தேவன் ஜனங்கள் பெறும்
தொல்லைகளால் அவர்களைத் தாழ்மையான
வர்களாக்குவார். ஜனங்கள் எழுந்து அவ

ஆண் விபசாரிகள் பெரும்பாலும் பிற ஆண்களோடு கொண்ட உடலுறவு பாவத்தில் தங்கள் உடலை விற்ற ஆண்கள் பொய் தெய்வங்களை வழிபடும் கானானிய வழிபாட்டின் ஒரு பகுதி இது.

ருக்குச் செவிகொடுப்பதற்காக தேவன்
அத்தொல்லைகளைப் பயன்படுத்துகிறார்.

16“யோபுவே, தேவன் உனக்கு உதவ
விரும்புகிறார். தொல்லைகளிலிருந்து
உன்னை விடுவிக்க தேவன் விரும்புகிறார்.
உனக்கு வாழ்க்கையை எளிதாக்க தேவன்
விரும்புகிறார். உன் மேசையில் மிகுதியான
உணவு இருக்கும்படியாகச் செய்ய தேவன்
விரும்புகிறார்.

17ஆனால் இப்போது யோபுவே, நீ
குற்றவாளியாக நியாயந் தீர்க்கப்பட்டாய்.
எனவே ஒரு தீயவனைப்போன்று நீ
தண்டிக்கப்பட்டாய்.

18யோபுவே, செல்வங்கள் உன்னை மூட
னாக்கவிடாதேயும். பணம் உனது மனத்தை
மாற்ற விடாதேயும்.

19உனது பணம் இப்போது உனக்கு
உதவாது. வல்லமையுள்ளோர் உமக்கு உதவ
வும் முடியாது.

20இரவின் வருகையை விரும்பாதேயும்.
ஜனங்கள் இரவில் மறைந்துபோக முயல்
கிறார்கள். அவர்கள் தேவனிடமிருந்து
ஒளிந்துக்கொள்ள முடியும் என்று நினைக்
கிறார்கள்.*

21யோபுவே, நீ மிகவும் துன்புற்றிருக்
கிறாய் ஆனால் தீமையைத் தேர்ந்து
கொள்ளாதேயும். தவறுசெய்யாதபடி எச்சரிக்
கையாயிரும்.

22“தேவன் தமது வல்லமையினால்
மேன்மையுற்றிருக்கிறார். தேவன் எல்லோ
ரினும் மிகவும் சிறந்த போதகர்!

23தேவன் செய்ய வேண்டுவதென்ன
என்று ஒருவனும் தேவனுக்குக் கூற
முடியாது. ‘தேவனே, நீர் தவறு செய்கிறீர்’
என்று ஒருவனும் தேவனிடம் கூறமுடியாது!

24“தேவன் செய்த காரியங்களுக்காக
அவரைத் துதிக்க வேண்டுமென
நினைவுகூருங்கள். தேவனைத் துதிக்கும்
பல பாடல்களை ஜனங்கள் எழுதியிருக்
கிறார்கள்.

25தேவன் செய்தவற்றை ஒவ்வொருவனும்
காணமுடியும். தூரத்து நாடுகளின் ஜனங்
களும் அவற்றைப் பார்க்க இயலும்.

26ஆம், தேவன் மேன்மையானவர். ஆனால்
அவரது மேன்மையை நாம் புரிந்துகொள்ள
முடியாது, எத்தனை காலமாக தேவன்
வாழ்ந்திருக்கிறார் என்பதையும் நாம் அறிய
முடியாது.

27“தேவன் பூமியிலிருந்து தண்ணீரை,
மேலே எடுத்து, அதைப் பனியாகவும்
மழையாகவும் மாற்றுகிறார்.

28ஆகையால் மேகங்கள் தண்ணீரைப்
பொழிகின்றன. மழை பலர் மீது பெய்கிறது.

29தேவன் மேகங்களை எவ்வாறு பரப்பு
கிறார் என்பதையும் வானத்தில் இடிமுழக்கம்
எவ்வாறு ஏற்படுகிறது என்பதையும் ஒரு
வனும் புரிந்துகொள்ள முடியாது.

30பாரும்! தேவன் பூமியின் மீது மின்ன
லைப் பரப்பி, சமுத்திரங்களின் ஆழமான
பகுதிகளை மூடினார்.

31தேசங்களை அடக்கியாள்வதற்கும்
அங்கு மிகுதியான உணவுப் பொருட்களைக்
கொடுப்பதற்கும், தேவன் அவற்றைப் பயன்
படுத்துகிறார்.

32தேவன் அவரது கைகளால் மின்னலைப்
பிடிக்கிறார், அவருக்கு விருப்பமான இடங்
களில் தாக்குமாறு அதற்குக் கட்டளையி
டுகிறார்.

33புயல் வந்துகொண்டிருப்பதை இடி
எச்சரிக்கிறது. அது வந்துகொண்டிருப்பதை
ஆடு மாடுகள் கூட அறிகின்றன” என்றான்.

37 “இடியும், மின்னலும் என்னை
அச்சுறுத்துகின்றன. இதயம் என்
நெஞ்சத்தில் துடிக்கிறது.

2“ஒவ்வொருவரும் செவிகொடுங்கள்!
தேவனுடைய சத்தம் இடியைப்போல முழங்
குகிறது. தேவனுடைய வாயிலிருந்து வரும்
இடியைப்போன்ற சத்தத்திற்குச் செவி
கொடுங்கள்.

3முழுவானத்திற்கும் குறுக்காக மின்னும்
படி, தேவன் அவரது மின்னலை அனுப்பு
கிறார். அது பூமி முழுவதும் ஒளிர்ந்தது.

4மின்னல் ஒளிவீசி மறைந்த பிறகு,
தேவனுடைய முழங்கும் சத்தத்தைக் கேட்க
முடியும். தேவன் அவரது அற்புதமான
சத்தத்தால் முழங்குகிறார்! மின்னல் மின்னும்
போது, தேவனுடைய சத்தம் முழங்குகிறது.

5தேவனுடைய முழங்கும் சத்தம் அற்புத
மானது! நாம் புரிந்துகொள்ள முடியாத,
மேன்மையான காரியங்களை அவர் செய்
கிறார்.

6தேவன் பனியிடம், ‘பூமியின் மேல் பெய்’
என்கிறார். மேலும் தேவன் மழை யிடம்,
‘பூமியின் மேல் பொழி’ என்கிறார்.

7தேவன் உண்டாக்கின எல்லா மனிதர்
களும் அவர் என்ன செய்யமுடியும் என்ப
தை அறியுமாறு தேவன் அதைச் செய்கிறார்.
அது அவரது சான்று.

8மிருகங்கள் அவற்றின் குகைகளுக்குள்
புகுந்து அங்கேயே தங்கும்.

9தெற்கேயிருந்து சூறாவளி வரும்.
வடக்கேயிருந்து குளிர் காற்று வரும்.

10தேவனுடைய மூச்சு பனிக்கட்டியை
உண்டாக்கும், அது சமுத்திரங்களை
உறையச் செய்யும்.

11தேவன் மேகங்களை தண்ணீரினால்
நிரப்புகிறார், அவர் இடிமேகங்களைச் சிதற
டிக்கிறார்.

12பூமியில் எங்கும் சிதறிப்போகும்படி
தேவன் மேகங்களுக்குக் கட்டளையிடுகிறார்.
தேவன் கட்டளையிடுகின்றவற்றை மேகங்
கள் செய்யும்.

19-20 வசனங்கள் எபிரெய மொழியில் புரிந்துக்கொள்ள அரியதாக உள்ளன.

13பெருவெள்ளத்தை வரச்செய்து ஜனங்
களைத் தண்டிக்கவோ, அல்லது வெள்
ளத்தை வருவித்து அவரது அன்பை
வெளிப்படுத்தவோ, தேவன் மேகங்களை
உருவாக்குகிறார்.
14“யோபுவே, ஒரு நிமிடம் நின்று
கவனித்துக்கேள். தேவன் செய்கிற
அற்புதமான காரியங்களைக் குறித்துச் சற்று
நின்று எண்ணிப் பார்.
15யோபுவே, தேவன் எவ்வாறு மேகங்
களை அடக்கியாள்கிறார் என்பது உனக்குத்
தெரியுமா? அவரது மின்னலை எவ்வாறு
தேவன் ஒளிவிட வைக்கிறார் என்பது
உனக்குத் தெரியுமா?
16மேகங்கள் வானில் எவ்வாறு தொங்கு
கின்றன என்பது உனக்குத் தெரியுமா?
தேவன் செய்த அற்புதமான காரியங்களுக்கு
மேகங்கள் ஒரு எடுத்துக்காட்டு மட்டு
மேயாகும்! அவற்றைப் பற்றிய யாவும்
தேவனுக்குத் தெரியும்.
17ஆனால் யோபுவே, உனக்கு இக்காரியங்
கள் தெரியாது. நீ வியர்க்கிறாய் என்பதும்,
உன் ஆடைகள் உடம்பில் ஒட்டிக்கொள்
கின்றன என்பதும், தெற்கிலிருந்து வெப்ப
மான காற்று வீசும்போது, எல்லாம் அசை
யாமல் இருக்கின்றன என்பது மட்டுமே
உனக்குத் தெரியும்.

18யோபுவே, வானைப் பரப்புவதற்கு நீ
தேவனுக்கு உதவமுடியுமா? தேய்த்த பள
பளப்பான கண்ணாடியைப்போல அது
ஒளிரும்படி செய்யக்கூடுமா?
19“யோபுவே, நாங்கள் தேவனுக்கு என்ன
சொல்லவேண்டும் என்று கூறு! எங்
களுக்குச் சரிவரத் தெரியாததால் சொல்வது
குறித்து எண்ண இயலாமலிருக்கிறோம்.
20நான் அவரிடம் பேசவேண்டும் என்று
தேவனிடம் கூறமாட்டேன். அழிவு வேண்
டும் என்று கேட்கமாட்டேன்.
21ஒரு மனிதன் சூரியனை ஏறெடுத்துப்
பார்க்க முடியாது. காற்று மேகங்களை
அடித்துச் சென்றபின் அது வானில் மிகப்
பிரகாசமாக ஒளிதருகிறது.
22தேவனும் அவ்வாறே இருக்கிறார்!
பரிசுத்த மலையிலிருந்து தேவனுடைய
பொன்னான மகிமை பிரகாசிக்கிறது. தேவ
னைச் சுற்றிலும் பிரகாசமான ஒளி இருக்
கிறது.
23சர்வ வல்லமையுள்ள தேவன் மேன்மை
யானவர்! நாம் தேவனைப் புரிந்துகொள்ள
முடியாது! தேவன் மிகுந்த வல்லமை
உள்ளவர். ஆனால் அவர் நமக்கு நல்லவரும்
நியாயமானவரும் ஆவார். தேவன் நம்மைத்
துன்புறுத்த விரும்பமாட்டார்.
24ஆகவே தான் ஜனங்கள் தேவனை
மதிக்கிறார்கள். ஆனால் தங்களை ஞானி
களாக நினைக்கிற அகங்காரம் உள்ளவர்
களைத் தேவன் மதிக்கமாட்டார்” என்றான்.

தேவன் யோபுவிடம் பேசுகிறார்

38 அப்போது கர்த்தர் சூறாவளியி
லிருந்து யோபுவிடம் பேசினார்.
தேவன்:
2“மூடத்தனமானவற்றைக் கூறிக்கொண்
டிருக்கும், இந்த அறியாமையுள்ள மனிதன்
(அஞ்ஞானி) யார்? *
3யோபுவே, நீ இடையைக் கட்டிக்கொள்*
நான் கேட்கப்போகும் கேள்விகளுக்குப் பதில்
சொல்வதற்கு ஆயத்தமாகு.
4“யோபுவே, நான் பூமியை உண்டாக்கின
போது, நீ எங்கே இருந்தாய்? நீ அத்தனை
கெட்டிக்காரனானால், எனக்குப் பதில் கூறு.
5நீ அத்தனை கெட்டிக்காரனானால்,
உலகம் எவ்வளவு பெரிதாக இருக்க
வேண்டுமென யார் முடிவெடுத்தவர்? அளவு
நூலால் யார் உலகை அளந்தார்?
6பூமியின் அஸ்திவாரம் எங்கு நிலைத்
திருக்கிறது? அதன் முதற்கல்லை (கோடிக்
கல்லை) வைத்தவர் யார்?
7காலை நட்சத்திரங்கள் சேர்ந்து பாடின,
அது நிகழ்ந்தபோது தேவதூதர்கள்*
மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தனர்!
8“யோபுவே, கடல் பூமியின் ஆழத்
திலிருந்து பாய்ந்தபோது, கடலைத் தடை
செய்யும் பொருட்டு வாயில்களை அடைத்
தது யார்?
9அப்போது நான் அதனை மேகங்களால்
மூடி, அதனை இருளால் பொதிந்து வைத்
தேன்.
10நான் கடலுக்கு எல்லையை வகுத்து,
அதை அடைத்த வாயிலுக்குப் பின்னே
நிறுத்தினேன்.
11நான் கடலிடம், ‘நீ இதுவரை வரலாம்,
இதற்கு அப்பால் அல்ல, உனது பெருமை
யான அலைகள் இங்கே நின்று விடும்’
என்றேன்.
12“யோபுவே, உன் வாழ்க்கையில் என்
றைக்காவது நீ காலையை ஆரம்பிக்கவோ,
ஒரு நாளைத் தொடங்கவோ கூறமுடியுமா?
13யோபுவே, பூமியைப் பிடித்து, தீயோரை
அவர்கள் மறைவிடங்களிலிருந்து வெளி
வருமாறு உதறிவிட காலையொளிக்கு நீ
கூற முடியுமா?
14மலைகளையும் பள்ளத்தாக்கையும் எளி
தில் காலையொளியில் காணலாம். பக
லொளி பூமிக்கு வரும்போது அங்கியின்
மடிப்புக்களைப்போல இந்த இடங்களின்
அமைப்புக்கள் (வடிவங்கள்) வெளித்தோன்
றும். முத்திரையிடப்பட்ட களிமண்ணைப்
போல அவ்விடங்கள் வடிவங்கொள்ளும்.

மூடத்தனமான … யார்? “அறியாமையுள்ள வார்த்தைகளால் அறிவுரையை மறைக்கும் இம்மனிதன் யார்?”

இடையைக் கட்டிக் கொள் ஒரு வீரனைப்போல் தயாராகு, அதாவது யுத்தத்திற்குத் தயாராகு.

தேவதூதர்கள் “தேவனின் மகன்கள்.”

15 தீயோர் பகலொளியை விரும்பார்கள். பிரகாசமாக அது ஒளிவிடும்போது, அவர்கள் தீயக் காரியங்களைச் செய்யாதபடி தடுக்கும்.

16 "யோபுவே, கடல் புறப்படும் கடலின் ஆழமான பகுதிகளுக்கு நீ எப்போதாவது சென்றிருக்கிறாயா? சமுத்திரத்தின் அடிப் பகுதியில் நீ எப்போதாவது நடந்திருக்கிறாயா?

17 மரித்தோரின் உலகத்திற்கு வழிகாட்டும் வாயிற்கதவுகளை நீ எப்போதாவது பார்த்திருக்கிறாயா? மரணத்தின் இருண்ட இடத்திற்கு வழிகாட்டும் வாயிற்கதவுகளை நீ எப்போதாவது பார்த்திருக்கிறாயா?

18 யோபுவே, பூமி எவ்வளவு பெரியதென்று நீ உண்மையில் அறிந்திருக்கிறாயா? நீ இவற்றை அறிந்திருந்தால், எனக்குக் கூறு.

19 "யோபுவே, ஒளி எங்கிருந்து வருகிறது? எங்கிருந்து இருள் வருகிறது?

20 யோபுவே, ஒளியையும், இருளையும் அவை புறப்படும் இடத்திற்கு நீ திரும்ப கொண்டு செல்ல முடியுமா? அந்த இடத்திற்குப் போகும் வகையை நீ அறிவாயா?

21 யோபுவே, நீ நிச்சயமாக இக்காரியங்களை அறிவாய். நீ வயது முதிர்ந்தவனும் ஞானியுமானவன். நான் அவற்றை உண்டாக்கியபோது நீ உயிரோடிருந்தாய் அல்லவா?*

22 "யோபுவே, பனியையும் கல்மழையையும் வைத்திருக்கும் பண்டசாலைக்குள் நீ எப்போதாவது சென்றிருக்கிறாயா?

23 தொல்லைகள் மிக்க காலங்களுக்காகவும், போரும் யுத்தமும் நிரம்பிய காலங்களுக்காகவும், நான் பனியையும், கல்மழையையும் சேமித்து வைக்கிறேன்.

24 யோபுவே, சூரியன் மேலெழுந்து வருமிடத்திற்கு, அது கிழக்குக் காற்றைப் பூமியெங்கும் வீசச் செய்யுமிடத்திற்கு நீ எப்போதாவது சென்றிருக்கிறாயா?*

25 யோபுவே, மிகுந்த மழைக்காக வானத்தில் பள்ளங்களைத் தோண்டியவர் யார்? இடிமுழக்கத்திற்குப் பாதையை உண்டாக்கியவர் யார்?

26 யோபுவே, ஜனங்கள் வாழாத இடங்களிலும், மழையைப் பெய்யப் பண்ணுகிறவர் யார்?

27 பாழான அந்நிலத்திற்கு மழை மிகுந்த தண்ணீரைக் கொடுக்கிறது, புல் முளைக்க ஆரம்பிக்கிறது.

28 யோபுவே, மழைக்குத் தகப்பன் (தந்தை) உண்டா? பனித்துளிகள் எங்கிருந்து தோன்றுகின்றன?

29 யோபுவே, பனிக்கட்டிக்கு தாய் உண்டா? வானிலிருந்து விழும் உறைபனியைப் பிறப்பிக்கிறவர் யார்?

30 பாறையைப் போல் கடினமாக நீர் உறைகிறது. சமுத்திரத்தின் மேற்பரப்பும் உறைந்து போகிறது!

31 "நட்சத்திர கூட்டங்களை* நீ இணைக்கக் கூடுமா? மிருக சீரிஷத்தின்* கட்டை நீ அவிழ்க்க முடியுமா?

32 யோபுவே, நீ சரியான நேரங்களில் விண்மீன் கூட்டங்களை வெளிக் கொணர முடியுமா? (துருவச்சக்கர நட்சத்திரமும் அதைச் சார்ந்த நட்சத்திரங்களும்) கரடியை* அதன் குட்டிகளோடு நீ வெளிநடத்த இயலுமா?

33 யோபுவே, வானை ஆளுகிற விதிகளை நீ அறிவாயா? பூமியை அவை ஆளும்படிச் செய்ய உன்னால் முடியுமா?

34 "யோபுவே, நீ மேகங்களை உரக்கக் கூப்பிட்டு உன்னை மழையில் மூடும்படி கட்டளையிட முடியுமா?

35 மின்னல்களுக்கு நீ கட்டளை பிறப்பிக்கக் கூடுமா? அவை உன்னிடம் வந்து, 'நாங்கள் இங்கு இருக்கிறோம். ஐயா, உனக்கு என்ன வேண்டும்' எனக் கூறுமா? அவை எங்கெங்குப் போகவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அங்கெல்லாம் அவை செல்லுமா?

36 "யோபுவே, யார் ஜனங்களை ஞானிகளாக்குகிறார்? அவர்களுக்குள்ளே ஆழமாக ஞானத்தை வைப்பவன் யார்?

37 யோபுவே, மேகங்களை எண்ணுமளவிற்கும் அவற்றின் மழையைப் பொழியத் தூண்டும்படியும் ஞானம் படைத்தவன் யார்?

38 அதனால் துகள்கள் சேறாக மாறி, அழுக்குகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்கின்றன.

39 "யோபுவே, நீ சிங்கங்களுக்கு இரை தேடமுடியுமா? அவற்றின் பசித்த குட்டிகளுக்கு நீ உணவுக் கொடுக்கிறாயா?

40 அச்சிங்கங்கள் அவற்றின் குகைகளில் படுத்திருக்கின்றன. அவற்றின் இரையைத் தாக்குவதற்கு அவை புல்லினுள்ளே பதுங்கிக்கொள்கின றன.

41 காக்கைக் குஞ்சுகள் தேவனை நோக்கிக் கத்தும்போதும், உணவின்றி அங்குமிங்கும்

வசனங்கள் 19-21. தேவன் இதை அவ்வாறே பொருள்படும்படி கூறவில்லை. கிண்டல் தொனியில் பேசுகிறார். உண்மையல்லாதனவற்றை உண்மையல்லாதன என அறியும்படியாகப் பேசும் முறை இது.

வசனம் 24 உறை பனி பரவுமிடம் எது? பூமியெங்கும் கிழக்குக் காற்று சிதறும் இடம் எது?

நட்சத்திரக் கூட்டங்கள் புகழ்பெற்ற விண்மீன் கூட்டம். "ஏழு சகோதரிகள்" எனவும் இது அழைக்கப்படும்.

மிருக சீரிஷம் புகழ்பெற்ற விண்மீன் கூட்டம். இது ஒரு வேட்டைக்காரனைப் போலவோ, ஆற்றலுள்ள வீரனைப்போலவோ தோன்றும்.

கரடி புகழ்பெற்ற விண்மீன் கூட்டம். இது கரடியைப்போலத் தோன்றும். 'துருவச் சக்கரம் எனவும்' அழைக்கப்படும். இதனருகே இருக்கும் சிறிய விண்மீன் கூட்டம் ஒரு சிறிய கரடியைப்போலத் தோன்றும்.

அலையும்போதும் யோபுவே, அவற்றிற்கு
உணவு ஊட்டுபவன் யார்? என்றார்.
39 “யோபுவே, மலையாடுகள் எப்போது
பிறக்கின்றன என்பது உனக்குத்
தெரியுமா? பெண்மான் குட்டியை ஈனு
வதைக் கவனித்திருக்கிறாயா?
2 யோபுவே, மலையாடுகளும், பெண்மான்
களும் எத்தனை மாதங்கள் அவற்றின்
குட்டிகளைச் சுமக்க வேண்டுமென்பதை நீ
அறிவாயா? அவை பிறப்பதற்கேற்ற நேர
மெப்போதென அறிவாயா?
3 அம்மிருகங்கள் கீழே படுத்துக்கொள்ளும்,
அவற்றின் பிரசவ வலியை உணரும்போது,
குட்டிகள் பிறந்துவிடும்.
4 அக்குட்டி மிருகங்கள் வயல்களில்
வலிமையாக வளரும். அவை தங்கள் தாய்
விலங்குகளை விட்டுச் செல்லும், பின்பு
அவை திரும்பி வராது.
5 “யோபுவே, காட்டுக் கழுதைகளைச்
சுதந்திரமாக அலைய விட்டவர் யார்?
அவற்றின் கயிறுகளை அறுத்துவிட்டவர்
யார்?
6 பாலைவனம் காட்டுக் கழுதையின்
இருப்பிடமாகும்படி நான் (தேவன்)
செய்தேன். உவர் நிலத்தை அவை வாழு
மிடமாகக் கொடுத்தேன்.
7 காட்டுக் கழுதைகள் இரைச்சலான
ஊர்களை நோக்கி சிரிக்கும் ஒருவனும்
அவற்றை அடக்கியாள முடியாது.
8 காட்டுக் கழுதைகள் மலைகளில் வாழும்.
அவை அவற்றின் மேய்ச்சலிடம். அங்கு
அவை உண்பதற்கு இரைத் தேடும்.
9 “யோபுவே, காட்டுக் காளை உனக்குச்
சேவை புரியச் சம்மதிக்குமா? அது உன்
தொழுவத்தில் இரவில் தங்குமா?
10 யோபுவே, நீ உன் வயல்களை உழு
வதற்குக் காட்டுக் கழுதையின் மீது கயிறு
களைக் கட்ட அவை அனுமதிக்குமா?
11 காட்டுக் காளை மிகவும் பலம்
வாய்ந்தது! உன் வேலைகளைச் செய்ய நீ
அதனை நம்பக்கூடுமா?
12 உன் தானியத்தைச் சேகரித்து உன்
களஞ்சியத்திற்குக்* கொண்டுவரும் என
அதை நம்புவாயா?
13 “தீக்கோழி வியப்புற்று அதன் சிறகு
களை அடிக்கும். ஆனால் தீக்கோழியால்
பறக்க முடியாது, தீக்கோழியின் சிறகுகள்
கொக்கின் சிறகுகளைப் போன்றவை அல்ல.
14 தீக்கோழி நிலத்தில் அதன் முட்டைகளை
இடும், அவை மணலினுள் வெப்பமுறும்.
15 யாரேனும் அதன் முட்டைகளின்மேல்
நடக்கக்கூடும் என்பதையோ, சில காட்டு
விலங்குகள் அவற்றை உடைக்கக்கூடும்
என்பதையோ தீக்கோழி மறந்து விடுகிறது.
16 தீக்கோழி அதன் குஞ்சுகளை விட்டுச்
செல்கிறது. அவை தனக்குரியனவல்ல
என்பதைப்போல் அவற்றைக் கருதுகிறது
(நடத்துகிறது). அதன் குஞ்சுகள் மரித்துப்
போனால், அது வருந்துவதில்லை. அதன்
உழைப்பு வீணானதுதான்.
17 ஏனெனில், நான் (தேவன்) தீக்கோழிக்கு
ஞானத்தைக் கொடுக்கவில்லை. தீக்கோழி
முட்டாள்தனமானது, நான் அதனை
அவ்வாறு படைத்திருக்கிறேன்.
18 ஆனால் தீக்கோழி ஓடுவதற்கென எழுந்
திருக்கும்போது, அது குதிரையையும் அதில்
சவாரி செய்பவனையும் பார்த்துச் சிரிக்கும்.
ஏனெனில் எந்தக் குதிரையையும் விட
அதனால் வேகமாக ஓட இயலும்.
19 “யோபுவே, நீ குதிரைக்கு அதன்
வலிமையைக் கொடுத்தாயா? அதன் பிடரி
யில் பிடரிமயிரை* வளரச் செய்தாயா?
20 யோபுவே, நீ குதிரையை ஒரு வெட்டுக்
கிளியைப்போல, வெகுதூரம் தாண்ட
வைப்பாயா? குதிரை உரக்க கனைக்கிறது,*
அது ஜனங்களைப் பயப்படுத்துகிறது.
21 குதிரை அதன் மிகுந்த வலிமையால்
சந்தோஷப்படும். அது பூமியைத் தன்
பாதங்களால் கீறி, விரைந்து போருக்கென
ஓடி நுழையும்.
22 அச்சத்தைப் பார்த்துக் குதிரை
நகைக்கும் அது அஞ்சுவதில்லை! அது
யுத்தத்திற்கஞ்சி (யுத்தத்திலிருந்து) ஓடு
வதில்லை.
23 குதிரையின் புறத்தே வீரனின் அம்பறாத்
தூணி* அசையும். அதனை சவாரிச் செய்
பவன் ஏந்தும் ஈட்டியும் போர்க்கருவிகளும்
சூரியனின் ஒளியில் பிரகாசிக்கும்.
24 குதிரை மிகவும் உணர்ச்சி வசப்
படுகிறது! அது பூமியில் மிக விரைந்
தோடுகிறது.* எக்காள சத்தத்தைக் குதிரை
கேட்கும்போது அதனால் அமைதியாக
இருக்க இயலாது.
25 எக்காளம் ஒலிக்கும்போது, குதிரை
ஆர்ப்பரிக்கும். அது யுத்தத்தைத் தூரத்
திலேயே நுகரும்! அது அதிகாரிகளின்
கட்டளைகளையும் யுத்தத்தின் பிற ஒலிகளை
யும் கேட்கும்.
26 “யோபுவே, ராஜாளி அதன் செட்டை
களை விரித்துத் தெற்கு* நோக்கிப் பறக்க
நீ கற்பித்தாயா?
27 யோபுவே, நீ தான் கழுகிடம் உயரே
வானத்தில் பறக்கச் சொன்னாயா? மலை
களின் உயரமான இடங்களில் அதன் கூட்
டைக் கட்டச் சொன்னாயா?

களஞ்சியம் தானியத்தை அடித்து அல்லது மிதித்து உமியைப் போக்கிச் சேர்க்கும் இடம்.

பிடரிமயிர் இது குதிரையின் கழுத்துப் பகுதியில் இருக்கும்.

கனைக்கிறது இது குதிரை ஏற்படுத்தும் சத்தம்.

அம்பறாத்தூணி அம்புகள் வைக்கப்படும் பை.

அது … ஓடுகிறது “பூமியை விழுங்குகிறது.”

தெற்கு தேமான்.

28கழுகு மலை முகப்பில் வாழ்கிறது. மலைச்சிகரமே கழுகின் கோட்டை.*

29அதன் உயரமான கோட்டையிலிருந்து கழுகு அதன் இரையை நோக்கும். மிகுந்த தூரத்திலுள்ள இரையையும் கழுகால் பார்க்க முடியும்.

30பிணங்கள் இருக்குமிடத்தில் கழுகுகள் கூடும். அதன் குஞ்சுகள் இரத்தத்தைக் குடிக்கும்” என்றான்.

40 கர்த்தர் யோபுவை நோக்கி:
2“யோபுவே, நீ சர்வ வல்லமையுள்ள தேவனோடு விவாதித்தாய். தவறிழைத்த குற்றமுடையவனாக என்னை நீ நியாயந் தீர்த்தாய்! நீ தவறு செய்தாயென இப்போது நீ ஒப்புக் கொள்வாயா? நீ எனக்குப் பதில் கூறுவாயா?” என்றார்.

3அப்போது யோபு, தேவனுக்குப் பதிலுரைத்தான். அவன்:

4“நான் பேசுவதற்கும் தகுதியற்றவன்!* நான் உம்மிடம் என்ன கூறமுடியும்? நான் உமக்கு பதில் கூறமுடியாது! நான் என் கைகளை வாயின் மீது வைப்பேன்.

5நான் ஒரு முறை பேசினேன், ஆனால் நான் மீண்டும் பேசமாட்டேன். நான் இரு முறை பேசினேன், ஆனால், இனிமேல் எதுவும் கூறமாட்டேன்” என்றான்.

6அப்போது புயலிலிருந்து கர்த்தர் மீண்டும் யோபுவிடம் பேசினார். கர்த்தர்,

7“யோபுவே, உன் இடையைக் கட்டிக் கொண்டு நான் உன்னிடம் கேட்கப்போகும் கேள்விகளுக்குப் பதில் கூறு,

8“யோபுவே, நான் நியாயமற்றவனென்று நீ நினைக்கிறாயா? என்னை தவறிழைக்கும் குற்றவாளியாகக் கூறுவதால், நீ களங்கமற்றவனெனக் காட்ட நினைக்கிறாய்!

9யோபுவே, உன் கரங்கள் தேவனுடைய கரங்களைப்போன்று வலிமையுடையனவா? இடிபோல முழங்க வல்ல தேவனுடைய குரலைப்போன்ற குரல் உனக்கு உள்ளதா?

10நீ தேவனைப் போலிருந்தால், பெருமையடைந்து உன்னை நீயே மகிமைப்படுத்திக் கொள்ளமுடியும். நீ தேவனைப் போலிருந்தால், ஆடையைப் போன்று மகிமையையும், மேன்மையையும் நீ உடுத்திக்கொள்ள முடியும்.

11நீ தேவனைப் போலிருந்தால், உன் கோபத்தை வெளிப்படுத்தி அகங்காரமுள்ள ஜனங்களைத் தண்டிக்க முடியும். அந்த அகங்காரமுள்ள ஜனங்களைத் தாழ்மையுள்ளோராக்க முடியும்.

12ஆம், யோபுவே, அந்த அகங்காரம் நிரம்பிய ஜனங்களைப் பார், அவர்களைத் தாழ்மையுள்ளோராக்கு. தீயோர் நிற்குமிடத்திலேயே அவர்களை நசுக்கிவிடு.

13அகங்காரமுள்ள ஜனங்கள் எல்லோரையும் மண்ணுக்குள் புதைத்துவிடு. அவர்கள் உடலை துணியால் சுற்றி அவர்களின் கல்லறைக்குள் வைத்துவிடு.

14யோபுவே, உன்னால் இக்காரியங்களையெல்லாம் செய்ய முடிந்தால், அப்போது நான் கூட உன்னை வாழ்த்துவேன். உன் சொந்த ஆற்றலால் உன்னை நீ காப்பாற்றிக்கொள்ளக்கூடும் என்பதை நான் ஒப்புக்கொள்வேன்.

15“யோபுவே, பிகெமோத்தை நீ கவனித்துப் பார். நான் (தேவன்) பிகெமோத்தை* உண்டாக்கினேன், உன்னையும் உண்டாக்கினேன். பிகெமோத்தை பசுவைப்போல, புல்லைத் தின்கிறது.

16பிகெமோத்தின் உடம்பு மிகுந்த வல்லமை பொருந்தியது. அதன் வயிற்றின் தசைகள் வல்லமை மிக்கவை.

17பிகெமோத்தின் வால் கேதுரு மரத்தைப் போல் ஆற்றலோடு காணப்படுகிறது. அதன் கால் தசைகள் மிகுந்த பலமுள்ளவை.

18பிகெமோத்தின் எலும்புகள் வெண்கலம் போன்று பலமுள்ளவை. அதன் கால்கள் இரும்புக் கம்பிகளைப் போன்றவை.

19நான் (தேவன்) உண்டாக்கிய மிருகங்களுள் பிகெமோத் மிகவும் வியக்கத்தக்கது. ஆனால் நான் அதை வெல்ல (தோற்கடிக்க) முடியும்.

20காட்டு மிருகங்கள் விளையாடும் மலைகளில் வளரும் புல்லைப் பிகெமோத் தின்கிறது.

21தாமரைக் கொடிகளின்* கீழே பிகெமோத் படுத்திருக்கிறது. அது உளையிலுள்ள (சேற்றிலுள்ள) நாணல்களின் கீழ் மறைந்துக் கொள்ளும்.

22தாமரைக் கொடிகள் அவற்றின் நிழலில் பிகெமோத்தை மறைக்கும். நதியருகே வளரும் அலரி மரங்களின் கீழே அது வாழும்.

23நதியில் வெள்ளம் பெருக்கெடுத்தால், பிகெமோத் ஓடிப்போய் விடாது. யோர்தான் நதியின் தண்ணீர் அதன் முகத்தில் அடித்தாலும் அது அஞ்சாது.

24பிகெமோத்தின் கண்களை ஒருவனும் குருடாக்கி அதனை வலையில் அகப்படுத்தவும் முடியாது.

41 “யோபுவே, உன்னால் லிவியாதானை* ஒரு தூண்டிலினால் பிடிக்க

கோட்டை பாதுகாப்பிற்கான உயர்ந்த, வலிய சுவர்களை உடைய கட்டிடம் அல்லது நகரம்.

தகுதியற்றவன் முக்கியமற்றவன்.

பிகெமோத் இது என்ன விலங்கு என்று உறுதியாக நமக்குத்தெரியாது. இது காண்டா மிருகமாகவே அல்லது யானையாகவோ இருக்கலாம்.

தாமரைக் கொடி ஒருவகை மரம். அதன் இலைகள் மிகுதியான நிழலைக் கொடுக்கின்றன.

லிவியாதான் இது என்ன விலங்கு என்று நமக்கு உறுதியாக தெரியாது. இது ஒரு முதலையாகவே அல்லது ஒரு ராட்சச கடல் விலங்காகவோ இருக்கலாம்.

முடியுமா? அதன் நாவை உன்னால் ஒரு
கயிற்றினால் கட்டமுடியுமா?
2யோபுவே, லிவியாதானின் மூக்கில் ஒரு
கயிற்றை நுழைக்கமுடியுமா? அல்லது, அதன்
தாடையில் ஒரு ஆணியைச் செருகமுடியுமா?
3யோபுவே, அதனை விடுதலைச் செய்யு
மாறு லிவியாதான் உன்னை இரந்து
வேண்டுமா? மென்மையான சொற்களால்
அது உன்னோடு பேசுமா?
4யோபுவே, லிவியாதான் உன்னோடு ஒரு
ஒப்பந்தம் செய்துகொண்டு என்றென்றும்
உனக்குச் சேவை புரிய வாக்குறுதி தருமா?
5யோபுவே, நீ லிவியாதானோடு ஒரு
பறவையிடம் விளையாடுவதைப்போன்று
விளையாடுவாயா? உன் பணிப்பெண்கள்
அதனோடு விளையாடுமாறு அதனை ஒரு
கயிற்றால் கட்டுவாயா?
6யோபுவே, மீன் பிடிப்போர் உன்னிட
மிருந்து லிவியாதானை வாங்க முயல்வார்
களா? அவர்கள் அதைத் துண்டுகளாக்கி,
வியாபாரிகளுக்கு அதை விற்பார்களா?
7யோபுவே, நீ லிவியாதானின் தோலிலோ
அல்லது தலையிலோ ஈட்டியை எறிய (வீச)
முடியுமா?
8யோபுவே, நீ லிவியாதானைத் தாக்க
ஒருமுறை முயன்றால், பின்பு ஒருபோதும்
அதனைச் செய்யமாட்டாய்! எத்தகைய
யுத்தம் நடக்கும் என்பதைச் சற்றே
யோசித்துப்பார்!
9நீ லிவியாதானைத் தோற்கடிக்க முடியு
மென எண்ணினால் அதை மறந்து விடு!
எந்த நம்பிக்கையும் இல்லை! (நம்பிக்கை
யற்றுப் போவாய்)! அதைப் பார்த்தாலே
பீதி (அச்சம்) விளையும்!
10அதனை எழுப்பிக் கோபமுறுத்த எந்த
மனிதனுக்கும் தைரியம் (துணிவு) இல்லை.
ஒருவனும் என்னை எதிர்த்து நிற்க
முடியாது!*
11நான் (தேவன்) ஒருவனுக்கும் கடமைப்
பட்டவன் அல்லன். பரலோகத்தின் கீழ்
உள்ளவை அனைத்தும் எனக்குரியன.*
12யோபுவே, லிவியாதானின் கால்களைப்
பற்றியும் அதன் வலிமை, அழகிய வடிவம்
ஆகியவற்றைப்பற்றியும் நான் உனக்குக்
கூறுவேன்.
13ஒருவனும் அதன் தோலைக் குத்திப்
பிளக்கமுடியாது. அதன் தோல் ஒரு கேடயத்
தைப் போன்றது!*
14லிவியாதானின் தாடையைத் திறக்கு
மாறு செய்ய ஒருவனும் அதனை வற்புறுத்த
முடியாது. அதன் வாயிலுள்ள பற்கள்
ஜனங்களைப் பயமுறுத்தும்.
15லிவியாதானின் முதுகில் இறுக்கமாக
இணைக்கப்பட்டுள்ள கேடய வரிசைகள்
காணப்படும்.
16அக்கேடயங்கள் காற்றும் நுழைய
முடியாதபடி. இறுகிப் பிணைந்திருக்கும்,
17கேடயங்கள் ஒன்றோடொன்று இணைந்
திருக்கும். அவை பிரிக்க முடியாதபடி
ஒன்றோடொன்று இறுக்கமாக இணைக்கப்
பட்டிருக்கும்.
18லிவியாதான் தும்மும்போது, மின்னல்
மின்னுவதைப் போன்றிருக்கும். அதன் கண்
கள் உதயகால ஒளிபோல் பிரகாசிக்கும்.
19அதன் வாயிலிருந்து தீப்பந்தங்கள் வெளி
வரும். நெருப்புப் பொறிகள் வெளிப்படும்.
20கொதிக்கும் பானையின் அடியில்
எரியும் புதரைப்போல் லிவியாதானின்
மூக்கிலிருந்து புகை கிளம்பும்.
21லிவியாதானின் மூச்சு நிலக்கரியை
எரிக்கும், அதன் வாயிலிருந்து நெருப்பு
எழும்பும்.
22லிவியாதானின் கழுத்து மிகுந்த வல்ல
மை கொண்டது. ஜனங்கள் பயந்து அதனிட,
மிருந்து ஓடிப்போகிறார்கள்.
23அதன் தோலில் மிருதுவான பகுதி
கிடையாது. அது இரும்பைப்போல கடின
மானது.
24லிவியாதானின் இருதயம் பாறையைப்
போன்றது. அதற்கு அச்சம் கிடையாது.
(அது அஞ்சுவதில்லை). அது எந்திரத்தின்
அடிக்கல்லைப் போல் கடினமாயிருக்கும்.
25லிவியாதான் எழுகையில் வலியோர்
அஞ்சுவர். லிவியாதான் வாலை வீசும்போது
அவர்கள் ஓடிவிடுவர்.

26வாட்கள், ஈட்டிகள், மற்றும் வல்லயம்
லிவியாதானைத்தாக்கும்.ஆனால் அவையே
எகிறி விழும். அக்கருவிகள் அதைத் காயப்
படுத்துவதேயில்லை!
27லிவியாதான் இரும்பைப்புல்லைப்போல்
உடைக்கும். உளுத்துப்போன (அரித்துப்
போன) மரத்தைப்போன்று அது வெண்
கலத்தை உடைக்கும்.
28அம்புகள் லிவியாதானை ஓடச்
செய்யாது, உலர்ந்த புல்லாய் பாறைகள்
அதனின்று விலகி வீழும்.
29பெருந்தடிகள் லிவியாதானைத் தாக்கும்
போது, அவற்றை அது புல்லாய் உணரும்.
மனிதர் அதன் மீது ஈட்டிகளை எறியும்
போது, அது சிரிக்கும்.
30கடினமான, கூரிய, உடைந்த, மட்பாண்
டத்தின் துண்டுகளைப்போல், லிவியா
தானின் உடம்பின் அடியிலுள்ள தோல்
இருக்கும். தாற்றுக்கோலைப் போன்று அது
சேற்றின் மீது அடையாளமிட்டுச் செல்லும்.
31கொதிக்கும் பானையைப் போன்று
லிவியாதான் தண்ணீரைக் கலக்குகிறது.

ஒருவனும் … முடியாது ஒருவனும் எழுந்து நின்று அதனோடு போரிட முடியாது.

நான் … உரியன "லிவியாதானை நெருங்கிய ஒருவனும் உயிரோடு மீண்டதில்லை -விண்ணின் கீழ் உள்ள ஒருவன் கூட."

அதன் மேல் … போன்றது "கடிவாளத்தால் ஒருவனும் அதனை நெருங்க முடியாது.

பானையின் கொதிக்கும் எண்ணெயைப்
போன்று அது குமிழிகளை எழுப்பும்.
32லிவியாதான் நீந்தும்போது, அதன்
பின்னே ஒரு பாதையை விட்டுச்செல்லும்.
அது தண்ணீரைக் கலக்கும், அதன் பின்னே
வெண்மையான நுரையைத் தள்ளிச்
செல்லும்.
33லிவியாதானைப் போன்று உலகில்
வேறெந்த மிருகமும் இல்லை. அச்சமின்றி
படைக்கப்பட்ட மிருகம் அது.
34கர்வம் மிக்க மிருகங்களையும் லிவியா
தான் நகைப்போடு பார்க்கும். அது எல்லா
காட்டுமிருகங்களுக்கும் அரசன். கர்த்தராகிய
நான் லிவியாதானைப் படைத்தேன்!”
என்றார்.

யோபு கர்த்தருக்குப் பதில் கூறுகிறான்

42 அப்போது யோபு கர்த்தருக்குப்
பதிலளித்தான். யோபு,
2“கர்த்தாவே! நீர் எல்லாவற்றையும்
செய்ய வல்லவர் என்பதை நான் அறிவேன்.
நீர் திட்டமிடுகிறீர், எதனாலும் உமது
திட்டங்களை மாற்றவோ, தடுக்கவோ முடி
வதில்லை.
3கர்த்தாவே, நீர் இக்கேள்வியைக் கேட்டீர்:
‘இம்மூடத்தனமான காரியங்களை சொல்லிக்
கொண்டிருக்கும் இந்த அஞ்ஞானி யார்?’
“கர்த்தாவே,நான் புரிந்துகொள்ளாதவற்றைக்
குறித்துப் பேசினேன். என்னால் புரிந்து
கொள்ள முடியாத மிகுந்த வியக்கத்தக்க
காரியங்களைப் பற்றிப் பேசினேன்.
4“கர்த்தாவே, நீர் என்னிடம், ‘யோபுவே
கவனி, நான் உன்னோடு பேசுவேன், நான்
உன்னிடம் கேள்விகளைக் கேட்பேன், நீ
எனக்குப் பதில் கூறுவாய்’ என்றீர்.
5கர்த்தாவே, முன்பு, நான் உம்மைக்
குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்
போது என் சொந்தக் கண்களாலேயே
உம்மைப் பார்க்கிறேன்!
6கர்த்தாவே, நான் என்னைக் குறித்து
வெட்கமுறுகிறேன். கர்த்தாவே, நான்
மன்னிப்புக் கேட்கிறேன். நான் தூசியிலும்
சாம்பலிலும் உட்கார்ந்து கொண்டே,* என்
இருதயத்தையும் என் வாழ்க்கையையும்
மாற்றிக்கொள்ள உறுதியளிக்கிறேன்” என்
றான்.

கர்த்தர் யோபுவின் செல்வத்தை மீண்டும் அளிக்கிறார்

7கர்த்தர் யோபுவிடம் பேசிமுடித்த பின்பு,
அவர் தேமானிலிருந்து வந்த எலிப்பாசிடம்
பேசினார். கர்த்தர் எலிப்பாசை நோக்கி,
“நான் உன்னிடமும் உனது இரண்டு நண்பர்
களிடமும் கோபமாயிருக்கிறேன். ஏனெனில்,
நீங்கள் என்னைப்பற்றிய சரியான கருத்துக்
களைக் கூறவில்லை. யோபுவே என்னைப்
பற்றிய சரியான செய்திகளைச் சொன்னான்.
ஆனால் யோபு எனது தாசன். யோபு
என்னைப்பற்றிய சரியான செய்திகளைச்
சொன்னான். 8எனவே இப்போது எலிப்
பாசே, ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்
கடாக்களையும் கொண்டு வா. அவற்றை
எனது தாசன் யோபுவிடம் கொண்டு
செல். அவற்றைக் கொன்று, உனக்காக
தகனபலியாகச் செலுத்து. என் தாசன்
யோபு உனக்காக ஜெபம் செய்வான். நான்
அவன் ஜெபத்திற்குப் பதிலளிப்பேன். உனக்
குரிய தண்டனையை அப்போது நான்
உனக்கு அளிக்கமாட்டேன். நீ மிகுந்த
மூடனாக இருந்ததால் நீ தண்டிக்கப்பட
வேண்டும். நீ என்னைப்பற்றிய சரியான
தகவலைக் கூறவில்லை. ஆனால் என்
தாசனாகிய (பணியாளாகிய) யோபு
என்னைப்பற்றிய சரியான கருத்துக்களைக்
கூறினான்.” என்றார்.
9எனவே தேமானின் எலிப்பாசும், சூகிய
னான பில்தாதும், நாகமாவின் சோப்பாரும்
கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அப்போது
கர்த்தர் யோபுவின் ஜெபத்திற்குப் பதிலளித்
தார்!
10யோபு அவனது நண்பர்களுக்காக
ஜெபம் செய்தான். தேவன் யோபுவை
மீண்டும் வெற்றிபெறச் செய்தார். கர்த்தர்
யோபுவுக்கு முன்பிருந்ததைக் காட்டிலும்
இரண்டு மடங்காக எல்லாவற்றையும்
கொடுத்தார். 11யோபுவின் எல்லா சகோதரர்
களும், சகோதரிகளும் அவனை அறிந்த
அனைத்து ஜனங்களும் யோபுவின் வீட்டிற்கு
வந்தார்கள். அவர்கள் யோபுவோடு கூட
ஒரு பெரிய விருந்துணவை உட்கொண்
டார்கள். அவர்கள் யோபுவுக்கு ஆறுதல்
கூறினார்கள். கர்த்தர் யோபுவுக்கு மிகுந்த
தொல்லைகளைக் கொடுத்ததற்காக அவர்கள்
வருந்தினார்கள். ஒவ்வொருவரும் ஒரு
வெள்ளிக்காசும்*, ஒரு பொன் மோதிரமும்
யோபுவுக்குக் கொடுத்தார்கள்.
12யோபுவின் வாழ்க்கையின் முதல்
பகுதியைக் காட்டிலும் இரண்டாம் பகுதி
யைக் கர்த்தர் ஆசீர்வதித்தார்! யோபுவுக்கு
14,000 ஆடுகளும், 6,000 ஒட்டகங்களும், 2,000
பசுக்களும், 1,000 பெண் கழுதைகளும்
சொந்தமாக இருந்தன. 13யோபுவுக்கு ஏழு
மகன்களும் மூன்று மகள்களும் இருந்தனர்.
14யோபு, முதல் மகளுக்கு எமீமாள் என்று
பேரிட்டான். யோபு, இரண்டாவது
மகளுக்குக் கெத்சீயாள் என்று பெய

நான் … கொண்டே தங்கள் மிகுந்த துக்கத்தை வெளிப்படுத்தும் பொருட்டு ஜனங்கள் துகளிலும் சாம்பலிலும் உட்கார்ந்திருப்பர்.

வெள்ளிக்காசு “கேஷிதா” தந்தையர்களின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயம். பார்க்க: ஆதி. 33:19, யோசுவா 24:32.

ரிட்டான். மூன்றாவது மகளுக்குக் கேரே
னாப்புக் என்று பெயர் கொடுத்தான்.
15தேசத்தில் யோபுவின் மகள்களே மிகுந்த
அழகிகளாக இருந்தார்கள்! யோபு, அவனது
மகள்களுக்கும் சொத்திலுள்ள பாகத்தைக்
கொடுத்தான். அவர்களின் சகோதரர்களைப்
போலவே சொத்தில் அவர்களும் பங்கைப்
பெற்றார்கள்.

sw16அவ்வாறு யோபு இன்னும் 140 ஆண்
டுகள் வாழ்ந்தான். அவனது பிள்ளை
களையும், பேரப்பிள்ளைகளையும், பேரர்
களின் பிள்ளைகளையும், பேரர்களின் பேரர்
களையும் பார்க்கும்படி அவன் வாழ்ந்தான்.
17பின்பு யோபு மரித்தான். யோபு ஒரு
நல்ல வாழ்க்கையை வாழ்ந்தான். அவன்
மிகவும் முதிர்ந்தவனாகும்வரை வாழ்ந்தான்.

License Agreement for Bible Texts

World Bible Translation Center
Last Updated: September 21, 2006

Copyright © 2006 by World Bible Translation Center
All rights reserved.

These Scriptures:
- Are copyrighted by World Bible Translation Center.
- Are not public domain.
- May not be altered or modified in any form.
- May not be sold or offered for sale in any form.
- May not be used for commercial purposes (including, but not limited to, use in advertising or Web banners used for the purpose of selling online add space).
- May be distributed without modification in electronic form for non-commercial use. However, they may not be hosted on any kind of server (including a Web or ftp server) without written permission. A copy of this license (without modification) must also be included.
- May be quoted for any purpose, up to 1,000 verses, without written permission. However, the extent of quotation must not comprise a complete book nor should it amount to more than 50% of the work in which it is quoted. A copyright notice must appear on the title or copyright page using this pattern: "Taken from the HOLY BIBLE: EASY-TO-READ VERSION™ © 2006 by World Bible Translation Center, Inc. and used by permission." If the text quoted is from one of WBTC's non-English versions, the printed title of the actual text quoted will be substituted for "HOLY BIBLE: EASY-TO-READ VERSION™." The copyright notice must appear in English or be translated into another language. When quotations from WBTC's text are used in non-saleable media, such as church bulletins, orders of service, posters, transparencies or similar media, a complete copyright notice is not required, but the initials of the version (such as "ERV" for the Easy-to-Read Version™ in English) must appear at the end of each quotation.

Any use of these Scriptures other than those listed above is prohibited. For additional rights and permission for usage, such as the use of WBTC's text on a Web site, or for clarification of any of the above, please contact World Bible Translation Center in writing or by email at distribution@wbtc.com.

World Bible Translation Center
P.O. Box 820648
Fort Worth, Texas 76182, USA
Telephone: 1-817-595-1664
Toll-Free in US: 1-888-54-BIBLE
E-mail: info@wbtc.com

WBTC's web site – World Bible Translation Center's web site: http://www.wbtc.org

Order online – To order a copy of our texts online, go to: http://www.wbtc.org

Current license agreement – *This license is subject to change without notice. The current license can be found at:* http://www.wbtc.org/downloads/biblelicense.htm

Trouble viewing this file – If the text in this document does not display correctly, use Adobe Acrobat Reader 5.0 or higher. Download Adobe Acrobat Reader from: http://www.adobe.com/products/acrobat/readstep2.html

Viewing Chinese or Korean PDFs – To view the Chinese or Korean PDFs, it may be necessary to download the Chinese Simplified or Korean font pack from Adobe. Download the font packs from: http://www.adobe.com/products/acrobat/acrrasianfontpack.html